28°c
32 c
26 c
தெளிவான காலநிலை காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 | கதிர்: 185 | வள்ளுவர் ஆண்டு: 2045
வைகாசி 16, வெள்ளி 30.05.2014

# மோடி அரசுடன் கைகோர்த்து தமிழர் தீர்வுக்கு உதவுங்கள்

## தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு இரா.சம்பந்தன் கடிதம்

யாழ்ப்பாணம், மே 30

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் கௌரவமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு இந்தியாவின் பங்களிப்பைப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியுள்ளோம். அதனை எட்டுவதற்கு தங்களின் முழு ஆதரவு தொடர்வது அவசியம். அதைத் தங்களிடம் வேண்டி நிற்கின்றோம் - இவ்வாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

அண்மையில் நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றியீட்டியுள்ளார் செல்வி ஜெயலலிதா. அவரின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்தும், இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்புகள் குறித்து விளக்கமளித்தும் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் உங்களுக்குக் கிடைத்த பெரு வெற்றிக்கு இலங்கையின் தமிழ் மக்களின் சார்பில் மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம். தமிழ்நாட்டில் உள்ள 39 ஆசனங்களில் 37 ஆசனங்களை வெற்றி கொண்டதன் மூலம், தற்போதைய மற்றும் முன்னைய ஆளும் கட்சிகளுக்கு அடுத்ததாக நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக தேசிய ரீதியில் நீங்கள் மிளிர்கின்றீர்கள். இந்த வியப்புக்குரிய பெறுபேறு உங்களின் செல்வாக்கை வெளிப்படுத்தவல்ல நல்ல குறியீடு என்பதும் உண்மையே. தங்களின் பன்முகப்படுத்தப்பட்ட பொறுப்புக்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தங்களுக்கும் தங்களின் அரசுக்கும் எங்களது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

நெருங்கிச்செயற்பட எதிர் பார்ப்பு

இலங்கையில் தமிழர்களின்



1983 ஆம் ஆண்டின் தமிழர் எதிர்ப்பு படுகொலைகளின் தொடர்ச்சியாக, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க ஓர் இறுதித் தீர்வைக் கொண்டு வருவதற்காக இந்தியா எடுத்த நல்முயற்சிகளை இலங்கை இணங்கி ஏற்றுக்கொண்டிருந்தது.

21ஆம் பக்கம் பார்க்க

## இந்தியா எது கூறினாலும் தெரிவுக் குழு மூலமே தீர்வு

### முடிவில் மாற்றமில்லை என்கிறார் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, மே 30

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் இந்தியா எத்தகைய கருத்துகளை முன்வைத்தாலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாகவே இறுதிமுடிவு எடுக்கப்படும் என்று இலங்கை அரசு நேற்று அறிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாடு அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

அதன்போது, "அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத் துமாறு இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?" என்று எழுப்பப்பட்ட கேள்விக் குப் பதிலளிக்கையிலேயே சபை முதல் வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழாவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும்

21ஆம் பக்கம் பார்க்க

## மலேசியாவின் செயற்பாட்டுக்கு ஐ.நா. சபை கண்டனம்

கொழும்பு, மே 30

மலேசியாவிலிருந்து அண்மையில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டமை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதுடன், மலேசிய அரசின் செயற்பாட்டுக்குக் கண்டனமும் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீள ஒருங்கிணைப்பதற்கு முயற்சித்ததாக குற்றம் சுமத்தி மூன்று இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை மலேசியா அண்மையில் இலங்கைக்கு நாடு கடத்தியிருந்தது. பரப்புரைப் பணிகளுக்காக குறித்த சந்தேக நபர்கள் நிதி திரட்டினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரித்துள்ள ஐ.நா. சபை அகதிகள் அமைப்பின் நிர்வாகி யந்தி இஸ்மாயில்,

"கைதான 3 பேரில் 2 பேருக்கு

21ஆம் பக்கம் பார்க்க

## மோடி - கூட்டமைப்பு சந்திப்பு உடனடியாகச் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், மே. 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இந்தியப் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு தற்போதைக்கு சாத்தியமில்லை என்றும் அடுத்த மாத இறுதிப் பகுதியில் அல்லது ஜூலை மாதத்தின் நடுப்பகுதியிலேயே இது சாத்தியமாகும் என்றும் இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுள்ள நிலையில் அவரை உடனடியாகச் சந்திப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விருப்பம் தெரிவித்திருக்கும் நிலையிலேயே இராஜதந்திர வட்டாரங்கள் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளன.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி கடந்த 26 ஆம் திகதி பதவியேற்றிருந்தார். புதிய பிரதமரின் பதவியேற்பு விழாவுக்கு சார்க் நாட்டுத் தலைவர்கள் பங்கெடுத்திருந்தனர். அதனடிப்படையில் பங்கெடுத்திருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர

21ஆம் பக்கம் பார்க்க

## ஊடகவியலாளர்களுக்கு கட்டுப்பாடுகள் வேண்டாம்

### வடக்கு மாகாண முதலமைச்சரிடம் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 30

ஊடகவியலாளர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டாம். அவர்கள் சுயமாக செய்தி சேகரிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சரைக் கோரியுள்ளது இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்.

ஊடக்வியலாளர்கள் செய்திகளைச் சேகரிப்பதற்கு தமது அலுவலகத்துக்கு நேரில் வரத் தேவையில்லை என்றும், செய்திகள் அனைத்தும் குறித்த செய்தி நிறுவனங்களின் ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்என்றும்வடக்குமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அதுகுறித்து இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் கே.ஜெயேந்திரன் விடுத்துள்ள

21ஆம் பக்கம் பார்க்க

அது ஒரு கெட்ட கனவு
பக்கம் 12

## முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவம் குடும்ப பதிவு

### அங்குள்ள மக்கள் பெரும் அச்சத்தில்

யாழ்ப்பாணம், மே 30

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரக் கிராமங்களில் கடந்த ஒரு வார காலமாக இராணுவத்தினர் சீருடையுடன் சென்று குடும்பப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கிராம சேவையாளர்களின்றி நேரடியாகச் செல்லும் இராணுவத்தினர் இந்தப் பதிவு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்திற்கு பெண்களை இணைக்கும் நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்

21ஆம் பக்கம் பார்க்க

## மொத்த தேசிய மீன் உற்பத்தியில் யாழ். மாவட்டம் பின்தங்கியது

யாழ்ப்பாணம், மே. 30

இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் யாழ்.மாவட்டத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு 7.8 வீதமாக இருந்த நிலையில், கடந்த ஆண்டு 6.8 வீதமாக குறைவடைந்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் மீன்பிடி அதிகரித்துள்ளது எனினும், தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு குறைவடைந்துள்ளது.

இலங்கையின் தேசிய மீன் உற்பத்தியில் யாழ்.மாவட்டம் மூன்றிலொரு பங்கு உற்பத்தியை 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பங்களித்திருந்தது. இதன் பின்னர் ஏற்பட்ட போர் நடவடிக்கைகள் காரணமாக இந்த உற்பத்தி பெருமளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.

2010 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்த மீன்பிடி 332 ஆயிரத்து 260 மெற்றிக் தொன்னாக இருந்த போது யாழ்.

21ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவின் செயற்பாடு தொடர்பில் இலங்கை அரசு கடும் அதிருப்தி

### புலி உறுப்பினர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குகிறதாம்

கொழும்பு, மே 30

ஐக்கிய நாடுகள் அமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை அரசு, ஐ.நா.அமைப்பின் அந்த நடவடிக்கையைக் கடுமையாகக் கண்டித்துமுள்ளது.

அண்மையில் மலேசியாவில் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட மூன்று விடுதலைப்புலி இயக்க உறுப்பினர்கள், அகதிகளுக்

21ஆம் பக்கம் பார்க்க

ஸ்நோடனுக்கு சவால் விடுகிறார் கெரி
பக்கம் 15

# பிரதேச சபையிலிருந்து கௌரிகாந்தன் நீக்கம்

## தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கே.கௌரிகாந்தனின் பிரதேச சபை உறுப்பினர் பதவியை நீக்குவதற்கு, யாழ்.மாவட்டத் தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்கு கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு கே.கௌரிகாந்தன் வெற்றி பெற்றிருந்தார். விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் தவிசாளர் நியமனம் செய்யப்பட்டமையினால் கே.கௌரிகாந்தன் தவிசாளராக நியமிக்கப்படவில்லை.

அதன் பின்னர் மானிப்பாய் பிரதேச சபைத் தவிசாளராக நியமிக்கப்பட்டவருக்கு எதிராகச் செயற்பட்டமை மற்றும் சபை நடவடிக்கைகளில் கட்சியின் தலைமைத்துவத்தின் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவத்திலிருந்து கே.கௌரிகாந்தன் நீக்கப்பட்டிருந்தார்.

கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளமையினால், பிரதே சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு கட்சியின் செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இது தொடர்பில் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதம் கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்தியுள்ள யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர், இது தொடர்பில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். (ற-5-104)

# நல்லிணக்கம் தொடர்பில் ஸ்பெயினுக்கு விளக்கம்

## வழங்கினார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, மே 30
ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சர் மானுவல் கார்சியா மார்பிலைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கையின் தற்போதைய நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அல்ஜியர்ஸில் நடைபெற்று வரும் அணி சேரா நாடுகள் அமைப்பின் 17 ஆவது வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தின்போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பின்போது, இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறிப்பாக அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விவகாரங்கள் குறித்து ஸ்பெயின் வெளிவிவகார அமைச்சரிடம் அமைச்சர் பீரிஸ் விளக்கியுள்ளார்.



அது தவிர வர்த்தகம், முதலீடு, சுற்றுலா உட்பட ஏனைய முக்கிய துறைகள் குறித்தும் அமைச்சர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

ஸ்பெயின் அரசு எதிர்காலத்தில் கொழும்பில் அதன் தூதரகம் ஒன்றை திறக்க திட்டமிட்டுள்ளமை குறித்தும் அந்த நாட்டு அமைச்சர், அமைச்சர் பீரிஸிடம் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு உறவுகளையும் மேம்படுத்தி வளர்ச்சிகளை முன்னெடுப்பதற்கு இதுவே சரியான நேரம் என்று தாம் கருதுகின்றோம் என்றும் கூறியுள்ளார். (ற)

# பேச்சில் தீர்வு ஏற்படாததால் இந்திய மீனவர் அத்துமீறுவர்

## எமது கடல்வளமே பாதிப்படையும் என்று வடக்கு மீனவர்கள் கவலை

யாழ்ப்பாணம், மே 30
இலங்கை - இந்திய மீனவர் பிரதிநிதிகளுக்கு இடையே நடைபெற்ற பேச்சுகளில் முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபடுவார்கள். அதனால் எமது கடல் வளத்துக்கே பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்துள்ளனர் யாழ்.மாவட்ட மீனவர் பிரநிதிகள்.

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மீன்பிடித் தடைக்காலம் நீக்கப்பட்டு, இன்று மீனவர்கள் கடலுக்குச் செல்லவுள்ளனர். இது குறித்து யாழ்.மாவட்ட மீனவர் பிரநிதிகளிடம் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

"நடந்துமுடிந்த இரு கட்டப் பேச்சுக்களின்போதும் இந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்வு ஏதும் எட்டப்படவில்லை. பேச்சில் பங்குகொண்டிருந்த இந்திய மீனவர்கள் எல்லைதாண்டி மீன்பிடிப்பதற்கு சகோதரத்துவ ரீதியில் அனுமதிக்குமாறு கோரியிருந்தனர். அதற்கு நாம் மறுப்புத் தெரிவித்திருந்தபோதும், அவர்களின் கோரிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களது அத்துமீறலையும் அவர்களது சட்ட விரோத மீன்பிடித்தலையும் நிறுத்துமாறே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். முக்கியமாக கடல்வளத்தை பாதுகாப்பதே எமது நோக்கமாவுள்ளது.

இந்தநிலையில் தற்போது மீன்பிடித் தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் தொடர்ந்து எல்லை தாண்டிய மீன்பிடியிலேயே ஈடுபடும் சந்தப்பங்கள் உள்ளன. அதனால் எமது கடல் வளத்துக்கே பெரும் பாதிப்பு ஏற்படும். இதற்குத் தீர்வு காண வேண்டும்"- என்று தெரிவித்துள்ளனர்.(ற-14)

# கமலுக்குப் பிணை வழங்க அரச சட்டத்தரணி ஆட்சேபம்

## மனு மீதான தீர்ப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி

யாழ்ப்பாணம், மே 30
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனது கொலைக்குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடமாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரனுக்குப் பிணை வழங்குவதற்கு அரச தரப்பு சட்டத்தரணி கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ள நிலையில், பிணை கோரும் விண்ணப்பம் மீதான தீர்ப்பு எதிர்வரும் 27 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. அத்துடன் றெக்ஷயனது மரண விசாரணை தொடர்பான அறிக்கையையும் சுருக்க முறையற்ற விசாரணையின் அறிக்கையையும் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மேல்நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் பிணை விண்ணப்பம் நேற்றுப் பரிசீலிக்கப்பட்டது. அதன்போது கமலேந்திரனை பிணையில் விடுவிப்பதற்கு அரசசட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

கமல் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி மு.றெமீடியஸ் தனது விண்ணப்பத்தில்,

கமலேந்திரன் துரதிர்ஷ்டவசமாக கொலைக்குற்றச்சாட்டில் 6 மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவர் நீண்டகாலமாக ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து அரசியல் ரீதியாக ஈடுபட்டுவந்துள்ளார். அவர் மாகாண சபை உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டிருந்தவர்.

அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆயுதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருக்கவில்லை. தான் கொலைக்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளதனால் தனக்கு வாக்களித்த மக்கள் விரக்தி நிலையில் வாழ்வதாகக் கூறியுள்ளார். எனவே அவரை பிணையில் விடுவிக்குமாறு கோருகிறேன்"- என்று தெரிவித்தார்.

ஆயினும் அதற்கு அரச சட்டத்தரணி ஆட்சேபனை தெரிவித்தார்.

"படுகொலைக்குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் மிகப்பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. கமலேந்திரன் அரசியல்வாதியாக இருந்தாலும் சுட்டுக்கொல்லப்பட்ட றெக்ஷயனும் ஒரு அரசியல்வாதி என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. கொலைக்குற்றஞ் சுமத்தப்பட்ட கமலேந்திரன் போன்றோரை பிணையில் விடுவிப்பதனால் அது மக்கள் மத்தியில் அமைதியின்மையை அதிகரிப்பதற்கான நிலை ஏற்பட வாய்ப்புள்ளது"- என்று அவர் தனது ஆட்சேபனையில் தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிபதி மரண விசாரணை தொடர்பான அறிக்கையையும் சுருக்க முறையற்ற விசாரணை தொடர்பான அறிக்கையையும் எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியதோடு பிணை தொடர்பான தீர்ப்பை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

றெக்ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் கமல், யசிந்தன் மற்றும் றெக்ஷயனின் மனைவி ஆகியோர் கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்

அன்றுமுதல் அவர்கள் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (ற-4)

# விமானத்தின் சிதைவுகள் கடலில் மீட்பு

கொழும்பு, மே 30
விமானத்தின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் சிதைவுகள் சில அளுத்கம, மொரகல பகுதி மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறித்த சிதைவுகள் மீனவர்கள் வீசிய வலையில் சிக்கியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சிதைவுகள் தற்போது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, இது குறித்து விமானப் படைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற)

# அணிசேரா நாடுகளின் அமைச்சர்கள் மாநாடு

கொழும்பு, மே 30
அணிசேரா நாடுகள் அமைப்பின் 17ஆவது வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு அல்ஜீரியாவின், அல்ஜியஸ் நகரில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. அதில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரீஸ் கலந்துகொண்டுள்ளார். மாநாட்டில் 120 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

1961ஆம் ஆண்டு ஆரம்பமான அணிசேரா நாடுகள் அமைப்பின் செயற்பாட்டு உறுப் பினராளது இலங்கை. (ற)

# வெளிமாவட்ட சேவையை நிறைவு செய்த ஆசிரியர்கள் யாழ். வலயத்துக்கு இடமாற்றம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 30
வெளிமாவட்டங்களில் சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள ஆசிரியர்கள், தாம் விண்ணப்பித்த - தமது வதிவிடமாகவுள்ள யாழ். கல்வி வலயத்துக்கு தமது இடமாற்றங்களை வழங்குமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர். தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் காந்தீய வழியில் போராட்டம் நடத்தப்படும் என்றும் அவர்கள் அதில் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் கையளித்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"இரண்டு வருட ஒப்பந்தத்தில் வெளிமாவட்டத்தில் கடமையாற்றியவர்கள் தமது சொந்த வலயத்துக்கே திரும்பி வருகின்றார்கள். 9 வருடங்களாக கடமையாற்றிய எமக்கு சொந்த வலயமாகிய யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் வழங்க மறுக்கிறீர்கள். மேலதிக ஆசிரியர் உள்ளதாக காரணம் கூறுகிறீர்கள். அவ்வாறாயின் தற்போது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இருந்து நீங்கள் வழங்கிய வெளி மாவட்ட நியமனங்களில் பளை, கிளிநொச்சி, பூநகரி பிரதேசங்களிலுள்ள பல பாடசாலைகளுக்கு சராசரியாக 4 மேலதிக ஆசிரியர்கள் வீதம் வழங்கியுள்ளீர்களே ஏன்? ஆங்கில ஆசிரியர்களுக்கு பல மாவட்டங்களில் தட்டுப்பாடுள்ள நிலையில் கிளிநொச்சி கனகபுரம் ம.வித்தியாலயத்துக்கு 4 ஆங்கில ஆசிரியர்களை வழங்கியுள்ளீர்களே ஏன்? பூநகரி பிரதேசத்தில் வேரவில், வலைப்பாடு போன்ற பகுதிகளுக்கு ஆசிரியர்களே இல்லாத நிலையில் பூநகரி மகா வித்தியாலயத்துக்கு அதிகமான ஆளணியை ஏன் வழங்கியுள்ளீர்கள்?

2010 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களை இரண்டு வருடங்களுக்கான ஒப்பந்த அடிப்படையில் வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது. முதலாவது இடமாற்றச் சபையின் தீர்மானத்தின் படி 1961 இலும் அதன் பின்னர் பிறந்த ஆண் ஆசிரியர்களும், 1965 இலும் அதன் பின்னரும் பிறந்த பெண் ஆசிரியைகளும் இடமாற்றத்துக்கு தகுதியுடையவர்கள் என்னும் அடிப்படையில் அனுப்பப்பட்டிருந்தனர்.

அதேவேளை யாழ். மாவட்டத்துக்குள்ளான தீவகம், வடமராட்சி கிழக்கு தவிர்ந்த் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போதைய யாழ். வலய இடமாற்ற நிபந்தனையில் 1965இன் பின் பிறந்த ஆண் ஆசிரியர்களும் 1970இன் பின் பிறந்த பெண் ஆசிரியைகளுக்கும் தான் இடமாற்றம் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டத்துக்குள் கஷ்டப் பிரதேச சேவையாற்றியவர்களும் வெளி மாவட்டங்கள் பணியாற்ற தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. அப்படியாயின் எமக்கு மட்டும் யாழ். வலயம் வழங்கப்படாது திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுவது ஏன்?

ஆகக் குறைந்தபட்சம் 1961 - 1965 வரையுள்ள ஆண் ஆசிரியர்களையும், 1965 - 1970 வரையுள்ள பெண் ஆசிரியர்களையும் கூட, ஒப்பந்த அடிப்படையில் யாழ்.மாவட்டத்திலுள்ள ஏனைய வலயங்களுக்கு அனுப்பியும், இதுவரை வெளி மாவட்டத்தில் பணிபுரியாத ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையிலும் இடமாற்றம் வழங்கியுள்ளனர்.

எனவே நீண்ட காலம் வெளி மாவட்டங்களில் பணியாற்றிய எமக்கு யாழ்.வலயத்திலேயே இட மாற்றம் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். எமது கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலிக்குமாறும் தவறின் காந்திய வழியில் இதனை மிகப்பெரிய அறப்போராட்டமாக முன்னெடுப்போம்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் பெரிய கோயிலுக்கு அண்மையிலுள்ள கிறீன் பீஸ் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 4 மணிக்கு கலந்துரையாடவுள்ளனர். எதிர்வரும் திங்கட்கிழமை அவர்கள் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் முன்பாக முற்பகல் 9 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

### சுயதொழில் ஓய்வூதியத்தில் இணைவோர் பூநகரியில் அதிகரிப்பு

பூநகரி, மே 30

பூநகரிப் பிரதேசத்தில் சுய தொழில்ஓய்வூதியத்தில் இணைவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த ஜனவரி தொடக்கம் மே மாதம் வரை 700 பேர் இத் திட்டத்தில் இணைந்து சாதனை படைத்துள்ளனர். இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் பிரதேச செயலரின் வழிநடத்தலில் பிரதேச செயலக சமூக சேவை கள் அலுவலர் செ.சுரேந்திரா, பிரதேச கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தி யோகத்தர்கள் மூலம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றார்.

இந்த வருடத்தில் இதுவரை பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களால் 599 பயனாளிகளும் கிராம அலுவலர் களால் 101 பயனாளிகளும் இந்தத் திட்டத்தில் இணைக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.(வ-9)

# வடக்கில் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப தமிழ்மொழி அலுவலருக்கு விசேட பரீட்சை

**விசேட பரீட்சையை தமிழ் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், மே. 30

வடக்கில் 450 அதிபர் வெற்றிடங்கள் உள்ளன. அத்துடன் இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தரத்திலும் 90 வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து விசேட பரீட்சையை தமிழ் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ்.மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை தொடர்பில் நீண்ட நேர அபிவிருத்தி மீளாய்வு இடம் பெற்றது. அதிபர் தரம் கிடைத்தும் எத்தனை பேர் ஆசிரியர்களாக தொடர்ந்தும் கடமையாற்றுகின்றனர் என்பது தொடர்பிலும், ஆசிரியர் தரத்திலுள்ளவர்கள் எத்தனை பேர் அதிபர்களாக உள்ளனர் என்ற விவரங்கள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அதிபர் தரமுடைய 11 பேர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 7 பேரும், வடமராட்சிக் கல்வி வலயத் தில் 4 பேரும் அவ்வாறு கடமை யாற்றி வருகின்றனர். இதே வேளை ஆசிரியர் தரத்திலுள்ள 87 பேர் அதிபர்களாகக்கடமையாற்றிவருகின்றனர். யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் 11 பேரும், வலிகாமம் கல்வி வலயத்தில் 28 பேரும், தீவகக் கல்வி வலயத்தில் 27 பேரும், வடமராட்சிக் கல்வி வலயத்தில் 9 பேரும், தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 12 பேரும் அவ்வாறு கடமை யாற்றி வருகின்றனர்.

இதேவேளை வடக்கு மாகாணம் முழுவதிலும் 450 ஆசிரியர்கள் அதிபர்களாகக் கடமையாற்றுகின்றனர். அத்துடன் இலங்கை கல்வி நிர்வாக சேவைத் தரத்துக்குரிய பதவியான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவியில் 90 ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர் என்று தெரிவித்தார்.

இதன் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கடந்த காலங் களில் இலங்கை நிர்வாக சேவையில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கான பற்றாக் குறை ஏற்பட்டபோது, அமைச் சுடன் பேச்சு நடத்தி தமிழ் உத்தியோகத்தர்களுக்கு தனியானதொரு பரீட்சை நடத்தப்பட்டு பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டது. அதே போல் அதிபர் தரத்துக்கு உள்ளீர்ப்பதற்கும், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரத்துக்கு உள்ளீர்ப்பதற்கும் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு தனியானதொரு பரீட்சை நடத்தி தெரிவு செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், அவ்வாறு பரீட்சை நடத்தி உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வது சிறப்பாக இருக்கும். அதனால் 540 ஆசிரியர் வெற்றிடங்கள் ஏற்படும். எனவே அமைச் சரவை - விசேட பத்திரம் சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதற்குரிய ஆவணங்களைத் தயார் செய்து அமைச்சரிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். (வ-5)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த உகண்டா வெளி விவகார அமைச்சர் ஹென்றி ஒயம் ஒக்கேலோ தலைமையிலான குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு வருகை தந்து விசேட வழிபாட்டில் கலந்து கொண்டனர். (வ-7)

## புகைத்தல் பொருள்களை நாளை விற்பனை செய்வதைத் தவிர்ப்போம்

### வர்த்தகர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 30

உலகளாவிய புகைத்தல் எதிர்ப்பு தினம் நாளை 31 ஆம் திகதியாகும். இந்த நாளில் மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் புகைத்தல் சார் பொருள்களை விற்பனை செய்வதைத் தவிர்ப்போம்.

-இவ்வாறு யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் சார்பில் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் செல்வி சி.சிவராணி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது மாவட்டத்தில் இளம் வயதினர் மத்தியில் தற்பொழுது சிகரெட், மதுபானம், போதைவஸ்து என்பனவற்றின் பாவனை அதிகரித்துள்ளதை பல்வேறு ஊடகங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. புகைப்பதனால் புகைப்பவர் மட்டுமல்ல, அந்தப் புகையைச் சுவாசிப்பவர்களும் பாதிப்படைகிறார்கள். அத்துடன் புகைப்பவர்கள் புகைத்த இடத்தில் விடப்படும் புகையின் வீழ்படிவுகளினால் நீண்ட கால ரீதியில் எமது சமூகமே பாதிப்படையும். புகைப்பதனால் நாளொன்றுக்கு 60 பேர் என்ற ரீதியில் வருடத்துக்கு 20,000 பேர் வரை சாவடைகின்றனர். அதிகளவான மக்களுக்குப் புற்றுநோய் மற்றும் மாரடைப்பு போன்ற நோய்களை ஏற்படுத்துவதில் முக்கிய இடம் வகிப்பது இந்தக் கொடிய புகைத்தல் பழக்கமாகும்.

எனவே இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. புகைத்தல்சார் விற்பனைப் பொருள்களை விற்பனை செய்யும் அன்பார்ந்த வர்த்தகப் பெருமக்களே, உலகளாவிய புகைத்தல் எதிர்ப்பு தினமான நாளை 31 ஆம் திகதி உங்கள் விற்பனை நிலையங்களில் புகைத்தல் சார் விற்பனைப் பொருள்களை எவருக்கும் விற்பனை செய்வதைத் தவிர்த்து எம்மவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஒன்றிணையுங்கள்.

"புகைத்தலும் அதனை விற்றலும் பலியன்றோ" -என்றுள்ளது. (ஒ-4)

# தகுந்த திட்டங்களின் அடிப்படையிலேயே மன்னாரில் சிங்களமக்கள் மீள் குடியேற்றம்

## மன்னார் அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார், மே.30

மீள்குடியேற்றத் திட்டத்தின் அடிப்படையிலேயே மன்னார் மாவட்டத்தில் சிங்கள மக்களின் மீள்குடியேற்றத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு வதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம். வை.எஸ். தேசப்பிரிய தெரி வித்தார்.

மன்னார் முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள மக்களை மன்னார் அரச அதிபரின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் மீள்குடியேற் றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேவேளை முசலிப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் ஒன்றுக்கான விரிவான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த செய்தி தொடர்பில் உண்மைத் தன்மையை அறியும்வகையில் மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம்தொடர்பில் தொடர்பில் அரச அதிபர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கில் போர் சூழ்நிலை ஏற்பட்டபோது மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்து வந்த சிங்கள மக்கள் வெளியேறி யுள்ளனர். இந்தநிலையில் அவர்கள் மீண்டும் தாம் வாழ்ந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதால் அவர்களையும் மீள்குடியேற்றம் செய்ய வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுவெளியேறியிருந்தனர். எனினும் போர் நிறைவடைந்ததன் பிற்பாடு இடம் பெயர்ந்தவர்கள் கட்டங்கட்டமாக அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். குறிப்பாக மெனிக்பாம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் முகாம் களில் வாழ்ந்த தமிழ்மக்கள் அவர்களது சொந்த இடங்களில் அரசால் மீள்குடியேற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோன்று வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களும் கட்டங் கட்டமாக அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாறு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட போது அவர்களுக்கு அரசால் அடிப் படை உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அரசின் மீள் குடியேற்றத் திட்டத்தின் அடிப்படையிலேயே மன்னார் மாவட்டத்திலும் தற்போது சிங்கள மக்களின் மீள் குடியேற்றத்துக்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எந்தவிதமான அரசியல் நிகழ்ச்சி நிரலும் இல்லை. அதற்கு அவசியமும் இல்லை. நாம் அரச அதிகாரிகள் மட்டுமே.

இடம்பெயர்ந்த மக்கள் தாம் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீள் குடியேறப் போவதாக விருப்பம் தெரி வித்தால் அதன் சாதக தன்மையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அரச அதிகாரிகளாகிய எமது கடமையாக இருக்கின்றது. இதனடிப்படையிலேயே மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலும் தற்போது சிங்கள மக்களின் மீள் குடியேற்றத்துக்கான முன்னேற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

எனவே போர் காரணமாக நாட்டில் இடம்பெயர்ந்து வாழ் பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறி வாழ்வதற்கு விருப்பம் தெரிவிக்கும்போது அதனைச் செய்து கொடுக்கும் கடமையில் இருந்து விலக முடியாது"-என்றார் (.வ)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கஞ்சா தனுஷ்கோடி கடற்கரையில் மீட்பு

இராமநாதபுரம், மே 30
தென்பகுதி கடல்வழியாக இலங்கைக்கு கடத்தப்பட இருந்தாக கூறப்படும் 75 இலட்சம் ரூபா பெறுமதியான 300 கிலோ கஞ்சாவை தமிழகத்தின் இராமேஸ்வரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் தாம் மீட்டுள்ளதாக தமிழகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.
எனினும் அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்குப் போதைப் பொருள் கடத்த இருப்பதாக க்யூ பிரிவு, மற்றும் தனுஷ்கோடி பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.
தனுஸ்கோடி அரிச்சல் முனை தென் கடல் பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்தினர். இதன்போது 4 மூட்டை கஞ்சாவை கடலில் தூக்கி எறிந்து விட்டு கடத்தல்காரர்கள் தப்பியோடியுள்ளனர். இதனையடுத்து கஞ்சா மூட்டைகளைப் பொலிஸார் கைப்பற்றினர்.
கைப்பற்றப்பட்ட கஞ்சா 300 கிலோ நிறைகொண்டது என்றும் இலங்கைப் பெறுமதியாக 75 லட்சம் ரூபா எனவும் பொலிஸார் தெரிவித் துள்ளனர். (ஐ-14)



மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் ஈ. கழிவகற்றும் செயற்றிட்ட வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் முல்லைத்தீவில் நேற்று இலத்திரனியல் கழிவுகள் அகற்றும் செயற்பாடு நடைபெற்றது. இந்தநிகழ்வில் முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் சி.குணபாலன் உட்பட பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-18)

## முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சியும்

யாழ்ப்பாணம்,மே 30
வேலணை பிரதேச செயலக பிரிவில் மண்டைதீவு தெற்கு ஜே/09 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டு கோளுக்கிணங்க முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என்றும் - இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்படையத் தேவையில்லை என்றும் பொதுமக்களுக்கு யாழ். அரச அதிபரால் அறிவுறுத்தப்படுகின்றது. (ஒ)

# குழந்தையை கண்டுபிடிக்க உதவிய பேஸ்புக்

காணாமற்போன குழந்தை ஒன்று பேஸ்புக்கின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கனடாவின் கியுபெக் நகரில் இடம் பெற்றுள்ளது.
பிறந்து ஒரேநாளான குழந்தை ஒன்றை பெண் ஒருவர் கடத்திச் சென்றுள்ளார்.
இதுதொடர்பில் அந்தநாட்டு பொலிஸார் உடனடியாக அவரது புகைப்படத்துடன் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.
அதனைத் தொடர்ந்து குறித்த பெண்ணை பேஸ்புக் மூலம் அடையாளம் கண்டு, அவரது வீட்டையும் கண்டுபிடிக்க நான்கு பேஸ்புக் நண்பர்கள் பொலிஸாருக்கு உதவியுள்ளனர்.
குழந்தை காணாமற்போன 3 மணித்தியாலத்துக்குள் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ)

## டயனமெற் பயன்படுத்தி மீன்பிடித்த இருவரும் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், மே. 30
சாவற்கட்டுப் பிரதேசத்தில் டயனமெற் பாவித்து பிடித்த மீனை வைத்திருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட இருவரும் தலா 2 லட்சம் ரூபா ஆள் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி வரையில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் டயனமெற் பயன்படுத்தி பிடித்த மீன்களை வீட்டில் மறைத்து வைத்திருந்த வேளை இது குறித்து அந்தப் பிரதேசத்தை சேர்ந்தவர்களால் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.



இதனையடுத்து கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் நேற்று முன்திணம் இரவு, புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் குறித்த வீட்டை முற்றுகையிட்டிருந்தனர்.
இதன் போது வாகனத்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்வதற்கு தயராக இருந்த நிலையில் மீன்கள் கைப்பற்றப்பட்டன. டயனமெற் பாவித்து மீன்பிடியில் ஈடுபடுவது, அதனை வைத்திருப்பது, விற்பனை செய்வது என்பன யாவுமே தண்டனைக்குரிய குற்றங்களாகும். இதனடிப்படையில் குறித்த மீனை வைத்திருந்த இருவரையும் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் கைது செய்திருந்தனர்.
சந்தேக நபர்கள் இருவரும் மல்லாகம் நீதிமன்றில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர். இதன் போது கைப்பற்றப்பட்ட மீனை அழிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதுடன், இருவரையும் தலா 2 லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவித்ததுடன், வழ்க்கை எதிர்வரும் ஜூன் மாதம் 27 ஆம் திகதி வரையில் ஒத்தி வைத்தார். (ஐ-5)

## முன்பள்ளி சிறார்கள் மத்தியில் உணவுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 30
பிரிட்டிஷ் வர்த்தகக் கல்லூரியில் பயிலும் முன்பள்ளி மாணவர்களின் அன்னைமார் உணவுப் போட்டி நிகழ்வு ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளார்கள்.
யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் உள்ள யாழ்ப்பாண மீட்ரோ வளாகத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணி வரை இந்த நிகழ்ச்சி இடம் பெறும்.
சிறுவர்களுக்கான சத்துணவைப் பயன்படுத்துவது தொடர்பாக பெற்றோர் மத்தியில் புரிந்துணர்வை மேம்படுத்துவதும் மே மாதத்தில் வரும் அன்னையர் தினத்தில் தாய் மார்களை கௌரவிக்கவும் இந்த நிகழ்வு நடத்தப்படவிருக்கிறது. (ப)

## மரண அறிவித்தல்



### நடராசா செல்லம்மா

கொக்குவில் மேற்கு ஸ்ரீ வராஹி அம்மன் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா செல்லம்மா நேற்று (29.05.2014) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், இராசலிங்கம் மற்றும் மகேஸ்வன், புஸ்வதேவி (இராணி),தவராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரி,அருள், கிருஸ்ணசாமி காலஞ்சென்ற புதுமலோகன் ஆகியோரின் மாமியாரும், சீதாலட்சுமி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு (பாலா), தனலட்சுமி, ஜெயகாந்தன் (பிரான்ஸ்), வதனா,அருட்செல்வம் (இத்தாலி),சசி,இளங்கோ, இராஜேஸ்வரன்,லிங்கேஸ்வரன்,கல்பனா, கேதீஸ்வரி, சிறிகாந்தன், சிறி அகிலா, தயானி, கண்ணா, அபி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2014) வெள்ளிக்கிழமை மாலை 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வராஹி கோயில் வீதி,**
**கொக்குவில் மேற்கு**

தகவல்: குடும்பத்தினர்.
(சீதாலட்சுமி)

## ஞாயிறுக்கு முன்னர் விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம்,மே 30
ஜி.சி.ஈ (சா/த)ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் ஆள் அடையாள அட்டையைப் பெறுவதற்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு விண்ணப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் ஜி.ஏ.ஆர். தேவப்பிரிய பாடசாலை அதிபர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
எதிர்வரும் டிசம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜி.சி.ஈ சாதாரண தரப்பரீட்சையில் சுமார் 4 இலட்சம் பாடசாலை மாணவர்கள் தோற்றுகின்றனர். அவர்களில் ஒரு லட் சத்து 25 ஆயி ரம் மாணவர்களின் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களே இதுவரை கிடைத்துள்ளன. இம் மாதம் 31 ஆம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள் ளதால் அசௌகரியங்களை தவிர்க்கும் வகையில்எஞ்சியுள்ள மாணவர்களுக்கும் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைப்பதற்கு பாடசாலை அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதி ஆணையாளர் மேலும் கேட்டுள்ளார். (400)

## 31ம் நாள் நினைவும் கண்ணீர் அஞ்சலியும்

எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.ச. கோவிந்தராசனின் அன்புச் சகோதரன்



இலங்கை வங்கி நெடுந்தீவுக் கிளையில் கனிஸ்ட பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றிய

### அமரர் சகாதேவன் ரவிகுமார்

பிறப்பு 24 . 06 . 1988 — இறப்பு 30 . 04 . 2014

அவர்களின் மறைவுச் செய்தியால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
நெடுந்தீவு பிரதேச செயலகம்

(48590)

## மரண அறிவித்தல்



### வீரவாகு குமாரசாமி

காளி கோவிலடி தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு குமாரசாமி (ஆசிரியர்) நேற்று (29.05.2014) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - சின்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆசாரி - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் அன்னராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பூரணம், ஐயாத்துரை இராச மணி, முருகையா மற்றும் பூமணி காலஞ்சென்ற ஈஸ் வரி மற்றும் செல்லத்துரை ஆகியோரின் சகோ தரரும், புஸ்பலீலா, செல்வராசா (செக்கன் பிரான்ஸ்), கலா தேவி, பவளராணி (பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2014) வெள்ளிக்கிழமை காலை 10.00 க்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு.

தகவல்:-
குடும்பத்தினர்.

(48589)

## விபத்தில் இரு பொலிஸாரும் மாணவியும் காயம்

யாழ்ப்பாணம்,மே 30
யாழ்ப்பாணம் கே.கே.எஸ். பிரதான வீதி கொக்குவில் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி உட்பட இரு பொலிஸாரும் காயமடைந்தனர்.
இந்த விபத்து நேற்று மதியம் 1.45 மணியளவில் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இடம்பெற்றுள்ளது.
ஆடியபாதம் வீதியூடாக பாடசாலை மாணவியை ஏற்றிச் சென்ற ஓட்டோவும் கே.கே.எஸ். பிரதான வீதியால் யாழ். நோக்கிப் பயணித்த போக்குவரத்து பொலிஸாரின் மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.
இதன் போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பொலிஸாரும் பாடசாலை மாணவி ஒருவருமாக மூவர் காயமடைந்தனர்.
காயமடைந்த மாணவி உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ஐ)

## மரண அறிவித்தல்



### அனி வேர்ஜினியா ஜெயராஜா யேசுதாசன்

23.05.2014 லண்டனில் காலமான அனி வேர்ஜினியா ஜெயராஜா யேசுதாசன் அவர்களின் நல்லடக்கம் இன்று Emmanual Christian Tamil Fellowship ஆலயத்தில் ஆராதனைக்காக வைக்கப்பட்டு பி.ப. 1.00 க்கு East Londan Cemetery ல் நல்லடக்கம் செய்யப்படும்.
இன்று 30.05.2014 15/1, மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள அவரது சகோதரி வீட்டில் பி.ப. 4.30 க்கு இரங்கல் ஆராதனை இடம்பெறும்.
இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.ஜீன் நோயலீன்
021 - 521 - 1825

(48588)

## மரண அறிவித்தல்



### நாகராஜா விஜயகுமார்

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இரணமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராஜா விஜயகுமார் நேற்று ( 29.05.2014) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நாகராஜா மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் குமு தினியின் அன்புக் கணவரும் கம்சிகா, மதுஷிகன், ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 30.05.2014) செவ்வாய்க்கிழமை சுன்னாகம் மேற்கு கொச்சியா வத்தையில் உள்ள அவரது மைத்துனர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் கொச்சியாவத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாராயணந்தன் பவானி ( ஆசிரியை)
ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(48591)



பி.பி. ஜயசுந்தர அறிக்கையைக் கையளித்த போது....

## நிதி அமைச்சின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

நிதி அமைச்சின் 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் கொழும்பு, மிலோத்தா கட்டடத்தில் இடம்பெற்றது.
அரச நிதி திட்டமிடல் சட்டத்தின் கீழ் நிதி திட்டமிடல் அமைச்சினால் வருடாந்தம் வெளியிடப்படும் இந்த வருடாந்த அறிக்கை, நிதி திட்டமிடல் அமைச்சின் செயலர் பி.பி. ஜயசுந்தரவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.
இந்தநிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் கலந்து கொண்டார். (ச)

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவி விலக ஜனாதிபதி தயார்

### பகிரங்க விவாதத்திலும் பங்கேற்போம் என்கிறார் பந்துல

கொழும்பு,மே 30
குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
இலவசக்கல்வியைச்சீர்குலைக்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் ஜனாதிபதி உடன்படிக்கை செய்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.



பந்துல குணவர்தன

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் தமது பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதி என்னிடம் குறிப்பிட்டார்.
இலவசக் கல்வியைச் சீர்குலைக்கும் வகையில் எந்தவொரு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனத்துடனும் அரசு உடன்படிக்கை எதிலும் கைச்சாத்திடவில்லை. அவ்வாறு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தால் அதனை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிரூபிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.
இந்த விடயம் தொடர்பில் பகிரங்க விவாதமொன்றில் பங்கேற்கவும் நாம் தயாராகவுள்ளோம். ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் 200 மில்லியன் டொலர்கடன் பெற்றுக்கொண்டு கல்வித் துறையில் புதிய மாற்றங்களைக் கொண்டு வர அரசு திட்டமிட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
பாட விதானத்தில் தொழில்நுட்பக் கல்விக்கான முக்கியத்துவம் அதிகரிக்கப்பட உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## வழங்கிய காணியை மீளப்பெற்றது அரசு

### நீதிமன்றத்தில் சரத்பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு,மே 30
போர் வெற்றியின் பின்னர் எனக்கு அரசினால் வழங்கப்பட்ட காணியொன்றை கையகப்படுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.
தனது காணி கையகப்படுத்தப்படுவதை ஆட்சேபித்து அவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விசாரணைக்கு வந்தபோதே சரத் பொன்சேகா இவ்வாறு கூறினார்.
போர் வெற்றியின் பின்னர், முப்படைகளின் தளபதிகளுக்கு கொழும்பு நகரில் காணிகளை வழங்குவதற்கு அரசு தீர்மானித்தது. அதன்படி கொழும்பு. கிரிமண்டல மாவத்தை பகுதியில் தனக்கும் காணியொன்று வழங்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார். சம்பந்தப்பட்டக் காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபை கையகப் படுத்தியுள்ளது என்று அரச தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
இலங்கை காணி சட்டவிதிமுறைகளுக்கு அமைய முறையான விசாரணை நடத்தப்பட்ட பின்னரே காணிகளை கையகப்படுத்த முடியும் என்றபோதிலும், தனது காணி கையகப்படுத்துவதற்கு முன்னர் எந்த விதமான விசாரணையும்நடத்தப்படவில்லை என்று கூறிய சரத் பொன்சேகா, தனக்கு நட்டஈடு வழங்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.
முன்வைக்கப்பட்ட கருத்துக்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் மனுவை தொடர்ந்து விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.
எதிர்வரும் 19 ஆம் திகதியன்று தமது தரப்பு விளக்கங்களை முன்வைக்குமாறு காணி அமைச்சருக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச)



சரத் பொன்சேகா

## வாகன விபத்தில் பல்கலைக் கழக மாணவி சாவு

கொழும்பு,மே,30
நீர்கொழும்பு,கண்டி வீதியில் அமைந்துள்ள வனவாசல மேம்பாலத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பல்கலைக்கழக மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள் ளார்.
இந்த விபத்து கார் ஒன்று வீதியை விட்டு விலகி, மேம்பாலத்தின் பாதுகாப்புக் கம்பி வேலியில் மோதுண்டதனால் ஏற்பட்டுள்ளது. இந்தக் காரில் பயணித்த மாணவியே உயிரிழந்துள்ளார்.
வாகனத்தில் பயணம் செய்த மேலும் நான்கு பேர் காயமடைந்தநிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கண்டிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


**விற்பனையாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புபவர்கள் (ஆண்) தேவை.
**தொடர்பு:**
**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,**
**44,42 பெரியகடைவீதி,**
**யாழ்ப்பாணம்.**
(சி13914) (12.3.6)

**நிரந்தர தொழில் வாய்ப்பு**

கடந்த 14 வருடங்களாக இலங்கையில் முகாமைத்துவப் பயிற்சியிலும், சந்தைப்படுத்தல் துறையிலும் சிறந்து விளங்கும் எமது S.D.M. வவுனியா கிளையில் இருபாலாருக்கும் பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு. பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழுடன் நீங்கள் விரும்பும் மாவட்டத்தில் 45000/= சம்பளத்துடன் நிரந்தர வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.
**தொடர்பு:**
**077 367 8472/071 495 7582**
(43327) (12.3.6)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும் யாழில் முதற்தர ஆங்கில பயிற்சி மையத்தில் இருந்து



ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி **English Diploma** veta
Experts in English Training
புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat sun 8.30 a.m.<br>Mon Wed, Fri 9.30 a.m. | Sat, Sun 2.30 p.m.<br>Wed,Fri 3.00 p.m. | Wed,Fri 9.00 a.m.<br>Sat,Sun 10.30 a.m. | Tue, Thu 3.00. p.m.<br>Sat Sun 11.00 a.m. |

DMI COMPUTER EDUCATION
A1-Exam B1-Exam திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது.
City & Guilds Approved Centre **IELTS** • Unique Test Tips • Latest course Materials
13917)(3.6)

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | No. 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
16 . 03 . 1938



உதிர்வு
11 . 06 . 2013

**அமரர் நடராசா பாலகிருஷ்ணன் (கார்கார பாலி)**

நாளை (31.05.2014) சனிக்கிழமை நடைபெற இருக்கும்
எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபுர வீதி,
சுபோதினி இல்லம்,
வல்வெட்டித்துறை.

மனைவி, மகன், மருமகள், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(48543)(12.3.6)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வீரகத்தி சிவப்பிரகாசம்**
(முன்னாள் படவரைஞர்,
தொழில்நுட்ப உதவியாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.)

அன்னை மடியில்
19.10.1953
ஆண்டவன் அடியில்
15.05.2010

பாசமுடன் எங்களைப் பெற்று அரவணைத்து
பார் புகழ வாழ வைத்த எங்கள் அன்பு அப்பாவின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்தனை செய்து கொண்டு
அவரது ஆசியை வேண்டிநிற்கும்.

"சிவாபதி"
அல்லாரை வடக்கு,
மீசாலை.

அன்பு மனைவி,
மகன்மார்,
மருமகள்மார்.

(48552)(3.6.4)

## குடை சாய்ந்தது லொறி



குடைசாய்ந்த லொறி

மட்டக்களப்பு.மே 30

மட்டக்களப்பு. காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பில் சிமெந்து ஏற்றிச் சென்ற லொறி குடைசாய்ந்ததில் அதில் பயணம் செய்தோர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை திருகோணமலையில் இருந்து சம்மாந்துறைக்குச் சிமெந்து ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு குடைசாய்ந்துள்ளது.

கல்முனை- மட்டக்களப்பு பிரதான வீதியூடாக லொறி பயணித்த வேளை, புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாமுக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் எதுவித காயங்களும் இன்றி மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். (ச)

# சம்பூர் அனல் மின் திட்டத்தை உடனடியாக ஆரம்பியுங்கள்

### மோடியை சந்தித்த பின்னர் மஹிந்த உத்தரவு

திருகோணமலை.மே 30

சம்பூர் அனல் மின்திட்டப் பணிகளை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

512 மில்லியன் டொலர் செலவில், சம்பூரில் அனல் மின் நிலையத்தைக் கூட்டுமுயற்சியாக அமைப்பதற்கான திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்தியாவும் இலங்கையும் கடந்த ஒக்ரோபர் மாதம் அறிவித்திருந்தன.

இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துமாறு, சட்டமா அதிபரையும், மின்சக்தி அமைச்சின் செயலரையும் ஜனாதிபதி பணித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த சல்மான் குர்ஷித் இலங்கை வந்திருந்தபோது, அவர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டின்மூலம், ஒரு ஆண்டுக்குள் இந்த அனல் மின் நிலையக் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பது என்றும், 2018ஆம்ஆண்டுக்குள் பணிகளை முடித்து உற்பத்தி யைத் தொடங்குவது என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

2005 ஆம் ஆண்டில் இந்த அனல் மின் நிலையத்தை உருவாக்குவதற்கான இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டது. எனினும் பல்வேறு காரணங்களால் அது இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கை அரச தரப்பே அதனை இழுத்தடித்து வருகிறது என்று இந்தியா குற்றம் சாட்டி வந்தது.

இந்தநிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை புதுடெல்லியில் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சம்பூர் அனல் மின் திட்டம் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

அதனையடுத்துப் புதுடெல்லியில் இருந்த நாடுதிரும்பியவுடன் ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## திருமலை கடற்பரப்பில் 25 மீனவர்கள் கைது

திருகோணமலை,மே 30

திருகோணமலை கடற்பரப்பில் 25 மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய கூறினார்.

மீனவர்களின் 3 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சீனன்குடா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.(ச)

## கலப்படம் செய்யப்பட்ட எரிபொருள்; பாதிக்கப்பட்ட மீனவருக்கு நட்டஈடு

### பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் பேச்சு

கல்முனை.மே 30

கலப்படம் செய்யப்பட்ட எரிபொருளைப் பயன்படுத்தியதால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

அம்பாறை கரையோரப் பிராந்தியத்தில் கலப்பட எரிபொருள் பயன்பாட்டால் பாதிக்கப்பட்ட இயந்திரப்படகு மீனவர் விவகாரம் தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத் தாபன அதிகாரிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கல்முனைக்குச் சென்று அது தொடர்பாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

கலப்படமுள்ள எரிபொருள் பாவனையால் சுமார் 370 மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் மீன்பிடியும் பாதிப்படைந்துள்ளது.

எனவே மீனவர்கள் மண்ணெண்ணெய் வாங்கிய நிலையத்துக்குச் சென்று மீனவர்களது பெயர், விலாசம், இயந்திரப்படகின் விவரம், இயந்திர இலக்கம், வாங்கிய எரிபொருள் அளவு உள்ளிட்ட விவரங்களைச் சேகரிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதனூடாக மீனவர்களுக்கான உதவியை வழங்க முடியும் என்று கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

## பல்கலைக்கழக மாணவர்களின் நாட்டாரியல் கலை

திருகோணமலை, மே30

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் தொடர்பாடல்துறை மாணவர்கள் தமது கற்கைகளின் ஒரு பகுதியாக நாட்டாரியல் கலை வெளிப்பாடுகளைப் பொதுமக்கள் முன் நிகழ்த்தியுள்ளனர்.

திருகோணமலை நகரப் பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நாட்டாரியல் கலை வடிவங்கள் மூலம் மக்கள் பிரச்சினைகளை மாணவர்கள் எடுத்துக் காட்டினர். (ச-10)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07.07.1939

மறைவு 10.06.2013

அமரர் வெற்றிவேலு சண்முகம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தீர்கள்
கூரறிவு கொண்டவராய் எமையென்றும் வளர்த்தீர்கள்
அன்பு அப்பாவே! நீங்கள் எமைப் பிரிந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது
ஆயிரம் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்று அழைக்க
நீங்கள் இப்பூவுலகில் இல்லை
ஆலமரமாய் நின்று எம்மை அரவணைத்தீர்கள்
கல்விச் செல்வத்தால் எமை நாடறிய வைத்தீர்கள்
குடும்பத் தலைவராயும் கடமையில் ஆசானாகவும்
இவ்வுலகில் மிளிர்ந்தீர்கள் உங்கள் புன்சிரிப்பு
நிதம் எமை வாட்டுகின்றது அப்பா!
எமைப் பிரிந்து இப்போது
தெய்வமாகி விட்டீர்கள் அப்பா!
நெஞ்சம் கனக்கிறது
விழிநீர் சொரிகின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வட்டுவாகல்,
முல்லைத்தீவு.
T.P: 077 393 0946
0044 754 025 3607 (லண்டன்)

திதி : துதியை (30.05.2014)

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(43323) (7.3)

## புலோலி நூலகத்தில் இன்று கருத்தரங்கு

வடமராட்சி, மே 30
நூலக வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி பொது நூல் நிலையம் நடத்தும் சிறப்புக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொது நூலக மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கு" வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற தலைப்பில் இடம்பெறும்.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அரச அதிபர் வே.விசுவலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பரமேஸ்வரி யோகராசா, பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.தர்மராசா ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (ஒ-173)

## 75 ஆவது ஆண்டு நிறைவு விழா

கொழும்புத்துறை, மே 30
பாஷையூர் அந்தோனியார் ஆலய மாதா கூட்டத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மரியன்னை திருவிழாவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.
நாளை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும், மாலை 5 மணிக்கு திருச் சொரூப பவனியும் இடம்பெறும். (க-135)



செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனின் 53 ஆவது பிறந்த நாள் விழா புதன்கிழமை மாலை துர்க்கையம்மன் ஆலய அன்னபூரணி மண்டபத்தில் துர்க்கா மகளிர் இல்லப் பிள்ளைகள் மற்றும் தெல்லிப்பழை வாழ் மக்களால் மிகவும் எளிமையாகக் கொண்டாடப்பட்டது.
துர்க்கையம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாட்டைத் தொடர்ந்து ஆலயத்தில் இருந்து துர்க்கா மகளிர் இல்லப்பிள்ளைகள் புடை சூழ மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு ஆலய உப தலைவர் எஸ்.அருளானந்தசிவம் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது.
மங்கல விளக்கை விழா நாயகன் ஏற்றி வைக்க அதனைத் தொடர்ந்து தேவார பாராயணமும் வாழ்த்துரைகளும் இடம்பெற்றன. (வ-86)

## இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்பு ஆரம்பம்

*சாவகச்சேரி நகர சபையினரால்*

தென்மராட்சி, மே 30
பாவனைக்கு உதவாத இலத்திரனியல் மற்றும் மின்சாதனங்களைச் சேகரிக்கும் முகாமைத்துவ வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினரால் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 3ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை வரைகுறிப்பிட்ட பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன என்று நகர சபைத்தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார்.
இன்று நகரசபையின் ஐந்தாம், ஆறாம்வட்டாரப்பகுதிகள் (நுணாவில் மேற்கு, நுணாவில் மத்தி) நாளை சனிக்கிழமை மூன்றாம், நான்காம் வட்டாரப் பகுதிகள் (கெருடாவில், கல்வயல்)- ஜூன் முதலாம் திகதி ஏழாம், ஒன்பதாம் வட்டாரப் பகுதிகள் (வாரிவனேஸ்வரம், சாவகச்சேரி நகரம்) 2 ஆம் திகதி, எட்டாம், பத்தாம், பதினொராம் வட்டாரப் பகுதி (கோவில் குடியிருப்பு, பெரிய அரசடி, சப்பச்சி மாவடி)- 3 ஆம் திகதி முதலாம் இரண்டாம் வட்டாரப் பகுதி (மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு) ஆகிய பகுதிகளில் சேகரிப்பு மேற்கொள்ளப்படும். இவற்றுடன் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி நகர பஸ் நிலையத்தில் விசேட சேகரிப்பு மையம் இயங்கும் எனவும் அறிவித்துள்ளார்.
பொது அமைப்புக்கள், வர்த்தகர்கள் ,அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியவை இலத்திரனியல் மற்றும் மின்சாதன கழிவுப் பொருள்களை பஸ் நிலையத்தில் விசேடமாகவைக்கப்பட்டுள்ள டிராக்டர் பெட்டியில் இடுமாறு அவர் அறிவித்துள்ளார்.
குறித்த தினங்களில் நகரசபை வாகனங்கள் வருகை தரவுள்ளதால் வரியிறுப்பாளர்கள் காலதாமதம் செய்யாமல் உடனுக்குடன் வாகனங்களில் ஒப்படைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## அன்பின் வலிமை

சண்டைக்கும் சச்சரவுக்கும் இரண்டுபேர் தேவைப்படுகின்றனர். அதேபோல, சமாதானம் செய்து கொண்டு ஒத்துப்போகவும் இருவர் தேவை. அன்பெனும் சுடரைத் தூண்டி விட்டாலொழிய இது சாத்தியமில்லை. உங்கள் உள்ளம் முழுவதும் அன்பு வெள்ளம் பாய்ந்து நிறையட்டும். உங்களுடன் சண்டையிட்டவரின் கண்களை உற்றுப் பாருங்கள். அங்கே உங்களுடைய அன்பு மயமான விம்பத்தைக் கண்டு தழுவிக்கொள்ளுங்கள்.
அந்த நேரத்தில் நீங்கள் பேசிக்கொள்ளத் தேவையில்லை. உங்கள் இருவருடைய கண்களிலும் நிறைந்து நிற்கும் ஆனந்தக் கண்ணீர் உங்களுடைய சச்சரவுக்கு ஆதாரமான வேற்றுமைகளைக் கழுவி நீக்கி விடும். அந்த நேரத்தில் உங்கள் இருவருடைய மனமும் ஒன்றிவிடும். இப்படி ஒவ்வொரு முறையும் அன்பின் மலர்ச்சியை நீங்கள் உண்மையாகவே காண்பீர்கள். இதுதான் அன்பின் சக்தி. இதுவே அதன் முழு வலிமையும் கூட.அன்பின் இணைப்பு பலவீனமாகி மெலிந்து விட்டால் குற்றங்குறைகள் பெருகித் தோன்றுகின்றன. நம்மை அன்பு வெள்ளம் சூழ்ந்துகொண்டு அலை மோதும் போது. அதன் நயத்தை நாம் மீண்டும் கண்டு உணரும் வேளையில் குற்றங்களும். குறைகளும் கரைந்து அழிந்து விடுகின்றன. அங்கே அழகின் தரிசனம் கிடைக்கிறது. இதுதான் அன்பு செய்யும் ரசவாதம். இதுவே அது செய்து காட்டும் அதிசயம்.
உள்ளம் முழுவதும் அன்பு மலர்ந்து நிறையும் போது வாழ்க்கையே ஓர் அழகும் ஆனந்தமும் படர்ந்த சமவெளியாகத் தோன்றுகிறது. அங்கே தெய்வ பக்தியும் மானுடக் காதலும் கைகோர்த்து நடனமிடுகின்றன.

ஞானக்கதிர்

## இந்தியப் பிரதமருக்கு வாழ்த்து

யாழ்ப்பாணம், மே 30
புதிய இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை வாழ்த்தியும், இலங்கை மக்களுக்கு நல் அமைதி வேண்டியும் இந்திய இலங்கை நாடுகளிடையே பரபஸ்பர உறவை மேம்படுத்த வேண்டியும் சிறப்பு பூசை வழிபாடுகளையும் வாழ்த்து நிகழ்ச்சிகளையும் இந்து சமயப் பேரவையும், இலங்கை இந்திய இந்துமக்கள் நட்புறவுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.
நிகழ்வுகள் யாழ்ப்பாணம், பலாலி வீதி, 14 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை வளாக ஸ்ரீசிவகாமிசுந்தரிசமேத ஸ்ரீநடராஜப்பெருமான் ஆலயத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள் ளன. (க)



யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி கோயில்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்) புனராவர்த்தன
அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் - 2014

விநாயகப்பெருமானே அடியார்களே!

விநாயகப்பெருமானின் ஆலயம் அழகுறச் செப்பனிடப்பட்டு எம்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெருக்கும் வண்ணம் விநாயகப்பெருமானுக்கும் விசாலாட்சி அம்பிகா சமேத விஸ்வலிங்கப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.
**நிகழும் மங்கலகரமான ஜய வருஷம் வைகாசித் திங்கள் 19ஆம் நாள் (02.06.2014) திங்கட்கிழமை பூர்வபக்க பஞ்சமித் திதியும் பூச நட்சத்திரமும், சந்திரஹோரையும் சித்தயோகமும் கூடிய காலை 6.50 மணி முதல் 7.12 மணி வரையுள்ள மிதுன லக்ன சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நிகழ இருப்பதால்**
அத்தருணமும் அதற்கு முன்னரும் நிகழும் கிரியைகளில் ஆசார சீலர்களாகக் கலந்துகொண்டு பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

**எண்ணெய்க்காப்பு**
30.05.2014 வெள்ளி காலை 9.00 மணி முதல்
31.05.2014 சனிக்கிழமை மாலை 5.00 மணி வரை.

**மகாகும்பாபிஷேகம்**
02.06.2014 திங்கட்கிழமை
காலை 6.50 - 7.12 மணி வரை.

655, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
"அனைவரும் வருக ஐங்கரன் அருள் பெறுக"
தர்மகர்த்தா சபையினர்



"அன்புனநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க
அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்ற ஆற்ற
தொண்டு செயப்பல அன்பர் தோன்றத் தோன்ற
தோற்று சுவைச் சோறாக உண்ண உண்ண

கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப
கடி அமுதசுரபியினால் ஊட்ட ஊட்ட
கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி
கோடானு காலமெல்லாம் வாழி வாழி"

# நயினாதீவு - ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

**Regd. No. S.236**

ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 55ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்து கிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம் பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபிமண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர் களுக்கும் அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம், பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தரும சீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த, பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜய ஆண்டு ஆனி 14ஆம் நாள் **28.06.2014** சனிக்கிழமை அம்பாளின் மகோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி ஆனித்திங்கள் 23ஆம் நாள் **07.07.2014** திங்கட்கிழமை மஞ்சத் திருவிழாவும், ஆனித்திங்கள் 26ஆம் நாள் **10.07.2014** வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும், ஆனித்திங்கள் 27ஆம் நாள் **11.07.2014** வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், ஆனித்திங்கள் 28ஆம் நாள் **12.07.2014** சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், ஆனித்திங்கள் 29ஆம் நாள் **13.07.2014** ஞாயிற்றுக்கிழமை தெப்பத்திருவிழாவும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாள்களும் இரவும் பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள். அவர் களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi, Commercial Bank, கண. இல. 1247985001 Peoples Park கட்டடம், Pettah, அல்லது B.O.Cஇக்கு இல.7687836, ஊர்காவற்றுறை கிளை வேலணை என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். பணம், பொருள் என்பவற்றை வழங்குவதாயின் சி.சிவகுமார், வெற்றிலை மார்க்கட், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும் ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவிக்கின்றோம். திருநெல்வேலி தேனு களஞ்சியத் (மார்க்கற் உட்புறம்) திலும் பொருள் பணம் வழங்கலாம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்கான நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறை பயணிகள் இல்லம் அமைக்கப் பெற்றுள்ள தென்பதை மன மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்...."

**அமுதசுரபி மண்டபம்,**
**நயினாதீவு - 02.**

ம.அம்பிகைபாகன்
செயலாளர்.

(கி/13920)

## சமய சந்நிதிகளில்...

கொழும்புத்துறை, மே 30
கோப்பாய் தெற்கு புனித மரியாள் ஆலய வருடாந்த திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெற வுள்ளது.
இன்று மாலை 5 மணிக்கு நற் கருணைப்பெருவிழாவும், நாளை காலை 6.45 மணிக்கு திரு விழாத் திருப்பலியும், திருசொரூப பவனியும்இடம்பெறும். (க-135)

* * *

வடமராட்சி, மே 30
வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி தேவஸ் தானத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள்ளன. 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனமும், 20 ஆம் திகதி வைரவர் சாந்தியும் இடம்பெற வுள்ளன. (க)

* * *

யாழ்ப்பாணம், மே 30
யாழ்ப்பாணம் வண்ணை அருள் மிகு ஸ்ரீ விஸ்வலிங்க மகா கண பதி ஆலயத்தின் (பன்றிக் கோட்டுப் பிள்ளையார் ஆலயம்) மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது.
இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நாளை சனிக் கிழமை மாலை4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். (க)

* * *

யாழ்ப்பாணம், மே 30
அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் 11 ஆம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் வியாழக்கிழமை தீர்த் தோற்சவமும் இடம்பெறும்.
"வேத சிவாகம ஜோதி" சிவஸ்ரீ வை.தியாகராசா குருக்கள் தலை மையில் திருவிழாக் கிரியைகள் இடம்பெறும். (க-9)

* * *

கொழும்புத்துறை, மே 30
கொழும்புத்துறை மணியம் தோட்டம் கர்த்தர் ஆலய வரு டாந்த திருவிழா இடம்பெற்று வருகிறது.
நாளை மாலை 4.45 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திரு விழாத் திருப்பலியும், திருச் சொரூப பவனி யும் இடம்பெறும். (க-135)

## மூன்று நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 30
பேராசிரியர் தனஞ்சயராசசிங் கத்தின் மூன்று நூல்களின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை இடம் பெறவுள்ளது.
காலை 8 மணியளவில் யாழ்ப் பாணம் தேசிய கல்வியியற் கல் லூரியின் கலையரங்கில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலை மையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.
பிரதம விருந்தினர்களாக பேரா சிரியர் சி.தில்லைநாதன், திருமதி மல்லிகா தில்லைநாதன் ஆகி யோர் கலந்து கொள்வார்கள்.
சிறப்பு விருந்தினர்களாக பேரா சிரியர் இரா.வை. கனகரத்தினம், தமிழ்ப் பேராசான் நாகலிங்கம் குழந்தைவேலு ஆகியோர் கலந்து கொள்வார்கள். போராசிரியர் கி.விசாகரூபன், தமிழ்ப் பேராசான் நா.குழந்தைவேலு ஆகியோர் இலக்கியச் சிந்தனைத் தடங்கள் நூலுக்கான வெளியீட்டுரை மற்றும் மதிப்புரையை வழங்குவார்கள்.
போராசிரியர் வ.மகேஸ்வரன் மற் றும் கலாநிதி கந்தையா ஸ்ரீ.கணே சன் ஆகியோர் யாழ்ப்பாணப் பேச் சுத்தமிழ்நூலுக்கான வெளியீட்டுரை மற்றும் மதிப்புரையையும்- பேராசி ரியர் சி.சிவலிங்கராஜா மற்றும் பேராசிரியர் இரா.வை.கனகரத் தினம் ஆகியோர் நாவலர் பணிகள் நூலுக்கான வெளியீட்டுரையை யும், மதிப்புரையையும் வழங்குவார் கள். நன்றியுரையை முருகேசு கௌரிகாந்தன் நிகழ்த்துவார். (க)

## வாக்காளர் தினம்

யாழ்ப்பாணம், மே 30
யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வாக்காளர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக முன்றிலில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாய கத்தின் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்மாகவுள்ளன.
காலை 9 மணியளவில் மாவட்டச் செயலக முன்றிலில் ஒன்று கூடு வோர் பதாகைகளைக் கட்டுவார் கள். பின்னர் காலை9.30 மணிய ளவில் யாழ். பிரதான தபாலக முன்றிலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும். இந்த ஊர்வலம் பிரதான தபாலக அலுவலகத்தின் முன்றிலில் இருந்து காங்கேசன் துறை வீதி வழியாக சத்திரச் சந்திவரை சென்று மருத்துவமனை வீதி வழியாகப் பிரதான பஸ் நிலை யத்தை அடைந்து அங்கு பதாகை களைக் கட்டிய பின்னர் வேம்படிச் சந்தியைச் சென்றடையும். (க)

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி**

**ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய வளர்ச்சி நிதிக்காக எதிர்வரும் 01.06.2014 பி.ப. 2.30 மணியளவில் நீர்வேலி மாட்டுவண்டி சவாரித்திடலில்**
மேற்படி போட்டி நடைபெறவுள்ளது.
இப்போட்டியில் அனைத்து போட்டியாளர் களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு பூலசிட்டி, நீர்வேலி. திருப்பணிச்சபை.

The Art of Living Happiness Program



**ஆனந்த அனுபவம்**
**நெல்லியடியில்**

**அறிமுகவுரை** : 01.06.2014 மாலை 5.30 மணி
**பயிற்சி நாள்கள்** : 02.06.2014 - 04.06.2014
**இடம்** : நெல்லியடி மத்திய கல்லூரி.
**மேலும் விவரங்களுக்கு: 077 100 0750**
Like us on Facebook www.facebook.com/artoflivingjaffna

## முள்ளிவாய்க்காலில் இறந்தோரை அஞ்சலிக்க மறுத்த மாநகரசபை

யாழ்ப்பாணம்.மே.30
முள்ளிவாய்க்காலில் இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த மறுத்த யாழ்.மாநகர சபை இந்தியாவில் புதிய பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோடிக்கு எழுந்து நின்று நேற்று வாழ்த்துத் தெரிவித்தது.

யாழ்.மாநகர சபையின் மாதந்தக் கூட்டத்தின் போது ஆரம்பத்தில் முள்ளளிவாய்க் காலில் இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பிரேரணை முன் வைத்த போது சபையில் அந்த பிரேரணை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் எதிரணி உறுப்பி னர்கள் சபையில் வெளிநடப்புச் செய்தனர்.

அதனைத் தொடர்ந்தும் சபையில் கூட்டம் தொடர்ச் சியாக இடம்பெற்றது.

இதன்போது இந்தியாவின் புதிய பிரதம ருக்கு வாழத்து தெரிவிக்க வேண்டும் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்கு ணராசா கேட்டுக் கொண்டதையடுத்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சபையில் எழுந்து நின்று வாழ்த்துத் தெரிவித்தனர். (வ-14-7)

# கைவிடப்பட்ட தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டு நேற்று அழிப்பு

யாழ்ப்பாணம், மே 30
யாழ்.நகரை அண்மித்த கடற்கரைப் பகுதியை அண்டிய இடத்தில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகள் நான்கை கைவிடப்பட்ட நிலையில் யாழ்.நீரியல் வளத்திணைக் களத்தினர் மீட்டுள்ளனர். அவற்றை அழிக்குமாறு யாழ். நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவது தொடர்பில், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. அதனையடுத்து நேற்றுக் காலை நடத்தப்பட்ட தேடுதலில் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அழிக்கப்பட்டுள்ளன.



கைப்பற்றப்பட்ட வலைகள் தீயிட்டு எரித்த போது....

யாழ்.மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட வலைகளின் பாவனைகள் அதிகரித்துச் செல்கின்றன. இதனைத் தடுப்பதற்காக கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் திடீர் தேடுதல் களை நடத்தி வருகின்றது. தீவகத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்ட தேடுதலில் பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

யாழ்.குடாநாட்டுக் கடல் நீரேரிப் பகுதியில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை பயன்படுத்துவது தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக் களத்தினருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது. இதன் பிரகாரம் நேற்றுக் காலை கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர், புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போது நாராந்தனையில் 3 கூட்ட தங்கூசி வலைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. இருப்பினும் வலை உரியவர்கள் தப்பிச்சென்று விட்டனர். கொட்டடியில் வீட்டில் தங்கூசி வலை காயப்போடப்பட்டிருந்த நிலையில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் ஒரு கூட்ட வலை கைப்பற்றப்பட்டது. வீட்டு உரிமையாளர் தான் அந்த வலையைப் பயன்படுத்துவதில்லை என்றதால், உரிமையாளர் கைது செய்யப்படவில்லை. எனினும் வலை கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட வலைகள் நேற்றுக் காலையே யாழ். நீதிவான் நீதிமன்றில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரால் சமர்ப்பிக்கப்பட்டது. நீதிவான் நீதிமன்றம் குறித்த வலைகளை அழிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். இதற்கமைய வலைகள் எரித்து அழிக்கப்பட்டுள்ளன. (வ-5-4)

## அச்சுவேலியிலுள்ள பொலிஸ் நிலையக் காணி சுவீகரிப்பு

### அளவீடு மேற்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணம், மே 30
அச்சுவேலி பொலிஸ் நிலையம் தற்போது இயங்கி வரும் மாடி வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணி அரசால் சுவீகரிக்கப்படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் செய்யப்பட்டு காணி அளவீடு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் புலம் பெயர்ந்து வாழும் வைத்திய நிபுணர் ஒருவருக்குச் சொந்தமான அச்சுவேலி சங்கானை வீதியில் அமைந்துள்ள மாடிவீடு உள்ளடக்கிய 10 பரப்பு விசாலமான காணியில் குறித்த பொலிஸ் நிலையம் செயற்பட்டு வருகின்றது.

மாதாந்தக் குத்தகை அடிப்படையில் கடந்த வருடம் குறித்த மருத்துவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டடத்துக்கு அச்சுவேலி பொலிஸ் நிலையம் கடந்த வருடம் முற்பகுதியில் மாற்றப்பட்டு வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரால் திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ் நிலைய காணி உரிமையாளரான வைத்திய நிபுணர் வெளிநாட்டில் இருப்பதால் காணி சுவீகரிப்புத் தொடர்பான அறிவித்தல் பொது இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. (வ-11)

## உணவகங்களில் அதீத ஒலியுடன் பாடல்கள்

### அலுவலகப் பணியாளர்கள் விசனம்

கொழும்புத்துறை. மே 30
யாழ்.நகரில் குறிப்பாக காங்கேசன்துறை வீதிப் பகுதியில் இயங்கிவரும் உணவகங்களில் அதீத ஒலியில் தினமும் பாடல்கள் ஒலிக்க விடப்படுவதால் அந்தப் பகுதியில் உள்ள அலுவலகப் பணியாளர்களும் பொதுமக்களும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் உள்ள உணவகங்கள் ஏட்டிக்குப் போட்டியாக தொடர்ந்து அதீத சத்தத்துடன் பாடல்களை ஒலிக்க விடுவதால், அது அந்தப் பகுதியில் அமைந்துள்ள அலுவலகங்கள், வங்கிகள், வியாபார நிலையங்கள் என்பவற்றில் பணியாற்றுவோர் அமைதியான சூழலில் தமது கடமைகளை நிறைவேற்றத் தடையாக அமைவதாகத் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் நடமாட்டமும் போக்குவரத்து நெரிசலும் உள்ள இடங்களில் இவ்வித அளவுக்கு மீறிய ஒலித் தாக்கத்தால் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. (வ-135)

## வாக்காளர்களாக பதியும் படிவங்கள் கைக்கு வந்து சேர்ந்து விட்டனவா?

### கிடைக்காவிடில் கிராம அலுவலரை நாடுங்கள்

யாழ்ப்பாணம், மே 30
யாழ். தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் பதிவுக்குரிய பி.சி படிவங்கள் கிடைக்காத பொதுமக்கள் உடனடியாக தமது பகுதி கிராம சேவையாளரிடம் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் இல்லாவிடின் தேர்தல்கள் திணைக்களத்தின் 021 2222265 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப்பட்டியலைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் 16 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு கிராம சேவையாளரும் தமது பகுதிக்குட்பட்ட வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவங்களை (பி.சி) விநியோகிக்க வேண்டும்.

இந்த நடவடிக்கை யாழ். தேர்தல் மாவட்டத்தில் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

பெரும்பாலான கிராம சேவையாளர்கள் தமது பகுதிக்குட்பட்ட வீடுகளுக்கு நேரடியாகச் சென்று விண்ணப்பப் படிவங்களை விநியோகித்துள்ள போதும், ஒரு சில கிராமசேவையாளர்கள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்ற முறைப்பாடுகள் யாழ். மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்துக்கு நேரடியாகக் கிடைத்துள்ளன.

எனவே, யாழ். தேர்தல் மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் அனைவரும் இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பதிவை மேற்கொள்ளும் பி.சி படிவங்கள் கிராமசேவையாளரால் வழங்கப்படாதிருந்தால், கிராம சேவையாளர் அலுவலகத்துக்குச் சென்று நேரடியாகப் பெற்றுக் கொள்ளுமாறும் இல்லாவிடின் யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்களத்தின் தொலை பேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (ஒ- 5)

## யாழ்.நகர வீதிகள் காப்பெற் வீதிகளாகும்

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட மத்திய பகுதியின் வீதிகள் அனைத்தும் 100 மில்லியன் ரூபா நிதியில் காப்பெற் வீதிகளாக மாற்றப்படும் என்று யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா நேற்று தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட வீதிகள் புனரமைப்பு இன்றி இருப்பது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. இது தொடர்பில் பாரம்பரிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் எடுத்துக் கூறியதுக்கு அமைவாக பொருளாதார அமைச்சு இந்த நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது- என்றார். (ஒ - 14 -7)

## நீதி, சட்டத்துக்குக் கட்டுப்பட்டு முடிவு எடுங்கள்; தவறினால் உதயனில் ‘கொட்டை’ எழுத்தில் வ்ரும்

### யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் போட்டார் போடு

யாழ்ப்பாணம்.மே 30
சபை நீதிக்கும் சட்டத்துக்கும் கட்டுப்பட்டு முடிவை எடுக்க வேண்டும். இல்லையென்றால் நீதியை நிலைநாட்டும் 'உதயன்' பத்திரிகையில் நாளை கொட்டை எழுத்தில் செய்தி வரும் என்று யாழ். மாநகர சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் அ.கிளாபோடாசியஸ் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் நேற்றைய மாதாந்தக் கூட்டத்தின் ஒரு கட்டத்தில் எதிரணி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருந்தனர். அவர்களுக்கு வரவுக்கான கொடுப்பனவு எப்படி வழங்குவது? என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

அவ்வேளையில் சபையின் சட்டத்தை மதிக்காது வெளிநடப்புச் செய்தவர்களுக்கு எவ்வாறு கொடுப்பனவு வழங்க முடியும் சட்டத்தில் அப்படி இடம் இருந்தால் வழங்குங்கள் நாளை எல்லா பத்திரிகைகளிலும் இது வெளிவரும் நீதியை நிலைநாட்டும் 'உதயன்' பத்திரிகை அதை விட்டு வைக்காது. எனவே சபைதான் இதைத் தீர்மானிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

வெளிநடப்புச் செய்த எதிரணி உறுப்பினர்கள் சபைக்கு வந்தமை அனைவருக்கும் தெரியும். " அதனால் பெருந்தன்மையின் அடிப்படையில் மனிதாபிமானத்துடன் அவர்களுக்கான கொடுப்பனவை சபை வழங்கும் என முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

இதேவேளை- முள்ளிவாய்க்காலில் இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவது தொடர்பான பிரேரணையை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் எதிரணி உறுப்பினர்கள் நேற்று மாநகர சபைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது

இதன்போது கூட்ட ஆரம்பத்தில் முள்ளிவாய்க்காலில் இறந்த உறவுகளுக்கு இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்த வேண்டும் என்பது தொடர்பான பிரேரணையை எதிரணி உறுப்பினர்கள் சார்பில் இ.இராஜதேவன் சபையில் முன்வைத்தார்.

இந்தப் பிரேரணையை முதல்வர் உட்பட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எவரும் ஏற்றுக் கொள்ள வில்லை . முள்ளிவாய்க்காலில் இறந்த உறவுகளுக்கு மட்டும் அஞ்சலி செலுத்த முடியாது. அனைத்து இறந்த மக்களுக்கும் அஞ்சலி செலுத்துவது என்றால் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்படும். இல்லை ஏற்றால் ஏற்றுக் கொள்ள முடியாது அல்பிரட் துரையப்பா காலத்தில் இருந்து இறந்த அனைத்து உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்துவோம் முள்ளிவாய்க்கால் என்னும் சொற்பதம் இங்கு பிரயோகிக்க வேண்டாம். முள்ளிவாய்க்காலில் மட்டும் மக்கள் இறக்கவில்லை என முதல்வர் தெரிவித்தார்.

இதன்போது புதுக்குடியிருப்பில் ஆளுநர் சென்று அஞ்சலி செலுத்தும் போது ஏன் இங்கு தமிழ் மக்களுக்காக அஞ்சலி செலுத்த முடியாது தமிழ் மக்களது மனித நேய ஆண்டாக மாநகர சபை கடைப்படிக்கும் என எதிரணி உறுப்பினர் இராஜதேவன் கேட்ட கேள்விக்குச் சபையில் பதில் இல்லை. பிரேரணையை ஏற்றுக்கொள்ளாததால் எதிரணி உறுப்பினர்கள் சிறிது நேரம் எழுந்து நின்று விட்டு சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (வ-14-7)

## அன்னாசிச் செய்கை அமோக விளைச்சல்



அன்னாசிப் பழ கொள்வனவில் மக்கள்

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி, வட்டக்கச்சியில் அன்னாசிச் செய்கை இம்முறை அமோக விளைச்சலைத் தந்துள்ளது.

கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்துக்குரிய வட்டக்கச்சிப் பண்ணையில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் மாமர நிழல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அன்னாசிச் செய்கையே அதிக விளைச்சலைத் தந்துள்ளது.

கிளிநொச்சி நகரில் ஓர் அன்னாசிப் பழம் 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# அடிப்படை வசதிகள் இல்லாது முல்லையில் பல பாடசாலைகள்

## கல்வி நிலையும் பெரும் பின்னடைவு

முல்லைத்தீவு, மே 30

முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள ஐம்பது வீதமான பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன.

முல்லைத்தீவு , துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள 61 பாடசாலைகளில் தற்போது எண்ணாயிரத்து நானூற்றி எண்பத்திமூன்று மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இங்குள்ள ஐம்பது வீதமான பாடசாலைகள் அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுகின்றன. அதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு வருகின்றது என்றும் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

துணுக்காய் கல்விக் கோட்டத்தில் தென்னியங்குளம் அ.த.க. கோட்டை கட்டிய குளம் அ.த.க. பாடசாலை, உயிலங் குளம் அ.த.க. பாடசாலை, ஆலங்குளம் அ.த.க. பாடசாலை, புத்துவெட்டுவான் அ.த.க. பாடசாலை உள்ளிட்ட 18 பாடசாலைகளும்-, மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தில் பனங்காமம் அ.த.க. பாடசாலை, மூன்றுமுறிப்பு அ.த.க, பாடசாலை சிறாட்டிகுளம் அ.த.க. பாடசாலை. நட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை, பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயம் உள்ளிட்ட 16 பாடசாலைகளும்- ஒட்டுசுட்டான் கல்விக் கோட்டத்தில் கருப்பட்ட முறிப்பு அ.த.க. பாடசாலை. ஒதியமலை அ.த.க பாடசாலை, மன்னாங்கண்டல் அ.த.க. பாடசாலை. போன்ற பாட சாலைகள் உள்ளடங்கலாக 27 பாடசாலைகளும் அடிப்படை வசதிகள் இன்றியும். ஆசிரியர்களுக்கான விடுதிகள் இன்றியும் காணப்படுகின்றன. மீள்குடியமர்வு இடம் பெற்று ஐந்து ஆண்டுகளாகியும் இப்பகுதிகளின் கல்வி அபிவிருத்தி என்பது பின்தங்கியே காணப்படுகின்றது என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர். (ச-55)



இறுதிப் போரின்போது முழுமையாகச் சேதமடைந்த முல்லைத்தீவு. புதுக்குடியிருப்பு குழந்தை யேசு ஆலயம் அழகிய தோற்றத்துடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது . (ச-102)

## கிடைக்கும் உதவிகளை சிறப்பாக பயன்படுத்துக

### திட்டமிடல் பணிப்பாளர் அறிவுரை

கிளிநொச்சி, மே 30

கிடைக்கின்ற உதவித் திட்டங்களை மக்கள் சிறந்தமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி அரச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் தெரிவித்தார்.

கிளிநொச்சி திருநகர் தெற்கு மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் குடும்பங்களுக்கு நிதி உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு பொது நிகழ்வில் கலந்து கொள்ளும்போதுதான் மாவட்டத்தினுடைய தரவுகளையும், வரலாறுகளையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எமது மாவட்டத்தில் முந் நூறுக்கும் மேற்பட்ட பொது அமைப்புகள் உள்ள போதிலும் அந்த அமைப்புகளில் 99 வீதமானவை இயங்குதிறன் கொண்டவையாக இல்லை.

ஏனைய பெரிய உதவி அமைப்புகளின் உதவிகளை எதிர்பார்த்திருக்கின்ற அமைப்புகளாகவே அவை உள்ளன.

ஆனால் திருநகர் தெற்கு மாதர் சங்கம் தன்னுடைய திறன்களைப் பயன்படுத்தி கிராமத்தின் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்து வருவது மகிழ்வைத் தருகின்றது. மாவட்டத்தினுடைய ஏனைய பொது அமைப்புகளும் மக்களுக்கான பணிகளுக்காக முன்னின்று உழைக்க வேண்டும்.- என்றார். (ச-18)

## பாடசாலை மாணவர்களை. ஏற்றாது செல்லும் பஸ்கள்

வவுனியா, மே 30

வவுனியா ஏ-9 வீதியில் பாடசாலைகளுக்குச் செல்வதற்காக பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் மாணவர்களை இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சேவை பஸ்கள் ஏற்றிச் செல்லத் தவறி வருகின்றன.

காலை 7 மணி தொடக்கம் 7.20 மணி வரை இவ்வீதியில் செல்லும் பஸ்களில் பெரும்பாலானவை இவ்வாறு மாணவர்களை ஏற்றாது செல்வதனால் பாடசாலைக்கு மாணவர்கள் தாமதமாகவே செல்கின்றனர்.

எனவே பாடசாலை மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த நேர இடைவெளியில் இவ்வீதியில் பயணிக்கும் பஸ்கள் மாணவர்களை ஏற்றிச் சென்று அவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-402)

## காட்டு யானைகளால் விவசாயிகள் பாதிப்பு

நெடுங்கேணி, மே 30

நெடுங்கேணி பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் அந்தப் பிரதேச விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெடுங்கேணி பிரதேசத்தில் மருதோடை, அரியாமடு மற்றும் அதனை அண்மித்த பகுதியில் சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த நெற்செய்கையை யானைகள் நாசம் செய்து வருகின்றன என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கடந்த ஆண்டு பெரும்போக பயிர்ச் செய்கையில் மழையின்மையால் நட்டத்தை எதிர்நோக்கி இருந்தனர். இந்த இழப்புகளுக்கான அரச நிவாரணங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் தற்போது சிறுபோக நெற் செய்கையையும் காட்டு யானைகள் சேதப்படுத்தி வருகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

எனவே காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

## இன்றுவரை புனரமைக்கப்படாத ப.நோ.கூ.சங்க தலைமையகம்

கடந்த காலப் போரால் சேதமடைந்த முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகம் இன்றுவரை புனரமைக்கப்படவில்லை என்று அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகம் கோம்பாவில் கிராமத்தில் தற்காலிக கொட்டகையொன்றில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் அப்பகுதி இயங்கி வருகின்றது. அதனால் மக்களுக்குத் தம்மால் சீரான சேவையை வழங்க முடியாதுள்ளது என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.



புனரமைப்பின்றி சங்க தலைமையகம்

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சங்கத்தின் தலைமையகத்தை புனரமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-102)

## லஞ்ச, ஊழல் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு

வவுனியா, மே 30

வவுனியா பிரதேச செயலகத்தில் 'லஞ்ச ஊழல் ஒழிப்பு' தொடர்பான செயலமர்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்தச் செயலமர்வில் 21 அரச ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் அரச. அரச சார்பற்ற நிறுவனங்களில் ஊழல் ஏற்படும் வழிமுறைகள், அதனைத் தடுக்கும் வழிமுறைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதுடன், விழிப்புணர்வூட்டும் கருத்துகளும் முன்வைக்கப்பட்டன. இந்தச் செயலமர்வில் வவுனியா உதவிப் பிரதேச செயலர் திருமதி சா.கர்ணன், நெடுங்கேணி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் வி.ஆயர்குலன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கியுள்ளனர்.

இந்தச் செயலமர்வு லஞ்ச ஊழல் தொடர்பான விழிப்புணர்வை அரச ஊழியர் 'மத்தியில் ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது என்று வவுனியா பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (ச-402)

## அவயவங்களை இழந்தோருக்கு உதவிகளை வழங்குக

### மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை

வவுனியா, மே 30

வவுனியா மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்டு உடல் அவயவங்களை இழந்து வேலை வாய்ப்பு இல்லாதிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை அல்லது நிவாரண உதவியை வழங்குமாறு பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட போரால் அவயவங்களை இழந்த நிலையில் உறவினர்கள் ஆதரவு இன்றி அன்றாட ஜீவனோபாயத்துக்கு தினமும் கஷ்டப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வேலை வாய்ப்புக்களை வழங்க அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வரவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் கூறினர்.

உணவு மற்றும் நிவாரண வசதிகள் இன்றி பலர் பஸ் நிலையங்களிலும், வீடுகளிலும் பிச்சை எடுத்து வருகின்றனர். சிலர் அரச சார்பற்ற நிறுவனங்களிலும், உறவினர் வீடுகளிலும், வைத்தியசாலைகளிலும் தங்கி உள்ளனர்.


எனவே அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்து சுய தொழில் செய்வதற்கான மற்றும் நிவாரண உதவிகளை வழங்க வேண்டும் என்று மாற்றுத் திறனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# ஸ்மார்ட் கைபேசிகளை சார்ஜ் செய்ய உதவும் நவீன சார்ஜர்



ஒரே தடைவையில் நான்கு வரையான ஸ்மார்ட் கைபேசிகளை மின்னேற்றம் செய்யக்கூடிய சார்ஜர் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
இந்தச் சார்ஜர் ஆனது 9.6 Amps, 48 வோல்ற் மின்னோட்டத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு குதைகளிலிருந்தும் (Port) 2.4 Amps மின்னோட்டத்தை வழங்கக்கூடியதாக இருக்கும் இத்துணைச் சாதனமானது 100-240 வரையான மின்னழுத்தத்தில் செயற்படக்கூடியது. இந்தச் சாதனத்தை மேம்படுத்துவதற்கான பணத்தைப் பெறும் பொருட்டு தற்போது Kick starter தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# அதிரடி வசதியுடன் எல்.ஜி.அறிமுகமாக்கும் ஸ்மார்ட் கைபேசி




ஸ்மார்ட் கைபேசி உற்பத்தியில் ஏற்பட்டு வரும் போட்டி காரணமாக ஒவ்வொரு நிறுவனங்களும் பல்வேறு தொழில்நுட்பத்தைப் புகுத்தி புதிய ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகம் செய்கின்றன.
இதன் வரிசையில் தற்போது எல்.ஜி. நிறுவனம் மைக்ரோ எஸ்.டி. அட்டையின் உதவியுடன் சேமிப்புக் கொள்ளளவை 2ரிபி வரை அதிகரிக்கக்கூடிய வசதியுடன் தனது புதிய ஜி3 கைபேசிகளை அறிமுகம் செய்யவுள்ளது.
இதன் திரையானது 5.5 அங்குல அளவு, 2560 X 1440 பட அளவு உடைய்தாகக் காணப்படுகின்றது.
மேலும், அன்ரோய் - 4.4.2 கிற்கற் இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கைபேசியில் சினாப்ட்கொன் 801 எஸ்ஓசி புறொசெஸ்ஸர் (Snapdragon 801 SoC Processor), மற்றும் 3ஜிபி அளவுடைய நினைவகம் ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்களை உடைய காணொலி அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

# அப்பிள் அறிமுகம் செய்ய காத்திருக்கும் மற்றுமொரு 'ஐ' கடிகாரம்




அப்பிள் நிறுவனம் உட்பட மேலும் சில நிறுவனங்கள் ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.
இந்நிலையில் ஏற்கனவே தனது ஸ்மார்ட் கைக்கடிகார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அப்பிள் நிறுவனம் அதனை இந்த வருடம் அறிமுகம் செய்யவுள்ள் நிலையில், தற்போது புதிய தொழில்நுட்பத்திலும், புதிய வடிவமைப்பிலுமான மற்றுமொரு ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் களமிறங்கியுள்ளது. ஐ.ஓ. எஸ்.8 இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவுள்ள இக்கடிகாரம் பெண்களுக்காக 1.3 அங்குல அளவுடைய திரையையும், ஆண்களுக்காக 1.8 அங்குல அளவுடைய திரையையும் கொண்டதாக வடிவமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




## அஸர் அறிமுகம் செய்யும் அஸ்பயர் சுவிச் (Aspire Switch) 10 ரப்லெட்

அஸர் நிறுவனமானது தனது புத்தம் புதிய 2-in-1 ரப்லெட்டான Aspire Switch 10 ஐ அமெரிக்காவில் அறிமுகம் செய்யவுள்ளது.
349 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்த ரப்லட் ஆனது 10.1 அங்குல அளவு, 1366 X 768 பட அளவுடைய உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 16 ஜிபி அளவுடைய சேமிப்பு நினைவகத்தையும் கொண்டுள்ளது.
மேலும் விண்டோஸ் 8.1 இன் 32 பிற் இயங்கு தளத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படக்கூடிய இந்த ரப்லெட்டில் தொடுகை முறை, மற்றும் கீபோர்ட் மூலமும் இயக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.



## முப்பரிமாண புகைப்படங்களை எடுக்கக்கூடிய ரப்லெட் தயாரிப்பில் கூகுள்



பிரபல இணைய நிறுவனமான கூகுள் நிறுவனம் தயாரிப்பு ராங்கோ என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்து வருவது யாவரும் அறிந்ததே.
இந்தத் திட்டத்தின் கீழ் முப்பரிமாண புகைப்படங்களை எடுக்கக்கூடிய கமராக்களை உள்ளடக்கிய ரப்லெட் ஒன்றையும் வடிவமைக்க திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
7 அங்குல அளவுடைய தொடுதிரையைக் கொண்டதாக இந்த ரப்லெட்கள் வடிவமைக்கப்படுகின்றன.
மேலும் அடுத்த மாதமளவில் இந்தத் தொழில்நுட்பத்தைக் கொண்ட 4,000 ரப்லெட்களை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது.

> 7 அங்குல அளவுடைய தொடு திரையைக் கொண்டதாக இந்த ரப்லெட்கள் வடிவமைக்கப்படுகின்றன.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வாக்குறுதி வழங்கும் படலம் மீண்டும் ஆரம்பம்

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முதலில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், பின்னர் அதற்கும் அப்பால் சென்று தீர்வு காண வேண்டும் என்றும் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி அறுதியாக - உறுதியாக - காத்திரமாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கூறியிருக்கிறார்.

இது ஒன்றும் புதிய விடயமல்ல. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இந்திய மத்திய அரசானது இந்தப் புராணத் தையே திரும்பத் திரும்பப் படித்து வருகிறது. புதுடில்லி மீண்டும் மீண்டும் இதனை வலியுறுத்திக் கொண்டி ருந்தபோதே, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் பகிரப்பட்ட அதிகாரங்களை மீளப்பெறும் நடவடிக்கைகளையும் வடக்கு - கிழக்கு மாகாணங்களைத் தனித் தனியாகப் பிரிக்கும் நடவடிக்கையையும் இலங்கை அரசு மேற்கொண்டது. அதனை எதிர்த்து புதுடில்லியால் ஒரு துரும்பைக் கூடக் கடந்த காலங்களில் அசைக்க முடிந்திருக்கவில்லை. 13ஆவது திருத்தின் கீழ் மாகாண அரசுகளுக்கு வழங்கப் பட்ட மட்டுப்படுத்தப்பட்ட - மிகக் கீழ் மட்ட - காணி, பொலிஸ் அதிகாரங்களைக்கூட இலங்கை அரசு வழங்க வில்லை. அதற்கும் சாக்குப் போக்குகள் பலவற்றைச் சொல்லி வந்துள்ளது.

இந்தியா மீண்டும் மீண்டும் 13ஆவது திருத்தத்தில் தொங்கிக் கொண்டிருப்பதற்கான முக்கிய காரணம், அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திருத்தம் என்பது. இதன் மூலம் இந்தியா வுக்கு இலங்கையில் தலையிடும் தார்மீக உரிமை இருக்கிறது என்று புதுடில்லி கருதுகிறது. எனவே இந்தியத் தலையீடு என்பது 13ஆவது திருத்தத்திற்கு ஊடாக மட்டுமே நிகழ முடியும் என்று இந்திய ராஜதந்திரிகள் கருதுகிறார்கள்.

அதன் அடிப்படை என்னவென்றால், இந்திய - இலங்கை ஒப்பந்தம் இன்னமும் உயிர்ப்புடன் இருக்கிறது என்று புதுடில்லி கருதுகிறது என்பதுதான். ஆனால், 13ஆவது திருத்தம் செல்லாக் காசாகிப் போய் பல காலமாகிவிட்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்படி, அந்த ஒப்பந்தத்தை செயற்படுத்துகின்ற முழுப் பொறுப்பும் இந்தியாவுக்கே உள்ளது. இருந்தாலும் இந்தியா தனது அந்தக் கடமையை ஒருபோதும் செய்ததில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் புலிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் ஏற்றுக்கொள்ளாததுதான் அதற்குக் காரணம் என்று யாரும் சொல்ல முடியாது. இவர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான், ஈழத் தமிழர் பிரச்சினையைத் தனது தார்மீகப் பொறுப்பாக ஏற்றுக் கொண்டு அவர்களுக்குப் பதிலாக அந்த ஒப்பந்த்தில் கையெழுத்திட்டது இந்தியா. எனவே அதனை நடைமுறைப் படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அது எடுத்திருக்க் வேண்டும். ஆனால் செய்ய வில்லை.

அதேபோன்று, போர் முடிந்ததும் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று தான் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் இலங்கை காப்பாற்றவில்லை. 13 பிளஸ் என்பதற் குப் பதில் 13 மைனஸ் என்பதே கண்ட உண்மையாயிற்று.

இப்போது - போர் முடிந்து 5 வருடங்கள் கடந்த பின்னர் - மீண்டும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது அதற்கும் அப்பால் செல்வது என்ற கோசங்களுடன் புதுடில்லி, பழைய பல்லவியை ஆரம்பித்துள்ளது. அதனை ஏற்றுக் கொள்வதாக இலங்கை ஜனாதிபதியும் வாக்குறுதி அளித்திருக்கிறார் என்கின்றன தகவல்கள்.

இந்த நிலைமையை, சமாதான தூதராக முன்னர் பணியாற்றிய நோர்வே நாட்டின் அரசியல்வாதி எரிக் சொல்ஹெய்ம் அழகாக எடுத்துக்கூறியிருக்கிறார். "மறுபடியும் இலங்கையின் வாக்குறுதி வழங்கும் படலம் ஆரம்பம்" என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நாடுகளின் 5 ஆண்டுத் திட்டம் போன்று, இலங்கைத் தலைவரும் ஐ.நா. பொதுச் செயலருக்கு வாக்குறுதி வழங்கி 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இப்போது இந்தியாவுக்கு அடுத்த வாக்குறுதியை வழங்கியிருக்கிறார். எனவே இத்தகைய வாக்குறுதிகளை நம்பிக் கொண்டிராமல், இந்தியா காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும்.

கட்டுரை

# அது ஒரு கெட்ட கனவு

## நளினி உருக்கம்



சிறைக்கு வருவதற்கு முன்பே வாழ்க்கையில் கனவு, ஆசை, லட்சியம் என்று எதுவும் இருந்ததில்லை. வாழ்க்கையின் முக்கியமான 23 வருடங்களை சிறையில் கழித்த ஒரு பெண்ணிடம் எதிர்கால லட்சியம் என்ன? என்று கேட்டால், நான் என்ன சொல்வது? - நளினியின் ஒவ்வொரு வார்த்தையிலும் சோகம் கவிந்திருக்கும் அதே சமயம், அபாரத் தீர்க்கமும் சேர்ந்திருக்கிறது.

குற்றம் செய்யாத என்னை, இத்தனை வருடங்கள் சிறைக்காவலில் அலைக் கழித்ததை என்னால் ஏற்றுக்கொள்ளவே இயலவில்லை என்று கதறும் நளினி, சிறையில் இருக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் தனது விடுதலைப் போராட்டத்துக்கான முனைப்பிலேயே கழிக்கிறார். ராஜீவ் காந்தி கொலைவழக்கில், வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆயுள் தண்டனைக் கைதியான நளினி, விடுதலையின் வாசல் வரை சென்றும், உச்ச நீதிமன்றம் அந்த வழக்கை அரசியல் சாசன பெஞ்சுக்கு மாற்றியதால் இன்னமும் சிறையிலேயே இருக்கிறார். தந்தையைப் பார்ப்பதற்கு பரோலும் மறுக்கப்பட்ட நளினியிடம், வழக்கறிஞர் உதவியோடு மேற்கொண்ட பேட்டி இது.

**சிறைவாசம் எப்படி இருக்கிறது?**

ஒரு மனிதனைப் பல ஆண்டுகள் கட்டி வைத்தாலோ, இருட்டறையில் அடைத்து வைத்தாலோ, வானம் தெரியாத இரும்புக் கூரையின் கீழ் வாழவைத்தாலோ அவன் மனச்சிதைவு நோய்க்கு ஆளாகிவிடுவான். நான் 23 ஆண்டுகளாகத் தனிமைச் சிறையில் இருக்கிறேன். ஓர் ஆயுள் தண்டனைக் கைதிக்குரிய எந்தச் சலுகைகளும் எனக்கு வழங்கப்படவில்லை. எனக்கு வழங்க வேண்டிய விடுமுறைக்குக்கூட நான் நீதிமன்றத்தில் போராட வேண்டியுள்ளது. சிறை, அதன் அளவில் வகுத்துள்ள சுதந்திரத்தைக்கூட எனக்கு வழங்கவில்லை. நான் இங்கு எவருடனும் பேச முடியாது.

வேலூர் பெண்கள் சிறையில், 10 முதல் 12 குழந்தைகள் வரை இருக்கிறார்கள். என்னைப் போன்ற கைதிகளுக்குப் பிறந்த குழந்தைகள் அவை. அந்தக் குழந்தைகளை நான் தொட்டுத் தூக்கவோ, கொஞ்சவோ கூடாது. எனது சுதந்திரத்தின் அளவை, அதன் தன்மையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதைச் சொல்கிறேன்.

பெண் சிறைவாசிகளும் என்னைச் சரியாகப் புரிந்துவைத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இங்குள்ள பெரும்பாலான பெண் கைதிகள், சபிக்கப்பட்டவர்கள்; அவ்வப்போது வந்து செல்கிறவர்கள். சிறைக்குள் வந்துவிட்ட பிறகு பெரும்பாலும் சமூகமும் உறவுகளும் அவர்களைக் கைவிட்டுவிடுவதால், சிறை அதிகாரிகள் மனம் வைத்தால் மட்டுமே விடுதலை என்று அவர்களை, கடவுளைப் போல நம்பத் தொடங்கி விடுகிறார்கள். அது பயமும் மிரட்சியும் கலந்த பக்தி.

இவளால்தான் ஆயுள் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு கிடைப்பது இல்லை; இவளால்தான் நமக்கும் பரோல் விடுப்பு கிடைப்பது இல்லை என்று நம்ப வைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் என்னோடு பேசத் தயங்குகிறார்கள். உணர்வுகளை மரத்துப்போகச் செய்யும் சிறை வாழ்வில், மாதம் இரு முறை என் மகள் அரித்ராவுக்கு நான் எழுதும் கடிதங்களும், கடவுளோடான எனது பிரார்த்தனைகளுமே நான் சிதைந்து போகாமல்என்னைக் காப்பாற்றிவருகின்றன!

**நீங்கள் பரோலில் வெளிவருவதை உங்களின் உறவினர்களே விரும்பவில்லையாமே?**

அப்படி இல்லை. என் அப்பாவின் உடல் நிலை மோசமாக இருக்கிறது. அவரைப் பார்ப்பதற்காகப் பரோல் கேட்டேன். என்னைப் பரோலில் விட்டால், கூடவே 50, 100 காவலர்கள் ஒரு பட்டாளம் போல் என் பின்னால் வருவார்கள். நான் எங்கு தங்குகிறேனோ, அங்கே அவர்கள் காவல் இருப்பார்கள். செலவு அதிகமாகும் என்பது ஒரு பயம். இன்னொரு பயம், தேவை இல்லாமல் இன்னும் ஏதேனும் பிரச்சினைகள் வருமோ என்பது. என் பரோல் மீதான வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால், அதை நான் சட்டரீதியாகவே சந்திக்க விரும்புகிறேன்.

**சிறை நன்னடத்தை விதிகள் எந்த வகையிலாவது உங்கள் விடுதலையைப் பாதிக்குமா?**

அப்படி ஒரு பழியைச் சுமத்த முயன்றார்கள். இன்று அந்த நிலை இல்லை. எந்த விதத்திலும் என்னை விடுதலை செய்துவிடக் கூடாது என்று கடந்த 15 ஆண்டுகளாக அடுக்கடுக்காகக் குற்றச் சாட்டுகளைச் சுமத்தினார்கள். முதலில் தண்ணீர் பிடிக்கப்போன இடத்தில் நான் பிரச்னை செய்ததாகச் சொன்னார்கள். பிறகு, என் கணவர் முருகனை, சிறைத் துறைக்கு எதிராகத் தூண்டிவிட்டதாகச் சொன்னார்கள். மொபைல் பயன்படுத்தினேன் என்றார்கள். இவற்றை நீதிமன்றம் கண்டித்து நிராகரித்தது. சிறை விதிகள் அனுமதிக்கும் சலுகைகளைக் கூட எனக்குக் கொடுப்பது இல்லை. மேலதிகமாக எந்த உரிமைகளையும் நான் கேட்டுப் பெறவில்லை. ஆனாலும், என் நடத்தை மீது களங்கம் கற்பிப்பதில் சிலர் குறியாக இருந்தார்கள்.

**உங்கள் மகள் அரித்ராவுக்கு 23 வயதாகிவிட்டது. அவருடைய எதிர்காலம் குறித்து என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?**

அரித்ராவை நான் பார்த்தே எட்டு வருடங்கள் ஆகின்றன. நாங்கள் விடுதலை ஆவோம் என்ற நம்பிக்கையில் இருந்தாள். எங்களைச் சந்திப்பதற்காக அவள் விசாவுக்கு விண்ணப்பித்த போதும், அதைக் கொடுக்கவில்லை. 15 நாள்களுக்கு விசா அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டும், தரவில்லை. இப்போது பட்டப்படிப்பை முடித்திருக்கிறாள். மேற்படிப்பா, வேலையா என்பதை அவளே முடிவு செய்வாள். முழுமையான ஒரு வாழ்வை அவளுக்குப் பரிசாக அளிக்க முடியாவிட்டாலும், அவளது வாழ்க்கையே, எங்கள் எதிர்கால அடிப்படை என்பதை மட்டும் உணர்ந்திருக்கிறேன்!

**முருகனைக் காதலித்ததால்தான் நீங்கள் தண்டிக்கப்பட்டதாக நினைக்கிறீர்களா?**

ஆமாம்... நிச்சயமாக! கடைசி வரை எனது காதலில் உறுதியாக இருந்தேன். நான் காதலித்தபோது அவர்களைப் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றேன். மொழி புரியாதவர்களுக்கு, நான் என் னால் ஆன உதவிகளைச் செய்ததைத் தவிர எனக்குத் தெரிந்து நான் எந்தத் தவறும் செய்யவில்லை. இந்த வழக்கில் சிக்கவைக்கப்பட்ட பின்னர், எனது கணவரிடம் இருந்து என்னைப் பிரித்து, அவருக்கு எதிராக என்னைப் பயன்படுத்த முயன்றார்கள். நான் மட்டுமல்ல, இந்த வழக்கின் தேவைக்காகப் பல குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. சிலர், பொலிஸாரின் அழுத்தங்களையும் மீறி குடும்ப வாழ்வில் உறுதியாக நின்றார்கள். வேறு சிலர் பிரிந்துபோனார்கள்!

**வேலூர் சிறையில் பிரியங்கா காந்தி உங்களைச் சந்தித்தபோது, என்ன பேசிக் கொண்டீர்கள்?**

அதை ஒரு கெட்ட கனவாக நினைத்து மறக்க நினைக்கிறேன். அந்தச் சந்திப்பையொட்டி உருவாக்கப்பட்ட செய்திகளும் கருத்துகளும் எனக்குள் மோசமான விளைவுகளை உருவாக்கி விட்டன. அதனால் பட்ட வேதனைகளை, வலிகளை நான் மட்டுமே அறிவேன்.

அன்று சிறையில் அசாதாரணமான சூழல் நிலவியது. நடமாடுவதைத் தடைசெய்து அனைத்துக் கைதிகளையும் சிறைக்குள் அடைத்தார்கள். திடீரென் சிறைக் கண்காணிப்பாளர் அழைப்பதாகச் சொல்லி, என்னை அழைத்துச் சென்றார்கள். அவரது அறைக்குள் சென்றபோது அங்கு ஒரு பெண் அமர்ந்திருந்தார். அவரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. நான் சென்றதும் சிறைக் கண்காணிப்பாளர் எழுந்து வெளியில் சென்றுவிட்டார். வந்திருந்தவர், தன்னை பிரியங்கா காந்தி என்று அறிமுகம் செய்துகொண்டபோது நான் குழம்பிவிட்டேன். இவருடன் பேசுவதா... வேண்டாமா? என்று யோசிக்கத் தொடங்கினேன். ஆனால், சிறைக் கைதிக்குரிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த எனக்கு, அந்தச் சூழ்நிலையில் அவருடன் பேசுவதைத் தவிர வேறு எந்த வழியும் இருக்கவில்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்குப் பற்றியும், விசாரணை முறை பற்றியும் எனது காதல், திருமணம் என்பன பற்றியும் பிரியங்கா கேட்டார்.

உங்கள் தந்தையின் கொலை யில், நான் மட்டும் அல்ல, முருகன், சாந்தன், பேரறிவாளனும் நிரபராதிகள்தான் என்றேன். அதை அவர் நம்பினாரா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், அந்தச் சந்திப்பு முழுவதும் கொந்தளிப்பான ஒரு மன நிலையில் அவர் இருந்தார். ஒரு தந்தையை இழந்த இளம் பெண்ணின் வேதனையாகவோ, மன எழுச்சியாகவோ அது இருக்கலாம். நான் அதை அப்படித்தான் புரிந்துகொண்டேன்..

பிரியங்காதான் என்னை விரும்பிச் சந்தித்தார். ஏழு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், அதற்கான பழியை மட்டும் நான் சுமந்துகொண்டிருக்கிறேன். அவரவர் லாபங்களுக்காக, என்னை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்திக்கொண்டார்கள்!

**பிரியங்காவுடனான அந்தச் சந்திப்புத்தான் உங்களுக்கும் முருகனுக்கும் இடையில் மனக்கசப்பை உருவாக்கியதா?**

எந்த உறவுகளுக்குள்தான் மனக்கசப்போ, மனக்காயமோ இல்லை? திருமணம் செய்து நாங்கள் சேர்ந்து வாழ்ந்தது நான்கே நான்கு நாள்கள்தான். இரு வேறு சிறைகளில் 23 ஆண்டுகளாக இருக்கிறோம். உளவியல் ரீதியாகப் பல்வேறு நெருக்கடிகளைச் சந்திக்கும்போது, மனக் கசப்பு ஏற்படாமல் இருக்குமா? மன வருத் தங்கள் இருந்தது உண்மை. ஆனால், அதற்கு பிரியங்காவின் சந்திப்பு காரணம் அல்ல... வேறு சில பிரச்சினைகள்தான் காரணம். அவை யும் இப்போது சரியாகி விட்டன. எங்களுக் குள் இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. பிரச்சினை எல்லாம் இந்த 810 என்ற எண் குறிக்கப் பட்ட கைதி உடைதான்!

-நன்றி விகடன்

# வடமாகாணத்தின் கல்வி அடைவு நிலையை

## மேன்மைப்படுத்துவதற்கான செயற்றிட்டம்

அம்பலவாணர்
சண்முகலிங்கம்
(யாழ்.இந்துக்கல்லூரி)

அண்மையில் வடமாகாணக் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட கல்வி ஆலோசனை செயலமர்வு - 2014 - இன் உள்நோக்கங்களை ஒட்டியதாக, மேற்படி தலை யங்கத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் முப்பத்தைந்து வருடப் பட்டறிவின் வெளிப் பாடாக கல்வியியல்சார் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பொருத்தமான சூழ்நிலையில் குறிப்பிட்டு எழுதுவது கட்டுரை ஆசிரியரின் நோக்கமாகும்.

"கற்றல் - கற்பித்தல் செய்முறையில் தொழில் பிரிப்பும், சிறப்புத் தேர்ச்சியும் என்ற கருப்பொருளில் எனது செயற்றிட்டத்தை முன்வைக்கின்றேன். (The Division of work and Specialization on Teaching-Hearing)

செயற்றிட்டத்தின் நோக்கம்:-

பாடசாலையின் பார்வையில்:-

1.க.பொ.த. (சா/த) (உ/த) கற்கை நெறிகளில் நூறு வீதம் (100%) சித்தியடைவு.

2.பாடசாலை மட்டத்தில் மாணவர் வரவை நூறு வீதமாகப் (100%) பதிவு செய்தல்.

3.பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் அதிசிறந்த ஒழுக்க விழுமியத்தைப் பேணல்.

4.ஆசிரிய வளங்கள் - மற்றும் மாணவ வளங்களின் பலம் மற்றும் பலவீனம் என்பவற்றை இனங்கண்டு பலத்தை மேம்படுத்தலும், பலவீனத்தை நீக்குதலும்.

5.பொருத்தமான ஆசிரிய வளத்தினூடாக மாணவர்களை இலகுவாக வழி நடத்துதல்.

**ஆசிரியர்களின் பார்வையில்:-**

1.கற்றல் - கற்பித்தல் செய்முறையில் ஆசிரியர்கள் மனவிருப்புடன், விரும்பிய பாடத்துறையில் ஈடுபட்டு ஆத்ம திருப்தியை அடைதல்.

2.மாணவர்களின் பலத்தையும், பலவீனத்தையும் அறிந்து அவர்களைக் கையாளல்.

3.பொருத்தமான கற்பித்தல் -நுட்ப முறைகளைக் கையாண்டு வழிகாட்டல்.

4.மாணவர்களின் ஒழுக்க நெறியை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பேணுதல்.

5.ஆசிரியர்களின் பாடப் புலமையில் மொழிற்பிரிவும் சிறப்புத் தேர்ச்சியும் உருவாகுதல்.

6.பாடத்திட்டத்தினை குறித்த கால அட்டவணைக்குள்ளே நிறைவு செய்தல்.

7.ஆசிரியரது வரவீனம் மாணவர்களின் கற்றல் வாய்ப்பைப் பாதிக்காது. காரணம் சமகாலத்தில் பதிலாசிரியர்கள் கடமையாற்றல் நிகழ்தல்.

8.ஆசிரிய வளமானது புலமைத்துவப் போட்டியூடாக மேன்மையடையும்.

9. குறித்த பாடத்தைக் கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களும், எல்லா மாணவர்களுக்கும் கற்பிப்பதால் எல்லா மாணவர்களாலும் மதிக்கப் படுவர்.

10.ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கிடையில் முக்கோணச் சந்திப்பும், புரிந்துணர்வும், களநிலைமைகளும் கலந்தாலோசிக்கவும், பரிசீலிக்கவும் முடியும்.

**மாணவரது பார்வையில்:-**

1.ஒரு பாடத்தின் பல அலகுகளை வெவ்வேறு ஆசிரியர்களிடம் கற்கும் வாய்ப்பு ஏற்படுவதால் வேறுபட்ட கற்பித்தல் நுட்பமுறையினால் நிறைவான மனத்திருப்தியைப் பெறுவர்.

2.மாணவர்கள் - முழுமையாக (காலை 8.00 பிற்பகல் 2.00 வரை) கற்றல் செய்முறையில் ஈடுபடுவர்.

3.மாணவர்கள் தமது சிறந்த இலக்கை (100% சித்தியை) அடைவர்.

4.மாணவர்கள் சிறந்த மேற்பார்வை அணியில் கீழ் வளர்த்தெடுக்கப்படுவார்கள்.

5.மாணவர்கள் சுய விருப்புடன் கற்க பாடசாலைக்கு சமூகமளிப்பதால், வரவீனம் படிப்படியாக குறைந்து - வரவு 100% இலக்கை அடையும்.

6.மாணவர்களது ஒழுக்க விழுமியம் பாடசாலைக்கு உள்ளேயும், வெளியேயும் உயர்ந்த நிலையில் பேணப்படும். காரணம் எல்லா ஆசிரியர்களும், எல்லா மாணவர்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதனாலாகும்.

7.மாணவர்கள் தமது இடர்களை எந்தவொரு ஆசிரியரிடமும் சிநேகிதமான முறையில் வெளிப்படுத்தி தீர்வைக் காண முடியும்.

8.மாணவர்கள் முழு ஆர்வத்துடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

9.பொருத்தமான விளையாட்டு மற்றும் ஆக்கத் திறன்களை /தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

**பெற்றோர் பார்வையில்**

1.பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கீழ்படிந்து மாணவர்கள் நடப்பார்கள்.

2.பெற்றோர், தமது பிள்ளைகள் தொடர்பான கற்றல் - கற்பித்தல் செயற்பாடு மற்றும் ஒழுக்க நடத்தைக் கோலங்களை, வகுப்பாசிரியர் மற்றும் பாட ஆசிரியர்களைச் சந்தித்துக் கருத்துப் பரிமாற வாய்ப்பு உண்டு.

3.பெற்றோர், பிள்ளைகளால் ஏற்படக்கூடிய மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற முடியும்.

4.பெற்றோர் தமது பிள்ளைகளை நல்ல முறையில் பேணி வளர்க்க முடியும்.

5.பெற்றோர், ஆசிரியர்களுடனும் பாடசாலை நிர்வாகத்தினருடனும் ஒத்துழைப்பு நல்கி திறம்பட செயற்பட முடியும்.

**புதிய கற்றல் - கற்பித்தல் செய்முறைத் திட்டத்தின் படிமுறை ஒழுங்குகள்:-**

1.ஒன்றுக்கு மேற்பட்ட சமாந்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளில் குறித்த பாடத்துக்குரிய ஆசிரிய வளத்தை, குறித்த தர வகுப்புகளுக்கு முழுமையாக ஒதுக்குதல் (உ+ம்) க.பொ.த. (உ/த) பிரிவில் ஐந்து சமாந்தர வகுப்புக்கள் உள்ளன எனவும், ஐந்து பாட ஆசிரியர்கள் உள்ளனர் எனவும் கருதுக. ஐந்து ஆசிரியர்களையும், ஐந்து வகுப்புக்களுக்கும் பாட அலகுகளை கற்பிக்க நியமித்தல்.

2.ஒரே நேரத்தில் (பாடவேளையில்) குறித்த அலகை சமாந்தர வகுப்புகளுக்கு கற்பிக்க அட்டவணைப்படுத்தல். இதனால் நேரசூசியில் ஏற்படும் மோதல் தவிர்க்கப்படும். நேரசூசியை இலகுவாகத் தயாரிக்க முடியும்.

(உ+ம்) கணித பிரிவில் 1 ஆம் தவணைக்குரிய பாட அலகுகள் 5. ஐந்து வகுப்புக்களுக்கும் கற்பிப்பதற்கு ஐந்து ஆசிரிய வளங்கள் உள்ளன எனக் கொள்க. அதன்படி நேரசூசியை பின்வருமாறு அமையும்.

| சமாந்தர வகுப்புகள் / பாட அலகு | தரம் 12A | தரம் 12B | தரம் 12C | தரம் 12D | தரம் 12E |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் அலகு | அ | ஆ | இ | ஈ | உ - ஆசிரியர் குழு |
| 2 ஆம் அலகு | உ | அ | ஆ | இ | ஈ - ஆசிரியர் குழு |
| 3 ஆம் அலகு | ஈ | உ | அ | ஆ | இ - ஆசிரியர் குழு |
| 4ஆம் அலகு | இ | ஈ | உ | அ | ஆ - ஆசிரியர் குழு |
| 5ஆம் அலகு | ஆ | இ | ஈ | உ | அ - ஆசிரியர் குழு |

✱ ஒவ்வொரு அலகும் கற்பித்த பின்பு, அலகு அடிப்படையில் பரீட்சை நடத்தி மாணவர்களின் அடைவை மதிப்பீடு செய்தல். உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற முதல் பத்து (Top ten) மாணவர்களுக்கு பரிசு வழங்கல். 40 புள்ளி களுக்கும் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாண வர்களுக்கு பரிகார கற்பித்தல் மேற்கொள்வதுடன் தொடர்ச்சியாகக் கண்காணித்தலும்.

✱ இவ்வாறு ஒவ்வொரு தவணைக்கும் பாட அலகுகளையும், ஆசிரிய வளத்தையும் சிறந்த சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்வதன் மூலம் எல்லா ஆசிரியர்- மாணவர் அறிமுகத்தையும், நல்லுறவையும் பேணுதல் மூலம் உயர்ந்த கல்வித் தரத்தைப் பேண முடியும்.

3.ஒருதுறைக்கு, ஒரு வகுப்பு மட்டும் உள்ள பாடசாலைகளில் குறித்த பாடத்தைக் கற்பிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய வளங்கள் உள்ள நிலையில் பாடவேளையை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய வளங்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் உத்தமமான பெறுபேற்றை அடையமுடியும். ஆசிரிய வளமும் உத்தமமாக பயன்படுத்தப் படும்.

(உ+ம்)கணித பாடம்

| 1 ஆம் தவணை | தரம் 12 | |
|---|---|---|
| | அலகு 1 | அ |
| | அலகு 2 | ஆ |

அலகு ஒன்று கற்பித்து முடிந்ததும் அலகுப் பரீட்சையை நடத்தி மாணவரது பெறுபேறுகளை மதிப்பீடு செய்து உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற(75%) மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும், (40%) குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தலையும் மேற்கொள்ளல்.

4. பாடவேளை முடிந்த பின்பு, அதே ஆசிரிய குழுவினர், மாணவர்களின் குறிப்புக் கொப்பிகளை பார்வையிட்டு, திருத்தங்கள் செய்த பின்பு மாணவரிடம் ஒப்படைத்தல். இதன் மூலம் மாணவரிடையே காணப்படக்கூடிய திறமை, திறமையினங்களை இனங்காண முடியும்.

5.ஒரே பாடத்துக்குரிய குறித்த ஆசிரியர் குழுவில் தரவட்ட செயற்பாடும், பாடத்தை திட்டமிடல், கற்றல் நுட்பங்களைக் கையாளல், வினா - விடை தயாரிப்பு, புள்ளித் திட்ட தயாரிப்பு, மதிப்பீட்டுப் பணிகளில் ஒற்றுமையாக தொழிற்பட முடியும். அனுபவங்களைப் பகிர முடியும்.

6.வருடாந்த பாடத்தினம் கொண்டாடப்படுதல் (உ+ம்) கணிததினம், விஞ்ஞான தினம், சமூக விஞ்ஞான தினம், சூழலியல் தினம், வர்த்தக தினம் (சங்கங்கள், மன்றங்கள் மூலம்)

7.தவணைப் பரீட்சைகளுக்குரிய மாணவர்களது அடைவு மட்டம் பற்றிய அறிக்கைகளை அதிபருக்குச் சமர்பித்தல்.

குறித்த பாடத் துறையில் புள்ளிகள் (40%) குறைவாக உள்ள மாணவர்களை - வேறு பாடத்துறையைத் தெரிவு செய்ய வழிகாட்டலும், ஆலோசனை வழங்கலும். இதனை 1 ஆம் தவணையிலேயே தீர்மானித்தல் வேண்டும். (உ+ம்) கணிதப் பிரிவிலிருந்து, வர்த்தகப் பிரிவுக்கு மாற்றம்.

8.பகுதித் தலைவரும், பாட இணைப்பாளரும் இணைந்து, அலகுப் பரீட்சைக்கான கடமைகளை - ஆசிரிய வளங்களிடையே பங்கிடுதலும், தொடர்ந்தும் அலகுப் பரீட்சைகளை நடத்தலும், பரீட்சை வினாக்கள் - விடைகள் அடங்கிய தொகுப்பு நூல் தயாரித்தல்.

9.முக்கிய பாட நெறிகளுக்குரிய பாடங்களை காலை நேரத்திலும் ஏனைய பாடங்களை இடை வேளைக்குப் பின்பும் 7ஆம், 8ஆம் பாட வேளைகளுக்கு ஒதுக்கீடு செய்தல் (உ+ம்) கணித, உயிரியல், வர்த்தகம், கலை, தொழில்நுட்பம் என்பவற்றுக்குரிய பாடங்களை காலை வேளையில் கற்பித்தல். சாதாரண தரத்துக்குரிய 6 பாடங்களையும் காலைவேளையில் கற்பித்தல்.

10.உயர்தர பிரிவு மாணவர்களுக்கு மட்டும் இருபாட வேளைகள் ஓய்வாக இருப்பதனால் 7 ஆம், 8 ஆம் பாடவேளைகளில் பல்வேறு விளையாட்டுக்களுக்கு ஒதுக்கீடு செய்தல். (உ+ம்) உள்ளக விளையாட்டுக்களான சதுரங்கம், பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், கரம் அடித்தல் ஆகியவற்றையும் வெளியக விளையாட்டுக்களான மட்டைப் பந்தாட்டம், உதைபந்தாட்டம்.



ஒரு துறைக்கு, ஒரு வகுப்பு மட்டும் உள்ள பாடசாலைகளில் குறித்த பாடத்தைக் கற்பிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய வளங்கள் உள்ள நிலையில் பாட வேளையை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய வளங்களுக்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் உத்தமமான பெறு பேற்றை அடைய முடியும். ஆசிரிய வளமும் உத்தமமாக பயன்படுத்தப்படும்.

மேற்குறித்த செயலொழுங்கின்படி செயற்படும் போது பௌதிக வளங்களும், ஆசிரிய வளங்களும், மாணவ வளங்களும் சிறப்புத் தேர்ச்சியுடன் சிறந்த கல்வி அறிவு, திறன்/தேர்ச்சி மற்றும் மனப்பாங்கு என்பவற்றுடன் கல்வி இலக்கையும், வாழ்க்கை இலக்கையும் எய்த முடியும். மேற்படி கல்விச் செயற்றிட்டத்தை நன்கு ஆராய்ந்து இதன் பலாபலன்களை அனை வரும் பெறுவதற்கு கல்விமான்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த நிறுவனங்களும் தத்தம் பார்வையில் விமர்சனங்களையும் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவித்து இந்தச் செயற்றிட்டம் முதலில் வடமாகாண மட்டத்தில் பின்பற்றப்படுவதற்கு உதவுமாறும் எல்லோரையும் வேண்டிக்கொள்கிறேன்.



# மீனவரின் பிரச்சினைக்கு தீர்வாக 5 தீர்மானங்கள்

## இராமேஸ்வரம் மீனவர் அமைப்புக்கள் நிறைவேற்றின

இரமாநாதபுரம், மே 30
இருநாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வாகத் தடை செய்யப்பட்ட வலைகளை மீனவர்கள் பயன்படுத்தக்கூடாது என்பது உள்ளிட்ட 5 தீர்மானங்களை இராமேஸ்வரம் மீனவர் அமைப்புக்கள் நிறைவேற்றியுள்ளன.

இராமேஸ்வரம் துறைமுகத்தில் சிறுபான்மை விசைப் படகு மீனவர் சங்கத் தலைவர் மகத்துவம் தலைமையில் மீனவர் அமைப்புகள் மற்றும் படகு உரிமையாளர்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட மீனவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், தடைக்காலத்தின் பின்னர் மீனவர்களுக்கு மீன்பிடியின்போது எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தனர்.

முக்கியமாக இலங்கை மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது எனக் கருத்துக் கூறப்பட்டது.

இலங்கை மீனவர்களுக்கு எதிராக மீன்பிடித் தொழில் செய்யக்கூடாது. இரு நாட்டு மீனவர்களின் பிரச்சின்னைக்குக் காரணமான தடை செய்யப்பட்ட வலைகளை இனி மேல் பயன்படுத்தக்கூடாது. தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் படகு உரிமையாளர் மற்றும் மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்ய வலியுறுத்துவது. அரசால் வழங்கப்படும் மீன்பிடி அனுமதியைப் பெற்றுத்தான் மீன் பிடிக்கச் செல்லவேண்டும். படகுகளில் உரிய ஆவணங்கள் இன்றி மீன்பிடிக்கச் செல்லக்கூடாது என 5 தீர்மானங்கள் பிரதானமாக நிறைவேற்றப் பட்டுள்ளன. (த-14)


கோப்புப்படம்

**முக்கியமாக இலங்கை மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது எனக் கருத்துக் கூறப்பட்டது.**

### ஜூன் 4 ஆம் திகதி முதல் கூட்டத்தொடர்

புதுடில்லி, மே 30
16 ஆவது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் ஜூன் 4 முதல் 12ஆம் திகதி வரை நடைபெறும் என மத்திய அமைச்சரவைக் கூட்டத்தொடரில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நரேந்திர மோடி தலைமையிலான புதிய அரசு கடந்த திங்கட்கிழமை பதவி ஏற்றது. இதனைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில், கறுப்புப் பணத்தை மீட்கச் சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் புதன் கிழமை மீண்டும் மத்திய அமைச்சரவை கூடுவதாக இருந்தது. ஆனால், கூட்டம் நேற்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. அதன்படி, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று டில்லியில் அமைச் சரவைக் கூட்டம் நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில், நாடாளு மன்றத்தின் முதல் கூட்டத் தொடரை ஜூன் 4 ஆம் திகதி தொடங்கி 12 ஆம் திகதி வரை நடத்தப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜூன் 4 மற்றும் 5 திகதியில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்பர் என்றும் ஜூன் 6 ஆம் திகதி மக்களவைச் சபாநாயகர் தேர்வுசெய்யப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

### தமிழக பா.ஜ.கவுக்கு புதியதொரு தலைவர்

சென்னை, மே 30
மத்திய இணை அமைச்சராகப் பொன்.ராதாகிருஷ்ணன் பொறுப்பேற்றுள்ளதை அடுத்து, தமிழக பா.ஜ.கவுக்கு விரைவில் புதிய தலைவரொருவர் நியமிக்கப்படுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழக பா.ஜ.க. தலைவரான பொன்.ராதாகிருஷ்ணன் நாடாளுமன்றத் தேர்தலில் கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதைத் தொடர்ந்து மோடியின் அமைச்சரவையில் அவர் கனரகத் தொழிற்சாலைகள் மற்றும் பொது நிறுவனங்கள் துறையின் இணை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார். அவர் அமைச்சர் பொறுப்பை ஏற்றுள்ளதால் தமிழக பா.ஜ.கவிற்கு விரைவில் புதிய தலைவர் ஒருவர் அறிவிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. (த)

# பாகிஸ்தானுடன் சுமுக உறவு ஏற்படுத்த இந்தியா விருப்பம்

## சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு

புதுடில்லி, மே 30
பாகிஸ்தானுடன் சுமுக உறவை ஏற்படுத்தவே இந்தியா விரும்புகிறது என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

தனது அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:-

இந்தியாவின் பலத்தை உலக நாடுகளுக்குத் தெரிவிக்க முக்கியத்துவம் அளிக்கப்படும். அண்டை நாடுகள், ஆசியான் உறுப்பு நாடுகள், ஆபிரிக்க நாடுகளுடன் உறவு மேம்படுத்தப்படும். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் நடத்திய பேச்சில், தீவிரவாத நடவடிக்கைகள் தொடர்ந்தால், இரு தரப்புப் பேச்சு பலன் அளிக்காது. குண்டு வெடிப்புச் சத்தத்தில் அமைதிப் பேச்சின் சத்தம் கேட்காது எனப் பிரதமர் நரேந்திர மோடி தெளிவாகக் கூறிவிட்டார்.


சுஷ்மா சுவராஜ்

மும்பை குண்டு வெடிப்பு விசாரணையைப் பாகிஸ்தான் துரிதப்படுத்தவேண்டும் எனப் பாகிஸ்தானிடம் இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது. சார்க் நாடுகளின் தலைவர்களுடன், பிரதமர் மோடி நடத்திய பேச்சு வெற்றிகரமாக முடிந்துள்ளது.

இரு தரப்பு பிரச்சினைகள் காரணமாகவே, சார்க் அமைப்புக்கு அடையாளம் கிடைக்கவில்லை. இரு தரப்பு பிரச்சினைகள் தீர்ந்தால், சக்தி வாய்ந்த அமைப்பாக சார்க் உருவெடுக்கும். இந்தியாவில் தற்போது பதவி ஏற்றுள்ள பிரதமரும், அரசும் வித்தியாசமாகச் சிந்திக்க கூடியவர்கள் என்பதை சார்க் நாடுகளின் தலைவர்கள் முதல் முறையாக உணர்ந்துள்ளனர்- என்றார். (த)



# அதிரடித் தடையை விதித்தார் மோடி அதிர்ச்சியில் மத்திய அமைச்சர்கள்

புதுடில்லி, மே 30
மத்திய அமைச்சர்கள் தங்களது உறவினர்களை தனிப்பட்ட அதிகாரிகளாக நியமிக்கக் கூடாது எனப் பிரதமர் நரேந்திர மோடி தடை விதித்துள் ளார்.

பிரதமர் மோடி, தனது அமைச்சரவைச் சகாக்களுக்கு தாமே கையெழுத்திட்டு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில், எந்தவொரு அமைச்சரும், தத்தமது உறவினர்களைத் தமது தனிப்பட்ட அதிகாரிகளாக நியமிக்கத் தடை விதித்துள் ளார். அமைச்சர்கள் தாங்களது தனிப்பட்ட அதிகாரிகள் நிய மனத்தில் பின் பற்ற வேண்டிய விதிமுறைகளையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சர்கள் தங்கள் செலவினங்களைக் குறைக்க வேண்டும். மக்களுடன் நேரடித் தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் உத்தர விடப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சர்கள் தங்களது தனிப்பட்ட அதிகாரிகளை நியமனம் செய்வதில், பிரதமர் தலையிட்டு உத்தரவு பிறப்பித்திருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# கோவை மேயர் வேலுசாமி திடீரெனப் பதவி விலகினார்

## அ.தி.மு.க. பொறுப்பிலிருந்தும் நீக்கம்

சென்னை, மே 30
கோவை மேயர் பதவியில் இருந்து செ.ம.வேலுசாமி திடீரென விலகினார். அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சிறிது நேரத்தில் இந்த முடிவை அவர் எடுத்துள்ளார்.

கோவை மேயராகவும் மாநகரின் மாவட்ட அ.தி.மு.க. செயலாளராகவும் இருந்தவர் செ.ம.வேலுசாமி. கடந்த செவ்வாய்க்கிழமை [illegible] இவரை மாவட்டச் செயலாளர் பதவியிலிருந்து நீக்குவதாக முதல்வரும் அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா அறிவித்தார்.

புதிய மாவட்டச் செயலாளர் நியமிக்கப்படும்வரை அந்தப் பொறுப்பை கோவை புறநகர் மாவட்டச் செயலாளரும், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி கவனிப்பார் [illegible] அறிவித்தார்.


செ.ம.வேலுசாமி

இந்நிலையில், தனது மேயர் பதவியில் இருந்து செ.ம.வேலுசாமி விலகியுள்ளார். கட்சிப் பொறுப்பில் இருந்து விடுவிக்கப் பட்ட சிறிது நேரத்தில் அதாவது கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 11 மணி அளவில், மாநகராட்சி ஆணையர் ஜி.லதாவிடம் தனது பதவி விலகல் கடிதத்தை அவர் வழங்கினார்.

இதையடுத்து, துணை மேயராகப் பொறுப்பு வகித்து வரும் லீலாவதி உன்னி, மேயர் பொறுப்பைக் கூடுதலாகக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். (த)

# ராகுல் காந்தி ஒரு கோமாளி

## காங்கிரஸ் தலைவா கருத்து

புதுடில்லி, மே 30
காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி ஒரு கோமாளி என்று கேரள மாநில காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் முஸ்தபா கூறியுள்ளார்.

கேரள காங்கிரஸ் முன்னாள் முதல்வர் கருணாகரன் தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த முஸ்தபா சட்டப் பேரவைத் தேர்தலில் 5 முறை வெற்றிபெற்றவர். அவர் செய்தி [illegible] பேசுகையில், பிரதம பதவி வகிப்பது என்பது விளையாட்டுக் காரியம் அல்ல. ராகுல் ஒரு கோமாளி என்பது பொதுமக்களுக்குத் தெரிந்திருப்பதால் தான் காங்கிரஸ் படுதோல்வி அடைந்துள்ளது.

மேலு[illegible]டியாக அவர் [illegible] [illegible]ளில் [illegible] [illegible] [illegible] [illegible]டுப் பி[illegible] [illegible]களைக் கொடுக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (த)

# பேஸ்புக் உரிமையாளருக்கு ஈரான் நீதிமன்றம் அழைப்பு

தெஹ்ரான், மே 30

பேஸ்புக் தளத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான மார்க் சக்கர்பேக்குக்கு ஈரானிய நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.



மார்க் சக்கர்பேக்

மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை இரகசியங்களை பேஸ்புக் திருடுவதாகக் கூறி இந்த அழைப்பாண்ணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஈரான் செய்தி நிறுவனமான இஸ்னா வெளியிட்டுள்ள செய்தியில், பேஸ்புக்கில் உறுப்பினர்களாக உள்ள ஈரான் நாட்டினருக்கு, பேஸ்புக்கின் சில செயற் பாடுகள் தனிப்பட்ட அவர்களது வாழ்க்கையின் இரகசியங்களில் தலையிடுவதாக முறைப்பாடு எழுந்தது. இதையடுத்து ஈரான் நீதிமன்றம் அழைப்பானை பிறப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, ஈரான் நீதிமன்றம் கடந்த வாரம் இன்ஸ்டாகிராம் என்னும் சமூக வலைதளத்துக்குத் தடை விதித்து உத்தரவிட்டது.

ஆனாலும், ஈரானிய மக்கள் இன்னமும் இந்த இரண்டு வலைத்தளங்களையும் தொடர்ந்து தங்கு தடையின்றிப் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த உக்ரைன் படையினரின் தாக்குதல் ஹெலி ஒன்று நேற்று கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் ஜெனரல் தர இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 14 படையினர் உயிரிழந்தனர்.

# கௌரவக் கொலையை பொலிஸ் தடுக்கவில்லை

## உயிரிழந்த பெண்ணின் கணவர் சீற்றம்

இஸ்லாமாபாத், மே 30

பாகிஸ்தானின் லாகூர் நகரில், குடும்பத்தினரால் கல்லால் அடித்துக் கொல்லப்பட்ட பெண்ணின் கணவர், தாக்குதல் நடந்த போது, பார்த்துக் கொண்டிருந்த பொலிஸார் தாக்குதலைத் தடுக்க எதுவுமே செய்யவில்லை என்று கூறியிருக்கிறார்.

குடும்பத்தினரின் விருப்பமின்றி காதல் திருமணம் செய்து கொண்ட இந்தப் பெண் மூன்று மாதக் கர்ப்பிணியாக இருந்தார். இந்தப் பிரச்சினை தொடர்பான வழக்கு விசாரணைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை லாகூர் உயர் நீதிமன் றத் துக்கு வந்த பர்ஹானா பர்வீன் என்ற இந்தப் பெண்ணை, அவரது தந்தையும் சகோதரர்களும் சில உறவினர்களும் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே பட்டப் பகலில் கல்லால் தாக்கிக் கொன்றமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இந்தப் பெண்ணின் கணவர் ,முகம்மது இக்பால், பி.பி.சிக்கு அளித்த பேட்டியில், இந்தத் தாக்குதல் சம்பவம் நடந்த போது அங்கிருந்த பொலிஸார் பலமுறை தான் உரக்கக் கூச்சலிட்டபோதும், அந்தத் தாக்குதலைத் தடுக்காமல், மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர், இது மனிதத் தன்மையற்ற அவமானகரமான செயல் என்றார்.

பாகிஸ்தானில் குடும்பத்தினர் அனுமதி இல்லாமல் பெண்கள் காதல் திருமணம் செய்து கொள்ளும்போது, அதனால் குடும்ப கௌரவம் பாதிக்கப்படுவதாகக் கூறி நூற்றுக்கணக்கான பெண்கள் ஒவ்வோர் ஆண்டும் கொலை செய்யப்படுகின்றனர்.

இந்த குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்ட பெண்ணின் தந்தை பொலிஸில் சரணடைந்துள்ளார். மற்றவர்கள் இன்னும் கைதாகவில்லை. (த)

# ஆப்கனிலிருந்து 2016இல் அமெ.படை முற்றாக விலகும்

## பராக் ஒபாமா பகிரங்க அறிவிப்பு

வொஷிங்ரன் ,மே 30

ஆப்கானிஸ்தானில் உள்ள நேட்டோ படை வீரர்களின் எண்ணிக்கை அடுத்த ஆண்டில் 9,800 ஆகக் குறைக்கப்படும் என்றும் 2016 இறுதி யில் அனைவரும் திருப்பி அழைக்கப்பட்டு விடுவார்கள் என்றும் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது-

ஆப்கானிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் முகாமிட்டுள்ள அமெரிக்க ராணுவம் உள்ளிட்ட நேட்டோ படையினரின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 9,800 ஆகக் குறைக்கப்படும்.



ஒபாமா

2015 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த எண்ணிக்கை மேலும் பாதியாகக் குறைக்கப்படும். பின்னர் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் நேட்டோ படை முழுவதும் திருப்பி அழைக்கப்படும்.

அதன் பிறகு ஈராக்கைப் போல ஆப்கன் தலைநகர் காபூலில் பாதுகாப்பு உதவிப் பிரிவுடன் கூடிய அமெரிக்கத் தூதரகம் மட்டுமே செயற்படும்- என் றார்.

ஒபாமாவின் இந்த அறிவிப்பை அமெரிக்க வெளி யுறவுத் துறை அமைச் சர் ஜோன் கெரி, பாதுகாப்பு அமைச்சர் ஹக் சீகல் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களும் வரவேற்றுள்ளனர். (த)

# உளவாளி ஸ்னோடனுக்கு சவால் விடுக்கிறார் கெரி

வொஷிங்ரன், மே 30

அமெரிக்க உளவுத் தகவல்களை ஊடகங்களுக்குக் கசியவிட்ட எட்வர்ட் ஸ்னோடன், நீதியின் பிடியிலிருந்து தப்பியோடுபவர் என்று வர்ணித்த அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜோன் கெரி, அவர் துணிந்து நாடு திரும்ப வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

எட்வர்ட் ஸ்னோடன் அமெரிக்காவின் என்.பி.சி தொலைக்காட்சிக்குக் கொடுத்த பேட்டியில், தன்னை ரஷ்யாவுக்கு தப்பியோடிப் புகலிடம் தேட வைத்தது அமெரிக்க அரசு தான் என்று கூறியிருந்ததை அடுத்து கெரியின் இந்தக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.



எட்வர்ட் ஸ்னோடன்

உளவுத் துறை பகுப்பாய்வாளராக இருந்த ஸ்னோடன் கடந்த ஆண்டு பல உளவுத் தகவல்களை வொஷிங்ரன் போஸ்ட் மற்றும் கார்டியன் பத்திரிகைகளுக்குக் கசியவிட்டு அமெரிக்காவுக்குச் சங்கடத்தை உருவாக்கினார்.

இந்த ஆவணங்கள் மூலம், அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு ஏஜென்சி, உலகத் தலைவர்கள் பலரின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டமை தெரியவந்தது.

என்.பி.சிக்கு அளித்த பேட்டியில், ஸ்னோடன், தான் ஒரு பயிற்சி பெற்ற உளவாளி தான், அமெரிக்கா கூறுவது போல கீழ் மட்டத்தில் பணிபுரியும் ஒரு பகுப்பாய்வாளர் அல்ல என்று கூறியிருந்தார்.

அமெரிக்காவின் சி.ஐ.ஏயுக்கும் தேசிய பாதுகாப்பு ஏஜென்சிக்கும், வேறு அடையாளத்துடன் வெளிநாடுகளில் தான் பணி புரிந்ததாகவும் அவர் கூறினார்.

எட்வர்ட் ஸ்னோடன் குழம்பிப் போயிருக்கிறார் என்று கூறிய ஜோன் கெரி, அவர் அமெரிக்காவுக்கு பெரிய சேதத்தை விளைவித்திருக்கிறார் என்றார்.

ஒரு தேச பக்தன் நாட்டை விட்டு ஓடக்கூடாது என்ற ஜோன் கெரி, ஸ்னோடன் அமெரிக்காவுக்கு திரும்ப விரும்பினால், அடுத்த விமானத்தில் இன்றே நாம் அவரைக் கொண்டு வருவோம் என்றார். ஸ்னோடன் அமெரிக்காவை நம்புபவராக இருந்தால், அவர் அமெரிக்க நீதித்துறையின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று ஜோன் கெரி கூறினார். (த)



மிஸ்ரர் பீன்

# தொழிலதிபரின் உயிரை காப்பாற்றிய மிஸ்ரர் பீன்

நியூயோர்க், மே 30

விபத்தில் சிக்கிக் கொண்ட அமெரிக்கத் தொழிலதிரொருவரைப் பிரபல நகைச்சுவை நடிகர் மிஸ்ரர் பீன் காப்பாற்றியுள்ளார்.

தொலைக்காட்சியில் மிஸ்ரர் பீன் என்ற கதாபாத்திரத்தில் நடித்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் சிரிக்க வைப்பவர் நடிகர் ரோவன் அட்கின்சன்(வயது-59).

இவர் நேற்று முன் தினம் இத்தாலியில் தனது காரில் சென்று கொண்டிருந்த போது சாலை ஓரத்தில் ஒரு கார் மரத்தில் மோதி விபத்துக்குள்ளாகி இருந்ததைக் கண்டார்.

உடனடியாகக் காரை விட்டு இறங்கி காரினுள் சிக்கியவர்களை மீட்க உதவி செய்துள்ளார். பின்னர் உடனடியாகப் பொலிசாருக்கும், மீட்புப் படையினர்களுக்கும் தகவல் தெரிவித்துள்ளார்.

மிஸ்ரர் பீன் உதவியால் சரியான நேரத்தில் அந்த அமெரிக்கத் தொழிலதிபரும், அவருடைய ஓட்டுநரும் காப்பாற்றப்பட்டனர்.

மிஸ்ரர் பீனின் மனிதாபமானத்தை மீட்புக் குழுவினர் பாராட்டியுள்ளனர். (த)

## மாயமான விமானத்தின் சமிக்ஞை அல்லஅது

வொஷிங்ரன், மே 30

கடலுக்கு அடியில் இருந்து வந்த சமிக்ஞை காணாமற் போன மலேஷியீ விமானத்தினது அல்லவென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மனிதரால் தயாரிக்கப்பட்ட வேறு ஒன்றில் இருந்து இந்தச் சமிக்ஞை வெளியாகியிருக்கலாம் என அமெரிக்கக் கடற்படையின் சமுத்திரப் பொறியியல் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் மிச்செல் டீன் கூறியுள்ளார்.

229 பேருடன் கோலாலம்பூரில் இருந்து பீஜிங் நோக்கிப் பயணித்த மலேஷியப் பயணிகள் விமானம் கடந்த மார்ச் மாதம் 8ஆம் திகதி காணாமல் போயிருந்தது.

குறித்த விமானத்தின் பயணம் இந்து சமுத்திரக் கடற்பரப்பில் முடிவுக்கு வந்ததாகச் செய்மதித் தரவுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த விமானம் தொடர்பான தகவல்கள் இதுவரை தெரியவரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: முதலீடு இல்லாத புதிய தொழில் தொடங்குவதற்கு உங்களுக்கு நண்பர்கள் உதவி செய்வார்கள். பண விடயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. உங்களது அலுவலக கணக்கு வழக்குகளை மிகச் சரியாகக் கையாளுதல் நல்லது.



**இடபம்**: உங்களின் சேமிப்புகளில் கை வைக்க வேண்டி வரலாம். கவனம் தேவை. எனவே அதை முடிந்தவரை தவிர்க்கவும். விவசாயிகள் சிறப்புடன் இருப்பார்கள். கணவன் மனைவி இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.



**மிதுனம்**: வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கூடுதல் சுமைகள் வந்து சேரும். வேலையில் எரிச்சல் மற்றும் சோம்பேறித்தனத்தை முற்றிலும் கைவிடுவது நல்லது. உங்கள் உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது.



**கடகம்**: சிலருக்கு குழந்தைகளால் அவமானம் ஏற்படலாம். மேற்படிப்பு சம்பந்தமாக வெளியூர் சென்று தங்கிப் பயிலும் வாய்ப்புக் கிட்டும். பெரியவர்களின் ஆசீர்வாதம் பரிபூரணமாகக் கிடைக்கும். அவர்களின் ஆசீர்வாதங்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.



**சிங்கம்**: வெற்றி உங்களை வந்தடையும். உங்களது முன்னேற்றத்திற்கு நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். வெளியூர் பயணங்கள் வந்து சேரும். ஒரே நேரத்தில் பலவிதமான வாய்ப்புகள் வந்து சேரும்போது தகுந்த ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பது நல்லது.



**கன்னி**: பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு செல்வாக்கில் சிறிது சரிவு ஏற்படலாம். அதேவேளையில் பதவியும், பொறுப்பும் வந்து சேரும். வீண் அலைச்சலும், வாக்குவாதமும் அவ்வப்போது வாட்டி வதைக்கும்.



**துலாம்**: உடன்பிறந்தவர்கள் வகையில் நிலவி வந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். பணப் பற்றாக்குறை படிப்படியாகக் குறையும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது. சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தேறும்.



**விருச்சிகம்**: பழைய வீட்டைப் புதுப்பிப்பதற்குச் சிறந்த நாளாகும். பொழுதுபோக்கான விழாக்களில் கலந்து கொள்வீர்கள். உங்களை விட்டுப் பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்வார்கள்.



**தனுசு**: வெளிநாடு சென்று பயில வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அதற்குண்டான காலம் கனிந்து வரும். கலைத்துறையைச் சார்ந்தவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் உண்டு. வேலை நிமித்தமாக அடிக்கடி வெளியூருக்கும் வெளிநாட்டுக்கும் செல்ல வேண்டி வரும்.



**மகரம்**: உங்களது உடைமைகளை கவனத்துடன் பார்த்துக் கொள்ளவும். பணம் மற்றும் புதிய நண்பர்கள் சேர்க்கை கிடைக்கும். செய்கின்ற தொழிலில் கவனம் வேண்டும். புதிய தொழில் தொடங்கலாம்.



**கும்பம்**: கூட்டுத்தொழிலில் இலாபம் கிடைக்கும். நம்பிக்கை மிக்கவர்களாக பழகுவார்கள். வரவுக்குத் தகுந்த செலவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வேலையாள்கள் சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.



**மீனம்**: உறவினர்களாலும் தொல்லைகள் வரலாம். வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்ற சேவைத்துறையில் இருப்பவர்கள் சீரான நிலையில் இருப்பார்கள். வேலை பார்த்து கொண்டே உபதொழில் செய்பவர்களுக்கு இலாபம் கிடைக்கும்.

## நாளை

**வைகாசி-17 சனிக்கிழமை | 31.05.2014**

திதி: திருதியை பி.இ.03.42 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.11.17 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
இராகுகாலம்: 08.52-10.22 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## சாங்கியத் தத்துவத்தைப் பற்றிய ஓர் ஆராய்ச்சி

'பிரகிருதி அறிவற்றது' என்கிறார்கள் சாங்கியத் தத்துவவாதிகள்; அதனிடம் உள்ள பொருள்களின் பூரணச் சமநிலையே பிரகிருதி என்று விளக்குகிறார்கள். பூரணச் சமநிலையில் எந்த இயக்கத்துக்கும் இடமே இல்லை என்பது தெரிந்ததொன்றே. தொடக்க நிலையில் எந்த விதமான தோற்றம் அல்லது விரிவு ஏற்படுவதற்கு முன்– இயக்கமே இல்லாமல் பூரண சமநிலை மட்டுமே இருந்தபோது, பிரகிருத்திக்கு அழிவே இல்லை. சமநிலை இன்மை, அல்லது மாறுதல்தானே அழிவு அல்லது சாவுக்குக் காரணம்? சாங்கியர்களின் கொள்கைப்படி அணுநிலை தொடக்கநிலை அல்ல. இந்தப் பிரபஞ்சத்தின் மூலகாரணம் அணு அல்ல. அணுவிலிருந்து இந்தப் பிரபஞ்சம் விரியவில்லை; அணு என்பது விரிவின் இரண்டாவது அல்லது மூன்றாவது நிலையாக இருக்கலாம். மூலப் பொருள் அணுக்களாக மாறி, பருப்பொருள்களாகவும் பெரிய பொருள்களாகவும் விரியலாம்.

இந்தக் கால விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவும் இதுவே என்பது தெரிகிறது. உதாரணமாக, ஈதர் (Ether) அல்லது ஆகாயம் பற்றிய இந்தக் காலக் கொள்கைப்படி, ஆகாயம் என்பது அணுக்களால் ஆனது என்று கூறினால் ஒன்றும் புரிவதில்லை. இதைத் தெளிவுபடுத்த வேண்டுமானால், இப்படிக் கூற வேண்டும்; காற்று அணுக்களால் ஆனது; ஆகாயம் எங்கும் நிறைந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியும்; இது எல்லாப் பொருள்களுக்குள்ளும் எங்கும்– உள்ளும் வெளியுமாய் இருக்கிறது. இந்தக் காற்றணுக்கள் இந்த ஆகாயத்தில் மிதப்பது போலத் தோன்றுகின்றன. ஆகாயம் அணுக்களால் ஆனது என்றால், இரண்டு அணுக்களுக்கிடையில் இடம் இருந்து தீர வேண்டுமே! இந்த இடத்தை அடைத்திருக்கும் பொருள் என்ன? இன்னும் நுட்பமான ஆகாயம் ஒன்று இதை அடைத்திருக்கிறது என்றால், இந்த நுட்பமான ஆகாயத்தின் அணுக்களின் இடைவெளியை எது நிரம்புகிறது, என்ற வினா எழும். இந்த வாதத்துக்கு முடிவே இல்லை; இந்தக் 'காரணம் ஆனியத்தில் முடிவடைகிறது' என்பர் சாங்கியர்கள். அணுக்கொள்கை முடிவே இல்லாதது.

# கோப முகத்துடன் ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட சிலை

**இது அற்புதமான சிலை என்றும் மேலும் இதன் மதிப்பு தங்கத்துக்கு நிகரானது எனவும் தெரிவித்துள்ளனர்.**



ரஷ்ய நாட்டு மீனவரொருவர் ஆற்றில் மீன் பிடிக்கச் சென்றபோது 4000 வருடங்களுக்கு முன்பு இருந்த பாகன் கடவுளின் சிலையொன்றைக் கண்டெடுத்துள்ளார்.

நிக்கலோ தாராசோவ் என்ற இந்த மீனவர் ரஷ்யாவின் திசூல் நகரில் உள்ள ஆற்றில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது 4000 வருடங்களுக்கு முன்பு இருந்த பாகன் கடவுளின் சிலையைக் கண்டெடுத்துள்ளார்.

அவர் கண்டுபிடித்த இந்தச் சிலையைத் தொல்பொருள் ஆய்வாளர்கள், இது அற்புதமான சிலை என்றும் மேலும் இதன் மதிப்பு தங்கத்துக்கு நிகரானது எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த சிலை பெரிய கண்களுடன், பெரிய வாய் மற்றும் கோபமுற்ற முக தோற்றத்துடனும் இருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும், 30 செ.மீ நீளமும், 5 செ.மீ அகலமும் கொண்ட இந்தச் சிலை 4000 வருடங்களுக்கு முன்பு செதுக்கப்பட்டிருக்கலாம் என்றும், நாளடைவில் இது கல்லாக மாறியிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விலை மதிப்புடைய இந்தச் சிலைக்கு நிக்கலோ எந்த வித பணமும் பெற்றுக்கொள்ளாமல் விட்டுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த சிலை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 1 | 8 | 6 | 2 | | | |
| | | 8 | | | | | | 6 |
| | | | 4 | 9 | | | | |
| | 3 | 2 | | 8 | | | 5 | 7 |
| 6 | | | | | | | | 3 |
| 8 | 9 | | | 7 | | 6 | 4 | |
| | | | | 5 | 9 | | | |
| 1 | | | | | | 5 | | |
| | | | 2 | 1 | 3 | 8 | 7 | 4 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 4 | 2 | 8 | 5 | 1 | 3 | 6 |
| 5 | 1 | 3 | 4 | 9 | 6 | 7 | 2 | 8 |
| 2 | 6 | 8 | 3 | 7 | 1 | 9 | 5 | 4 |
| 8 | 9 | 6 | 1 | 4 | 3 | 2 | 7 | 5 |
| 4 | 5 | 7 | 9 | 6 | 2 | 8 | 1 | 3 |
| 3 | 2 | 1 | 7 | 5 | 8 | 6 | 4 | 9 |
| 1 | 8 | 9 | 5 | 2 | 4 | 3 | 6 | 7 |
| 6 | 4 | 2 | 8 | 3 | 7 | 5 | 9 | 1 |
| 7 | 3 | 5 | 6 | 1 | 9 | 4 | 8 | 2 |

## சவூதி அரேபியாவிற்கு

மிகக் குறைந்த செலவில் செல்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**Al Fouzan Trading & Contructing Company** (விசா கைமிருப்பில்) ஒரு வாரத்தில் பயணம்

| Profession தொழில் | No. | Salary சம்பளம் |
|---|---|---|
| Project Engineer | 05 | SR 3,500 (Rs. 122,500/-) |
| Quantity Estimator | 05 | SR 2,000 (Rs. 70,000/-) |
| Building Technician | 11 | SR 1,300 (Rs. 45,000/-) |
| Steel Fixer (கம்பிகட்டுபவர்) | 14 | SR 1,200 (Rs. 42,000/-) |
| Building Carpenter (தச்சு தொழிலாளி) | 41 | SR 1,200 (Rs. 42,000/-) |
| General Electrician (இலக்ரீசியன்) | 66 | SR 1,200 (Rs. 42,000/-) |
| Plumber (குழாய் பொருத்துனர்) | 93 | SR 1,200 (Rs. 42,000/-) |
| Tiles Fixer (டைல்ஸ் வேலை) | 18 | SR 1,200 (Rs. 42,000/-) |
| Plaster (பிளாஸ்டர் வேலை) | 06 | SR 1,200 (Rs. 42,000/-) |
| General Mason (மேசன்) | 50 | SR 1,200 (Rs. 42,000/-) |

கட்டணம் 35,000/= மட்டுமே

நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது உடன் Hotlineஇல் அழையுங்கள். சகல சான்றிதழ்களுடன் வரவும்.

தங்குமிடம், மருத்துவம் சாப்பாடு இலவசம். 2 வருடங்கள் முடிவில் இரு வழி விமானப் பயணச் சீட்டு இலவசம்

**Smart Choice (Pvt) Ltd.** Hotline: 0766853933

81-1/2, Ven 5, Mahinda Himi Mawatha, Maradana, Colombo - 10.

Tel. No: 11 - 2665736, 2665762, 4966485 Fax: (+94) 11- 4613552



CEYLON THEATRES

**இப்பொழுது திரையில்**

**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**

(Opposite Jaffna Teaching Hospital)




**Platinum 3D** 9.30am, 12.00noon, 2.30pm, 5.00pm, 7.30pm

**Silver 2D** 10.15am, 2.15pm, 6.15pm




**Bronze** 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சா.தனேந்திரன் அவர்களின் பாசமிகு சகோதரனும் முன்னாள் ஆசிரியை திருமதி ரா.சுகேந்திரன் அவர்களின் அருமைக் கணவருமான

**காசிநாதன் சுகேந்திரன்**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயருறுவதுடன் அன்னாரது ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்

**யா/கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை.**

## மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 30

மாகாண மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகள் இடம்பெறவிருப்பதாக வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் தனி நிகழ்ச்சிகள் யாவும் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன. விவாதம், வினாடி வினா, முஸ்லிம் நிகழ்ச்சி, சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு, பேச்சு என்பன எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்திலும், குழு நிகழ்ச்சிகள் யாவும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் இடம்பெறவுள்ளன. (க)

## பாஷையூர் அந்தோனியார் ஆலய பெருவிழா

கொழும்புத்துறை, மே 30

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழா நாளைமறுதினம் ஞாயிறு மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் கொடியேற்ற நிகழ்வுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து குழந்தை இயேசு கெபியில் வழிபாடுகள் நடைபெறும்.

கடலின் மத்தியில் அமைந்துள்ள அந்தோனியார் கெபியில் ஜூன் 3 ஆம் திகதி மாலை 5.15 மணிக்கு வழிபாடுகள் இடம்பெறும்.

நவநாள் வழிபாடு எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

நற்கருணைப் பெருவிழா எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.45 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் 13 ஆம் திகதி காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலியும், காலை 6.30 மணிக்கு யாழ்.மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும் மாலை 4.30 மணிக்கு தேர் பவனியும் இடம்பெறும். (வ-135)

## கற்றல், கற்பித்தல் கண்காட்சி இன்று

வவுனியா, மே 30

வவுனியா சைவப் பிரகாச ஆரம்ப பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை கற்றல், கற்பித்தல் கண்காட்சி கல்லூரியின் அதிபர் திருமதி கி.நந்தபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கே.தவரட்ணமும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகர கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.பி. நட ராஜ், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம், சுற்றாடல் நிகழ்ச்சித் திட்ட மாவட்ட பொறுப்பாளர் ரி.சண்முகதேவன், வவுனியா சைவப் பிரகாச இடைநிலைப் பிரிவு அதிபர் செல்வி உமா இராசையா ஆகியோரும் கலந்து கொள்வர். (ச-402)

## பொதுச் சபைக் கூட்டம்

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் பொதுச் சபைக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடைக்காலத் தொழிற்சங்கத் தலைவர் வ.சிவகுமார் தலைமையில் நடைபெறும். இதில் ஒவ்வொரு சங்கத்தின் சார்பிலும் இரண்டு அங்கத்தவர்கள் கலந்து கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பொதுக் கூட்டம்

வடமராட்சி, மே 30

பருத்தித்துறை, வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சு.ஜனார்த்தனன் தலைமையில் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனும், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் சி.வசீகரனும் கலந்து கொள்வார்கள். (ஒ-173)

## கண்காட்சி

வடமராட்சி, மே 30

கொம்மந்தறை, வல்வெட்டித்துறை கம்பர் மலை வித்தியாலயத்தில் இடைநிலைப் பிரிவுக்கான கண்காட்சியொன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலர் க.பொன்னையா கலந்து கொள்வார். (க)


**பனை ஆராய்ச்சி நிறுவனம்**

**பனை அபிவிருத்தி சபை**

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

## பனை ஆராய்ச்சி மாநாடு

பனைவள ஆராய்ச்சி ஊடாக பனைவளம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்

இம்மாநாட்டிற்கு கல்வியாளர்கள், பனம் பொருள்கள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பனங் கைத்தொழிலில் பங்கு பெறுவோர் அனைவரும் கலந்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

திகதி - 02.06.2014 (திங்கட்கிழமை)

நேரம் - காலை 9.00 - மாலை 3.00

இடம் - யாழ் வீரசிங்கம் மண்டபம்

தொடர்புகளுக்கு:

பனை ஆராய்ச்சி நிறுவனம்

கண்டி வீதி, கைதடி.

யாழ்ப்பாணம்.

தொ.இல. 021 205 7065

தொலைநகல் இல. 021 205 7066


## நன்றி செலுத்தும் வழிபாடு

கடந்த 28.04.2014 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த

**வண.பென்ஜமின் ஜெயராஜா**

(போதகர் - தென் இந்திய திருச்சபை.தெல்லிப்பழை)

அவர்களின் வாழ்விற்கு நன்றி செலுத்தும் வழிபாடு

***நாளை (31.05.2014) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு***

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அவ்வழிபாட்டிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்"*

(2தீமோத்தேயு 4:7)

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம். (48568) (12.3.6) **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் விடுதிச் சகோதரி

**திருமதி இரட்னேஸ்வரி குணசீலன்**

அவர்களின் தாயாரும், வவுனியா பொது வைத்தியசாலை தாதியர் நலன்புரி சங்கத்தலைவரும், விடுதிச் சகோதரருமான **குணசீலன்** அவர்களின் மாமியுமாகிய

**திருமதி சரஸ்வதி இராஜசிங்கம்**

அவர்கள் பிரான்சில் 21.05.2014 புதன்கிழமை இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

தாதியர் நலன்புரி சங்கம்,

பொது வைத்தியசாலை, வவுனியா.

## மரண அறிவித்தல்

**திருமதி அன்னம்மா இளையதம்பி**



சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா இளையதம்பி 28.05.2014 புதன்கிழமை அதிகாலை தமது 96 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய கிராம சேவகர் காசிநாதர் இளையதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காசிநாதர்- சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காசிப்பிள்ளை (Rtd Health Dept, Colombo), செல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான செல்லையா, மயில்வாகனம், சின்னத்துரை, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், செல்லப்பா ஆகியோரின் மைத்துனியும், நாகேஸ்வரி, சுந்தரலிங்கம், பூமணி, கமலா, சிதம்பரநாதன், காசிநாதன், றதி ஆகியோரின் சிறிய தாயாரும் விவேகானந்தன், விமலாதேவி, சந்திரா, இந்திரா, சாவித்திரி, விஜயலஷ்மி ஆகியோரின் பெரிய தாயாரும், வரதலஷ்மி, பாலச்சந்திரன் (Robert Agencies), கௌரிகாம்பிகை (இளைப்பாறிய மின்சார சபை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் குமாரசாமி (இளைப்பாறிய மீன்பிடி இலாகா உத்தியோகத்தர்), வரலட்சுமி, சோதிநாதன் (இளைப்பாறிய மாநகர சபை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், மஞ்சுளா, ஷகிலா, ஷாமிலா, தினேஷ், செந்தூரன் ஆகியோரின் பாட்டியும் Jonathan, Shane Rajeevan, Damon Arune சுவேத்திக்கா, Andrew, ஹரி, ஜனனி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல.28, கொலிங்வூட் பிளேஸ், வெள்ளவத்தை இல்லத்தில் நாளை (31.05.2014) சனிக்கிழமை மு.ப. 10.00 மணி தொடக்கம் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, மறுநாள் (01.06.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கிரியைகள் நடைபெற்று, பொரளை கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்.**

தொலைபேசி : 072 322 5786, 071 800 8251

# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழாச் சிறப்புமலர் - 30.05.2014

## வில்லையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை



### அம்பாளின் அருட் பார்வை

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்ம னின் அருட் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று இன்றைக்கு சுமார் 48 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட் பார்வை இவ் விடத்தில் தோன்றி யிருப்பதை அடி யார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக் காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம் அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம் பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத் தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அரு ளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கில் அயலவர் களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம் பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலை யினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக் கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

*''மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்''*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

கே. வைத்திலிங்கம்

வில்லை மரத்தானை வெவ்வினைகள் களைவானை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வானை
பொல்லா வினையகல புங்கங்குளத்தர் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

## பொங்கல் விழாச் சிறப்புறப் பிரார்த்திப்போரும், விளம்பர அனுசரணையாளர்களும்


கட்டடப் பொருள்கள், உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர் உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி**
**சேலைச் சோலை**
(பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்)
நவீனசந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 2222 503

கோயிலுக்குத் தேவையான பட்டு சரிகைத் துண்கள், பட்டு வேட்டிகள், சால்வைகள் மற்றும் நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
25, 4 ஆம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம் மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநிதியா நகைமாடம்**
டிஜிற்றல் கலர் லப், வீடியோ அன் ஸ்ரூடியோ
20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வில்லையடி
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S. நாதன்
இல. 96/1, சுச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2491

பிஸ்கட் மற்றும் சொக்லேட் வகைகளின் மொத்த விற்பனையாளர்
**நிஷோ ரேடர்ஸ்**
இல. 05, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க. முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க ஆபரணங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**அலங்கார் நகை மாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191 (343),கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்
**உதயா ஜூவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான குளிர்பான வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சாஹுகா நகைமாடம்**
64 , கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3700


**30.05.2014**
**வெள்ளிக்கிழமை வைகாசிப் பொங்கலன்று அம்பாள் ஆலயத்திற்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்விகம் அம்பாள் இவ் ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.**


நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளை குறித்த தவணையில் செய்துபெற்றுக்கொள்ள
**பூரணி நகைமடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிக்கா கலர் லாப்**
**சித்திராம் ஜுவல்லர்ஸ்**
158,193, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.
021 222 8334

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்கேற்ப தங்கப்பவுண் நகைகளை நம்பிக்கையாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜுவெல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
103, புங்கங்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 7877 760

**இராஜேஸ்வரி**
**ரெக்ஸ்ரைல்**
இல.105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 6953

# அதிகாரப் பரவலாக்கம் பெயரளவில் மட்டுமே

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு,மே 30

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் என்பது பெயரளவில் மட்டுமே உள்ளது. ஆனால் இந்தியாவில் அது உயர் நிலையில் காணப்படுகின்றது. எனவேதான் அங்கு விசாலமான அமைச்சரவை தேவைப்படுவதில்லை என்று கடற்றொழில் துறை மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.



ராஜித சேனா

கொழும்பில் அரச தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை விடயத்தில் மித வாதத்தையா அல்லது கடும் போக்கையா கடைப்பிடிப்பார் என்பது போகப் போகத்தான் தெரியும்.

இந்தியாவில் அதிகாரப் பரவலாக்கம் என்பது உயர் நிலையில் காணப்படுகின்றது. அங்கு மாநிலங்களுக்கு பூரணத்துவமான அதிகாரப் பரவலாக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்திய நாடாளுமன்ற அமைச்சர்களின் தொகையை விட மாநிலங்களில் அமைச்சரவை விசாலமானது. அமைச்சர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். அதனால் மாநிலங்களில் அரச திணைக்களாங்கள், அரச நிறுவனங்களின் ஊடாக மக்கள் தேவைகள், மாநிலங்களின் அபிவிருத்திகள் என அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, இந்திய மத்திய அமைச்சரவை விசாலமானதாக இருப்பதில்லை. அமைச்சர்களின் எண்ணிக்கையும் அதிகம் இல்லை. ஏனென்றால் மத்தியில் அமைச்சர்களின் வேலை கொள்கைகளை வகுப்பது மட்டுமே ஆகும்.

ஆனால், இலங்கையில் பெயரளவிலேயே அதிகாரப் பரவலாக்கம் காணப்படுகின்றது.

மாகாணங்களுக்கு அதிகாரங்கள் முழுமையாகப் பகிரப்படவில்லை. எனவே, மத்திய அரசில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளதோடு அமைச்சரவையும் விசாலமானதாகவுள்ளது.

இங்கும் அதிகாரத்தை உரிய அளவில் பகிர்ந்தால் மத்திய அமைச்சர்களின் எண்ணிக்கை குறையும்.

இந்தியாவில் அரசுகள் மாறினாலும் வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படாது. இலங்கையில்தான் அரசுகள் மாறும்போது வெளிநாட்டுக் கொள்கைகளும் மாறுதல் அடைகின்றன.

அத்தோடு இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் தேவையெனில் அந்த நாட்டு அரசு அனைத்து அரசியல் தரப்பினருடன் பேச்சு நடத்தியே தீர்மானங்களை எடுக்கும். இதுதான் அங்கு உள்ள நிலைப்பாடு.

அரசுக்கும் வடமாகாண சபைக்கும் இடையே நல்லிணக்கம் இல்லாததன் காரணமாகவே ஜனாதிபதியின் அழைப்பை விக்கினேஸ்வரன் நிராகரித்தார்.

இலங்கைக் கடற் பிரதேசத்தில் ஒரு நாளைக்கேனும் மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்க மாட்டோம். இந்த நிலைப்பாட்டில் நாம் கடுமையாக இருக்கின்றோம்.

அதேபோன்று எமது மீனவர்களும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர். புதுடில்லியில் இந்திய, இலங்கை, அரச தரப்பினருக்கிடையே மீனவர் பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இரு நாடுகளையும் சேர்ந்த உயர் மட்டக் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

தற்போது இந்தியாவின் புதிய அரசின் கீழ் இந்த உயர் மட்டக் குழுக்களின் பேச்சுக்களை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்-என்றார். (ச)

## ஆஸ்துமா கிளினிக்கில் அதிகமானோர் சிகிச்சை

தென்மராட்சி, மே 30

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்துமா நோயாளர்களுக்கான கிளினிக்கில் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இதுவரை காலமும் நீரிழிவு கிளினிக்கில் சிகிச்சை பெற்று வந்த ஆஸ்துமா நோயாளர்களுக்கென தனியான கிளினிக் நடைபெறுவதாக செய்தி வெளியாகியதையடுத்து தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் ஆஸ்துமா நோயாளர்களுக்கான கிளினிக்கில் பங்குபற்றியிருந்தனர்.

மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் எஸ்.மகாதேவா தலைமையிலான மருத்துவக் குழு நோயாளர்களைப் பார்வையிட்டது.

வாரத்தின் பிரதி புதன்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணிக்கு ஆஸ்துமா நோயாளர்களுக்கான கிளினிக் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



கைப்பற்றப்பட்ட கஞ்சாப் பொதிகளுடன் பொலிஸார்...

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 100 கிலோ கஞ்சா மீட்பு

இராமநாதபுரம், மே.30

தமிழ்நாடு - தனுஷ்கோடி, அரிச்சல்முனை ஆழமற்ற கடற்பரப்பில் இருந்து கியூ பிரிவு பொலிஸாரால் 100 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 25 கிலோ கிராம் அடங்கிய 4 சாக்குகளில் இருந்து இந்த கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

பாம்பன் பகுதியில் இருந்து குறித்த கஞ்சா கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஓரிரு தினங்களில் சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குறித்த கஞ்சா இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாக அவர் தெரிவித்தார். (வ)

## மீட்டல் பாட முகாம்

இவ்வருடம் ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள நாடகமும் அரங்கியலும் பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கான பரீட்சைக்குத் தயார்ப்படுத்தலுக்கான மீட்டல் பாடமுகாம் யாழ். கல்வி வலயத்தால் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். உதயகுமார் அறிவித்துள்ளார். விரிவான விளக்கங்களுடன் துறைசார்ந்த வளவாளர்களால் இந்தப் பாடமுகாம் நடத்தப்படவுள்ளது. எனவே பாடமுகாமில் இவ் வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள நாடகமும் அரங்கியலும் பாடத்தைப் பயிலும் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)

## தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்குமாறு அறிவுரை கூறுங்கள்

### மோடியிடம் வேண்டுகோள்

கொழும்பு,மே 30

இலங்கையில், தமிழ் மக்களுக்கு, உரிய அதிகாரப் பகிர்வை அளிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனையும் அறிவுரையும் வழங்க வேண்டும் என்று இந்து பத்திரிகையின் முன்னாள் தலைமை ஆசிரியர் என்.ராம் கூறினார்.



என்.ராம்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை ஓரளவுக்கு சிறியதாக உள்ளதே தவிர, அவர்கள் கூறியபடி புரட்சிகரமான வகையில் சிறியதாக இல்லை.

அமைச்சரவை அனுபவம் இல்லாத பலர் இந்த முறை பதவி பெற்றுள்ளனர் என்றும், தொடர்பில்லாத சில முக்கியமான அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஒரே அமைச்சரிடம் கொடுத்துள்ளமைபுரிந்துகொள்ள முடியாததாக இருக்கிறது.

மோடி தலைமையிலான அமைச்சரவையில் மதச் சிறுபான்மையினர், வடகிழக்கு மாநிலம், பழங்குடியினத்தவர் ஆகியோருக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை.

தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் பதவியேற்பு விழாவில் பங்குபற்றியமை ஒரு சிறப்பான அம்சம். அது வரவேற்கத்தக்க ஒரு முன்னெடுப்பு. அதை அடித்தளமாகக் கொண்டு முன்னேற்றங்களை காண வேண்டும்.

மோடியின் பதவியேற்பு விழாவுக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா போயிருக்கலாம். மாநில அரசியலைக் கருத்தில் கொண்டே அவர் எச்சரிக்கையாக ஒரு முடிவை எடுத்துள்ளார். அது புரிந்து கொள்ளக் கூடியதே.

தமிழகத்துக்கு ஒரே ஓர் அமைச்சர் பதவி அளிக்கப்பட்டமை போதுமானதாக இல்லை. இது வருந்தக் கூடிய விடயமாக இருந்தாலும் தேசிய ஜனநாயகக் கூட்டணி இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றிபெற்ற நிலையில், வேறு வழியேதுமில்லை -என்றார்.

## இந்தியாவைவிட இலங்கை முன்னிலை அலங்கார மீன்களின் உற்பத்தியில்

இராமநாதபுரம். மே 30

அலங்கார மீன்களின் உற்பத்தியில் இந்தியாவை விட இலங்கை முன்னணியில் திகழ்கின்றது. எனவே இந்தியாவின் அலங்கார மீன்கள் உற்பத்தி நடவடிக்கைக்காக மத்திய அரசால் 10.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் விரிவுபடுத்தப்படும் என்று இந்திய மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.



இந்திய மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் கோபால கிருஸ்ணன் அலங்கார மீன்களின் கண்காட்சியை பார்வையிட்டார்

மண்டபத்தில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தில் அலங்கார மீன்களின் கண்காட்சி மையத்தின் திறப்பு விழா மற்றும் அலங்கார மீன் உற்பத்தி தொடர்பான மீனவர்களுக்கான பயிற்சி நிகழ்வு என்பன நேற்று முன் தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;

அலங்கார மீன்களை மண்டபத்தில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் தொழில்நுட்பத்துடன் உற்பத்தி செய்வதில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக 10.5 மில்லியன் ரூபா நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. உலக அளவில் 7.5மில்லியன் டொலர் அளவுக்கு அலங்கார மீன்களின் வர்த்தகம் நடைபெற்று வருகிறது.

இதில் ஒவ்வொரு ஆண்டும் 8சதவீத வர்த்தகம் அதிகரித்து கொண்டே வருகிறது. மேலும் இந்தியாவில் அலங்கார மீன்களை உற்பத்தி செய்திட மீனவர்கள் முன்வர வேண்டும்.

இதனால் லாபம் அதிகரிப்பதோடு மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்திக் கொள்ளலாம்.

உலக அளவில் இலங்கை அலங்கார மீன்களின் ஏற்றுமதியில் 10 சதவீதத்தை மேற்கொள்கிறது இந்தியாவின் ஏற்றுமதி 0.1 சதவீதம் மட்டுமே உள்ளது. இந்திய ரூபாவில் 10 ஆயிரத்து 500 கோடி பெறுமதியான கடல் மீன்கள் ஏற்றுமதியாகி வருகின்றன. இதில் 6.5 கோடி ரூபா பெறுமதியான அலங்கார மீன்கள் ஏற்றுமதியாகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தின் மண்டபம் கடல் பகுதியில் தொழில்நுட்ப உதவியுடன் கடலில் கூண்டு வைத்து மீன் பிடிக்கும் முறையையும் கடல் மீன் ஆராய்ச்சி நிலையத்தையும் அவர் பார்வையிட்டார். (வ-14)

பெயர் மாற்றம்

கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜேஸ்வரி நாகராசா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை

இராசேஸ்வரி நாகராசா

என பெயர்மாற்றம் செய்வதோடு, இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(48570)(6.4.3) இராசேஸ்வரி நாகராசா

# சயந்தன் வீட்டின் அருகிலேயே அடிதடி

யாழ்ப்பாணம்,மே 30

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனின் வீட்டின் அருகிலேயே கடந்த திங்கட்கிழமை இரவு அடிதடிச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய உதயனில் 20 ஆம் பக்கத்தில் வெளியாகி இருந்த "சயந்தனின் அலுவலகத்தில் அடிதடி; செவ்வாய் இரவு எட்டுப் பேர் காயம்" என்ற செய்தியில் -

"சயந்தனை அவரது வீட்டில் வைத்துத் தாக்க முற்பட்டவர்களுக்கும், அப்போது வீட்டில் இருந்தவர்களும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்" என்று குறிப்பிடப் பட்டிருந்தது. இது தவறாகும்.

அந்தச் செய்தியில், காயப்பட்ட 8 பேரின் பெயர்களும் வெளியாகி இருந்தன. அவர்கள் எண்மரும் இரு வேறு சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்றும் தெரியவந்தது. கொடுக்கல், வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட சச்சரவில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் சயந்தனின் வீட்டின் அருகில் நடைபெற்றிருந்தது.

மற்றொரு சம்பவம் சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் நடந்துள்ளது. உறவினர்கள் இடையே நடைபெற்ற இந்தக் கைகலப்பில் 6 பேர் காயமடைந்தனர். இவர்கள் 8 பேருமே சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பில் கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. (ஓ)

விற்பனைக்கு

BENLY 500-xxxx இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு, 5 Gear நல்ல நிலையிலுள்ளது.

தொடர்பு: 0777 299 118 (48582) (10)

அம்மா முதியோர் இல்லம்

எமது சுன்னாகத்தில் இயங்கிவரும் புதிய கிளையில் முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் 10,000 ரூபா அறவிடப்படும்.

தொடர்பு :
077 712 6857, 077 712 6859 (48579) (7.6.3)

A/L CHEMISTRY

ஆரம்பமாகிறது
2015-Physical chemistry
2016-பிரிவு II - Gases
2016- பரீட்சை-இராசாயன அலை இல-05
பரீட்சை திகதி - 02.06.2014
ஆசிரியர் திரு. க. சுரேஸ்குமார் B.Sc (Hons)
THE SCIENCE CORNER
CLOCK TOWER ROAD, JAFFNA (48584) (10)

JAFFNA MEDICAL ASSOCIATION
ANNUAL GENERAL MEETING 2014
NOTICE OF MEETING

Notice is hereby given that the **Annual General Meeting** of the **Jaffna Medical Association** will be held on Saturday, **28th June 2014 at 11.30 am at the Lecture hall of Nursing Training School, Jaffna**, for the following Purposes;

Agenda

1. Annual Report of the Committee of Management on the affairs of the Association and the Statement of Accounts for the year ended 31st December 2013 and the Report of the Auditors thereon.
2. Resolutions (Annexed)
3. Election of the Committe members for Year 2014/15
4. Appointment of the Auditors of the Association
5. Any other Matters

By order of the Committee of Management.
**Hony. Secretary**
28th May 2014 (48586) (10)

## மின் தடை

யாழ்ப்பாணம்,மே 30

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களில் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரைமின்சாரம் பின்வரும் பகுதிகளில் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடத்தனை, நடுக் குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு, கூர்க்கறைப் பகுதி மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு அம்பன், நுணாவில், வேம்பிராய், மட்டுவில், மந்துவில், சரசாலை, இராஜ வீதி, நிலாவரை, சிறுப்பிட்டி மேற்கு, நவக்கிரி, புத்தூர், எல்லாளன் வாசிகசாலையடி, விரவாணி-ஊறணி, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, செல்வநாயகபுரம், வாதரவத்தை, பொக்கணை, சந்நிதி வீதி, தோப்பு, கைத்தொழிற்பேட்டை, குட்டியப்புலம், சுதந்திரபுரம், சுன்னாகம் சிவன் கோவிலடி, சூராவத்தை, மலப்பை, மயிலணி, மயிலங்காடு, ஏழாலை, குப்பிளான், கட்டுவன், காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயம் ஆகிய பகுதிகளில் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பாற்பண்ணை, திருநெல்வேலி, மருத்துவ பீடப் பிரதேசம், கொக்குவில், பொற்பதிவீதி, ஆடியபாதம் வீதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும். (400)

மரண அறிவித்தல்

திருமதி ராசமணி பாக்கியசோதி



மயிலிட்டி கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ராசமணி பாக்கிய சோதி நேற்று (29.05.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா-விஜயல்ட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை-ராசலட்சுமி தம்பதிகள் மற்றும் சிவநாயகி கனகநாயகத்தின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை பாக்கியசோதியின் (துரை முக அதிகாரசபை - திருகோணமலை) அன்பு மனைவியும், கிருஷ்ண சோதியின் (துறைமுக அதிகார சபை-கொழும்பு) பாசமிகு தாயும், மிதிலாவின் (மக்கள் வங்கி) அன்பு மாமியும், மேஹாசினி, கவிஷாலினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லங்காநேசன் (முன்னாள் அரசாங்க அதிபர்- வவுனியா), காலஞ்சென்ற சச்சிதானந்தம், லங்கநாயகி, பாலச்சந்திரன், லங்காரெட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மநாதன், சிவநாதன், சுவேந்திரநாதன், விஜயநாதன், ஜோதிநாதன், ராஜநாதன், ரட்ணசோதி, பாலசிங்கம், ராஜசிங்கம், சிவராணி, ஜெகஜோதி, திலகராணி, திலகஜோதி, பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற கைவிரல் அடையாள நிபுணர், பொலிஸ் திணைக்களம்), பத்மராணி, சாந்தினிதேவி ஆகியோரின் மைத்துனியும், ஜயந்தன் (USA), விஜயதர்சினி (கனடா), கிரிசாந்தன் (கனடா) ஆகியோரின் அத்தையும், பிரசன்னா (Risk Manager), பிரதாபன் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(30.05.2014) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியிலிருந்து கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மறுநாள் (31.05.2014) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியிலிருந்து அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 01.06.2014 ஞாயிற்றுக் கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 20 -6/3, பெரேரா லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு-6.

தொடர்புகளுக்கு:
லங்காநேசன் 077 788 1726
பாலச்சந்திரன் 071 480 0212 (C/14403) (10)

தகவல்:
மகன்-கிருஷ்ணஜோதி (தாசன்-)

மரண அறிவித்தல்

ந.பத்மலோஜனி அம்மா



சட்டநாதர் றோட், திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ந. பத்மலோஜனி அம்மா நேற்று (29.05.2014) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜசர்மா-மீனாட்சி அம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், சிதம்பரநாதசர்மா, இந்திராணி, விஜயகுமாரி, பாஸ்கரநாதசர்மா, வசந்தகுமாரி காலஞ்சென்ற சுந்தரநாதசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலராணி, பாலசுப்பிரமணியக் குருக்கள், செம்பொற்சோதீஸ்வரசர்மா, காலஞ்சென்ற நடராஜகுருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனந்தலெட்சுமி (வாணி), ஸ்ரீதேவி, சுரேஸ்குமார் (கோவிந்தன்), ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், மாணிக்கராஜ சர்மா, கமலராஜசர்மா, சிவனருட்செல்வ சர்மா (வாசு), சிவபானுசுத சர்மா (பானு) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி. (48580) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

சேவை நயப்பு வாழ்த்துப்பாமாலை

திருமதி சுலோச்சனா முருகநேசன்



வலிகாமம் தெற்கு பிரதேச சபையில்
04.07.2009 தொடக்கம் 30.05.2014 வரை
செயலாளராகக் கடடையாற்றி நிர்வாகத்தை
திறம்பட நடத்தி இன்று நிர்வாக சேவைப்
பரீட்சையில் சித்தியெய்தி நிர்வாக
சேவையைச் சிறப்புற நடத்தப் பயணிக்கும்
எமதருமைச் செயலாளர் திருமதி சுலோச்சனா
முருகநேசன் அவர்கள் மேலும் பல
பதவியுயர்வுகள் பெற்று பலநூறாண்டு
காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

செல்வங் கொழிக்கும் வலிகாமம் தெற்கு பிரதேசசபை
தன்னில் சிறப்புற நிர்வாகம் நடத்தி நீவிர்
அணியணியாக அன்பர்கள் வாழ்த்திட
நிர்வாக அனுபவ முதுமையின்
பயனாய் அரச நிர்வாக தேர்வில் சித்தியும் பெற்றீர்
பல்வேறு பதவிகள் நிர்வாக சேவையில் ஆற்றி
என்றும் நலத்துடன் பல்லாண்டுகாலம்
பலநூறாண்டுகள் கண்டு நீவிர் வாழ்க பல்லாண்டு நீடே!

வலிகாமம் தெற்கு பிரதேசசபை
சுன்னாகம். (C/14086)(10)

தவிசாளர், உப தவிசாளர்,
உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

மரண அறிவித்தல்

திருமதி இராசமணி தியாகராசா



இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி இராசமணி தியாகராசா நேற்று (29.05.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் இராசரத்தினம், கனகமணி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரன் (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி), கலாநிதி ஆகியோரின் பாசமிகு தாயும், கிரிசாலினி, ராஜ்மோகன் ஆகியோரின் மாமியாரும், ஜெகபாலினி, சோபினி (மாணவிகள், யா/வேம்படி உயர்தர பாடசாலை), பிரணவன் (மாணவன், யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), கோவர்த் தன் (ஆஸ்திரேலியா), விதாஜினி, ரக்ஷனி (மாணவிகள், கொ/சைவ மங்கையர் கழகம்) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, பஞ்சலிங்கம், கணேஸ்வரி மற்றும் கணேசலிங்கம், சிதம்பரநாதன், முதலித்தம்பி, காலஞ்சென்ற நடராசா, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, நடராசா மற்றும் புனிதவதி, ஜெகபூபதி, ஜெகதாம்பாள் ஆகியோரின் சகலியும், காலஞ்சென்ற நடராசா, நாகராசா சண்முகலிங்கம், சிவபுஸ்பம் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
வட்டுவினி. (48587) (10)

தகவல்:
ஜெகதீஸ்வரன் (மகன்)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் இராமசாமி
சோமசுந்தரம்



மலர்வு 19.06.1949
உதிர்வு 30.05.2012

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஐயா உங்கள் பிரிவெண்ணி வாடுகின்றோம்
மீகாமன் இல்லாத படகுபோல
மண்ணுலகில் வாழுகின்றோம்.

உங்கள் நினைவு சுமந்து வாழும்
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அல்வாய். (48578) (7.6.3)

# இலங்கை விவகாரத்தில் இந்தியா எதிர்பாரா வேகம்

## அரசு போட்ட கணக்கு பிழைக்கின்றது என்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



கொழும்பு, மே 30

இலங்கை விவகாரத்தில் இந்தியப் பிரதமர் வேகமாகக் காலடி எடுத்து வைக்கத் தொடங்கியுள்ளார் என்று எச்சரித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி வசந்த பண்டார.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கை விவகாரம் தொடர்பாக மன்மோகன்சிங் மெதுவாகவே காலடி எடுத்து வைத்தார். ஆனால், நரேந்திர மோடி வேகமாக காலடி எடுத்து வைக்க ஆரம்பித்து விட்டார்.

தமிழ்நாடுமுதல்வர் ஜெயலலிதாவின் அழுத்தம் இல்லாமல் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அழுத்தம் கொடுத்திருக்க மாட்டார். இலங்கை அரசு போட்ட கணக்குப் பிழைத்து விட்டது. உடனடியாக புதிய அரசியலமைப்பை உருவாக்கி, 13 ஆவது திருத்தத்துக்கு அரசு சாவு மணி அடிக்க வேண்டும். இல்லாவிட்டால் சிங்கள பௌத்த மக்களின் ஆதரவை இழக்க வேண்டிய நிலையேற்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# படகு அகதிகளுக்கு அனுமதி இல்லை

## நியூஸிலாந்து பிரதமர் திட்டவட்டம்

படகு அகதிகளுக்கு எதிராக ஆஸ்திரேலியாவின் எல்லைப் புறத்தில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கைகளை அடுத்து மனித கடத்தல்காரர்கள் நியூ ஸிலாந்தை குறிவைப்பதாக அந்தநாட்டுப் பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.



நியூஸிலாந்துக்கு வரும் படகு அகதிகள் எவரதும் பயணம் இலகுவாக அமையாது என்று எச்சரித்துள்ளார்.

இலங்கை மற்றும் இந்தோனேஷியா ஆகிய இடங்களில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு வந்தோர் தற்போது கென்பராவின் சாப்படவுனை குறி வைப்பதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

எனினும் நியூஸிலாந்துக்கு வரும் படகு அகதிகள் எவரதும் பயணம் இலகுவாக அமையாது என்று எச்சரித் துள்ளார். நியூஸிலாந்து எவரையும் பின்கதவால் அனுமதிக்காது என்றும் ஜோன் கே தெரிவித்துள்ளார்.

எனினும், நியூஸிலாந்து நிபந்தனைகளுடன் புலம்பெயர் பணியாளர்களை வரவேற்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மோடி அரசுடன்

பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் தாங்கள் தொடர்ந்து காட்டிவரும் சிரத்தைக்கு நாம் நன்றியாக இருக்கின்றோம். அதே சமயத்தில் எங்களிடையேயான உறவை வலுப்படுத்தும் வகையில் உங்களுடனும் உங்கள் அரசுடனும் நெருங்கிச் செயற்படுவதற்கு எதிர்பார்த்தும் இருக்கிறோம்.

மீண்டும் வன்முறை இடம் பெறுவதை இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் விரும்பவில்லை. இலங்கையில் உள்ள ஏனையோரோடு தத்தம் பிரதேசங்களின் சமத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றின் அடிப்படையில் சேர்ந்து வாழ்வைக் கொண்டு நடத்துவதையே தமிழர்கள் விரும்புகின்றனர்.

**இந்திய முயற்சி**

1983 ஆம் ஆண்டின் தமிழர் எதிர்ப்பு படுகொலைகளின் தொடர்ச்சியாக, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் இறுதித் தீர்வைக்கொண்டு வருவதற்காக இந்தியா எடுத்த நல் முயற்சிகளை இலங்கை இணங்கி ஏற்றுக் கொண்டிருந்தது. காலத்துக்குக் காலம் இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் இந்த முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்தியா தொடர்ந்தும் ஒரு பங்கை ஏற்று வகித்து வந்தது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து, வன்முறை நிறுத்தப்பட்ட போது, சமத்துவம், நீதி, உண்மையான தீர்வு ஆகியவற்றின் அடிப்படையில் பிணக்குக்கு நிரந்தரமாக முடிவு கட்டும் அனைத்து வாய்ப்புக்களும் உருவாகின.

**நிறைவேறாத வாக்குறுதிகள்**

ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வைக் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியை - போர் நிகழ்ந்த காலத்திலும், போரின் முடிவுக்குப் பின்னரும் - இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை வழங்கியிருந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த வாக்குறுதி நிறைவு செய்யப்படவேயில்லை.

இலங்கை அரசு பல்வேறு செயற்பாடுகள் மூலம் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களின் இனப் பரம்பல் முறையை மோசமாக மாற்றியமைக்கவும், அதன் மூலம் அவர்களின் இனத்துவ, மொழியியல், பண்பாட்டு அடையாளங்களை சீரழிக்கவுமான நிகழ்ச்சி நிரலையே முனைப்பாக முன்னெடுக்கிறது.

இலங்கை அரசின் மேற்படி நடவடிக்கைகள், ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் அரசியல் தீர்வை எட்டுவதில் இலங்கை அரசுக்கு நேர்மையான பற்றுறுதி இல்லை என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

**மோதல் நிலைமை உருவாக்கம்**

இலங்கை அரசின் இத்தகைய செயற்பாடுகள் நல்லிணக்கம், நிரந்தர சமாதானம், அமைதி ஆகியவற்றுக்கான முயற்சிகளைப் பலவீனப்படுத்தும். மோதல் நிலையைத் தீவிரப் படுத்துகின்ற சூழலை உருவாக்கும். தமிழ்ப் பேசும் மக்களுக்கு, அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் பிரதேசங்களில் மீளச் சரிபண்ணவே முடியாத பல இழப்புக்களை ஏற்படுத்தும்.

இலங்கையில் நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான கௌரவமாக தீர்வு ஒன்று எட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடரவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் நாம் கோரியுள்ளோம். இதனை எட்டுவதற்கு உங்களின் முழு ஆதரவு தொடர்வது அவசியம் என்று தங்களை வேண்டி நிற்கிறோம்.

இயன்ற விரைவில் தங்களைச் சந்திக்க எதிர்பார்த்திருக்கிறோம். அத்தகைய வாய்ப்பை எமக்கு வழங்குமாறு ஆர்வத்துடன் வேண்டுகிறோம்" - என்று குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### இந்தியா

மோடிக்கும் இடையே நல்லெண்ணத்தின் அடிப்படையில் சந்திப்பு இடம் பெற்றது. இதன்போது 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விளக்கமளித்துள் ளார்.

13ஆவது திருத்தம் என்பது இலங்கைக்குப் பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்று. அது தொடர்பில் பல்வேறு மட்டத்தில் பலவிதமான கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. 13ஐ நடைமுறைப்படுத்துமாறு ஐ.தே. கட்சியும் கூறுகின்றது. அப்படியானால், அக்கட்சியினர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வந்து கருத்துகளை முன்வைக்க வேண்டும். பல தரப்பினரும் கருத்துகளை முன்வைத்து பேச்சுமூலம் தீர்வொன்றைஎட்டுவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே சிறந்த இடம்.

எனவே, 13 குறித்து இந்தியா எவ் வாறான கருத்துகளை முன்வைத்தாலும் நாட்டு மக்களும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுமே இறுதி முடிவை எடுக்கவேண்டும். அதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இந்தியாவின் ஆலோசனைகளையும் இலங்கை பெறும். எனினும், 13 விடயத்தில் வெளியாரின் அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம்" - என்று அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற-சி)

### மொத்த தேசிய

மாவட்டத்தின் உற்பத்தி 20 ஆயிரத்து 890 மெற்றிக் தொன்னாகக் காணப்பட்டது. இது மொத்த உற்பத்தியில் 6.2 சதவீதமாகும்.

2011 ஆம் ஆண்டு மொத்த மீன்பிடி 385 ஆயிரத்து 270 மெற்றிக் தொன்னாகக் காணப்பட்ட போது யாழ்.மாவட்டத்தின் உற்பத்தி 25 ஆயிரத்து 670 மெற்றிக் தொன்னாகக் காணப்பட்டது. இது மொத்த உற்பத்தியில் 6.6 சதவீதமாகும்.

2012 ஆம் ஆண்டு மொத்த மீன்பிடி 417 ஆயிரத்து 220 மெற்றிக் தொன்னாக இருந்தபோது யாழ்.மாவட்டத்தின் உற்பத்தி 32 ஆயிரத்து 900 மெற்றிக் தொன்னாகக் காணப்பட்டது. இது மொத்த உற்பத்தியில் 7.8 சதவீதமாகும். 2013 ஆம் ஆண்டு மொத்த மீன்பிடி 590 ஆயிரத்து 900 மெற்றிக் தொன்னாக இருந்தது. யாழ். மாவட்டத்தின் உற்பத்தி 40 ஆயிரத்து 680 மெற்றிக் தொன்னாக இருந்தது. இது மொத்த உற்பத்தியில் 6.8 சதவீதமாகும்.

ஏனைய மாவட்டங்களின் மொத்த உற்பத்திக்கான பங்களிப்பு அதிகரித்துள்ள போதும் யாழ்.மாவட்டத்தின் உற்பத்தி அதிகரிப்பு வீதம் குறைவடைந்துள்ளது. கடந்த ஆண்டில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் யாழ்.மாவட்டம் கடுமையான பாதி ப்புக்களை எதிர்கொண்டமையே அதிகரிப்பு வீதம் குறைவடைந்தமைக்கான காரணமாகும் என்று கடற்தொழில் அமைப்புக்கள் கூறுகின்றன. (ற-5)

### மலேசியாவின்

ஏற்கனவே அகதி அந்தஸ்து வழங்கப் பட்டிருந்தது. ஒருவர் அரசிடம் தஞ்சம் கேட்டிருந்தார். ஆனால், அப்படிப்பட்டவர்களை இலங்கைக்கு அனுப்பியது தவறானது. இது ஐ.நா. சபையினு டைய விதிமுறைக்கும் எதிரானது.

இலங்கையில் அவர்களுக்குக் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் நிலையிலும் அவர்களை அனுப்பி இருப்பது தவறான நடைமுறை" - என்று கூறியுள்ளார்.

அதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம், சந்தேக நபர்களை நாடு கடத்தும் பணிகளை கால தாமதம் செய்யுமாறு மலேசிய அரசிடம் கோரியிருந்த போதும், புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு குறித்து மதிப்பீடு செய்ய சந்தர்ப்பம் அளிக்காது துரித கதியில் அவர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளது. மலேசிய அரசின் இந்த நடவடிக்கை வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளது. (ற)

### முல்லைத்தீவு

தது. அதன்பின்னர் இராணுவத்தின் தொண்டர் படையணிக்கு ஆள்களை சேர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

இந்நிலையிலேயே இராணுவத்தினர் குடும்பங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோர கிராமங்களிலுள்ள சகல வீடுகளுக்கும் செல்லும் இராணுவத்தினர் அங்குள்ள மக்களிடம் பல்வேறு கேள்விகளைக் கொடுத்து அவற்றுக்கான பதில்களைப் பெற்று பதிவு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் எண்ணிக்கை, தடுப்பிலிருந்து வந்தவர்கள் உள்ளனரா?, குடும்பத்தில் தற் போது உள்ளவர்கள் என்ன செய்கின்றனர்? வேறு மாவட்டங்களுக்குச் சென்று வசிப்பவர்களாயின் அவர்கள் எங்கு சென்று வசிக்கின்றனர் போன்ற பல்வேறு விவரங்களை இராணுவத்தினர் பதிவு செய்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தினரின் இந்தத் தீடீர் பதிவு நடவடிக்கை மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற-5)

### மோடி

மோடி பேச்சு நடத்தியிருந்தார். குறிப்பாக தமிழர் பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய பிரதமராக மோடி பதவியேற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரதமரைச் சந்திப்பதற்கும் கோரிக்கை விடுத்திருந்தது. அந்தச் சந்திப்பு விரைவில் அமைய வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்திருந்தது.

இருப்பினும் இந்தியப் பிரதமரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகச் சந்திப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட நரேந்திர மோடி தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஜூன் 4 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையில் இடம் பெறவுள்ளது. இதன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு சாத்தியமாகும் என்று அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. அதிலும் ஜூன் மாத இறுதிப் பகுதியிலேயே சந்திப்புக்கான வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தினூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கை புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் போதும் அதுகுறித்து அவர்களது பதில் இன்னமும் வழங்கப்படவில்லை. பெரும்பாலும் அவர்கள் அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் பயண ஒழுங்குகள் தொடர்பில் அறிவிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் சந்திப்பதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தி ருக்கும் நிலையில், அதுகுறித்தும் இன்னமும் பதில் வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது. (ற-5)

### ஐ.நாவின்

கான ஐக்கிய நாடுகள் ஆணையாளரின் மலேசிய அலுவலகத்தில் அகதிகள் அந்தஸ்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சின் உயரதிக ாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட மூவரில் இருவர் ஏற்கனவே அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர் எனவும் மூன்றாமவரின் விண்ணப்பம் பரிசீலனையில் இருந்ததாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதுகுறித்து அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்,

"மலேசியாவின் பயங்கரவாதத்துக்கு எதிரான பொலிஸ் பிரிவினரால் கீடந்த 15ஆம் திகதி இவர்கள் மூவரும் மலேசியாவின் வெவ்வேறு பகுதிகளில் கைதுசெய்யப்பட்டு 25ஆம் திகதி இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்கள் அகதிகள் அந்தஸ்து கோரி சமர்ப்பித்த விண்ணப்பங்கள் பற்றிய அபிப்பிராயத்தை ஐ.நா. செயலகம் இலங்கை அரசிடம் ஒருபோதும் கேட்கவில்லை. ஐ.நா. அமைப்பு தன்னிச்சையாகவே இவர்களுக்கு அகதிகள் அந்தஸ்தை வழங்கியிருப்பது சர்வதேச சட்டதிட்டங்களுக்கு முற்றிலும் முரணானது. இவ்வாறு ஐ.நா. தன்னிச்சையாக வழங்கியுள்ள அகதிகள் அந்தஸ்துடன் நூற்றுக் கணக்கான விடுதலைப்புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளில் சுதந்திரமாக வாழ்கிறார்கள்.

எனவே, ஐ.நா. தொடர்ந்தும் இவ்வாறு இரட்டை வேடம் போடாமல் விடுதலைப்புலி உறுப்பினர்களின் அகதிகள் அந்தஸ்துக்கான விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-சி)

### ஊடகவிய

அறிக்கையிலே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"முதலமைச்சரின் குறிப்பிட்ட அறிவிப்புத் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். முக்கிய சந்திப்புக்கள் இடம்பெறும் போது நேரில் சென்று செய்திகளை சுயமாகச் சேகரிப்பதன் மூலமாகவே முழுமையான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் என ஊடகவியலாளர்கள் கருதுகின்றார்கள். இதன் மூலமாகவே மக்களுக்கும் சரியான தகவல்களைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஏனைய மாகாண சபைகளுடன் ஒப்பிடும் போது வடக்கு மாகாண சபை வித்தியாசமானது. மத்திய அரசுடன் முரண்படும் ஒரு மாகாண சபையாக வடக்கு மாகாண சபையே இருக்கின்றது. தமிழ் மக்களின் அபிலாஷைகளின் வெளிப்பாடாகவே அது பார்க்கப்படுகின்றது. அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை அறிய மக்கள் ஆவலாக இருப்பது அதனால் தான். இந்த நிலையில்தான் வடக்கேயுள்ள ஊடகவியலாளர்கள் முதலமைச்சரை நாடி வருகின்றார்கள்.

இவற்றைக்கவனத்திற்கொண்டு முக்கியமான சந்திப்புக்கள், ஆலோசனைக் கூட்டங்கள் இடம்பெறும் சந் தர்ப்பங்களில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் ஊடகவியலாளர்களை நேரில் சந்திக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். போதிய இடவசதி இல்லை என்பதை மட்டும் இதற்கு ஒரு காரணமாகக் கூறாமல், முதலமைச்சர் தமது முடிவை மறுபரிசீலனை செய்து ஊடகவியலாளர்கள் சுயமாக செய்திகளைச் சேகரிக்க அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்"- என்று உள்ளது. (ற)

# 'மைலோ' வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது அராலி சரஸ்வதி



வெற்றி பெற்ற அணி

யாழ்ப்பாணம், மே 30
யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப்பிரிவு பெண்களுக்கான "மைலோ" கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று வியாழக்கிழமை கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 12:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியக்கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யூனியன் கல்லூரி அணி 15:1 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மே 30
யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்ட மைதானத்தில் இடம். பெற்று வருகின்றன.

இன்றுவெள்ளிக்கிழமை இடம் பெறும் ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(த-23)

* * *

யாழ்ப்பாணம், மே 30
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக இடம் பெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலை ஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5மணிக்குஇடம் பெறும் ஆட்டத்தில் எல்லாளன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 30
தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் நாளை சனிக்கிழமை தும்பளை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பி.ப. 2.30 மணிக்கு இடம் பெறும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் 6 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து தும்பளை நாவலர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(த-23)

## 'நீலங்களின் சமர்' இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம் மே 30
'நீலங்களின் சமர்' என வர்ணிக்கப்படும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணிக்கும் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணிக்கும் இடையிலான 5 ஆவது பெரும் துடுப்பாட்ட போட்டி இன்றும், நாளையும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயமைதானத்தில் இடம் பெறவுள்ளது.

துடுப்பாட்டப் போட்டியை தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை பழைய மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி இடம் பெறவுள்ளது.

இதில் 22 வயதுக்கு உட்பட்ட பழைய மாணவர்களுக்கு இடையிலான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து கிரிக்கெட்போட்டியும் 25 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர்களுக்கு இடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும் இடம் பெறவுள்ளன.' (த-23)

## ஆலடி சிந்து வெற்றி

யாழ்ப்பாணம் மே 30
யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள்இடம்பெற்றுவருகின்றன.

இதில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 9:5 என்ற வித்தியாசத்தில் ப்ழங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (த-23)



தேசிய விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் உள்ள சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்குபற்றிய சைக்கிள் ஓட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது. இந்தப் போட்டியை பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே மற்றும் திருகோணமலை அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரீ.ரீ ஆர் சில்வா, திருகோணமலை நகரசபை தலைவர் க.செல்வராஜா ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (த)

## மாகாணக் கிரிக்கெட்டில் மோதும் பாடசாலைகள்

வலி.வடக்கு, மே 30
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வவுனியா நகரசபை மைதானம் மற்றும் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் மோதவுள்ள ஆண்கள் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

தலைமன்னார் பியர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் வவுனியா இந்துக் கல்லூரி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் மாங்குளம் மகா வித்தியாலயம்.

பளை மத்திய கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி.

முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயம் எதிர் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி எதிர் கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

மன்னார் காக்கையன்குளம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி எதிர் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து வவுனியா விபுலானந்தாக் கல்லூரி மோதவுள்ளது.

இதேவேளை,
இப்போட்டியில் மோதவுள்ள பெண்கள் அணியின் விவரங்கள் வருமாறு:-

முல்லைத்தீவு பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயம்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு கூழாமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை எதிர் கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம்.

வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் மகாவித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு தெட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

கிளிநொச்சி ஜெயபுரம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்.

மன்னார் சென்.ஜோசப் வாஸ் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மோதவுள்ளது.(த-86)

## இறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மே 30
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை அச்சு வேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெறவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.30 மணிக்கு இடம் பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்த இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கரப்பந்தாட்ட போட்டிகள்



யாழ்ப்பாணம், மே 30
தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'ஓவர் கேம்' கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள், இறுதியாட்டம் ஆகியவை நாளை சனிக்கிழமை தும்பளை நாவலர் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெறவுள்ளன.

இரவு 7மணிக்கு இடம் பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் தீபாஜோதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துர்க்கா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரண்டாவது அரையிறு தியாட்டத்தில் மாதனை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. அரையிறுதி யாட்டத்தில் வெற்றி பெறும் அணிகள் இரவு 9 மணிக்கு இடம் பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (த-23)

## மாகாண கராத்தே போட்டிகள்

வலி. வடக்கு, மே 30
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணி களுக்கு இடையே நடத்தப் படும் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான கராத்தே போட்டிகள் நாளை சனி, மறு தினம் ஞாயிறு தினங்களில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி இரண்டு கட்டங்களாக நடை பெறுகின்றன. ஒரு பிரிவில் காட்டா குமித்தே எனவும் மற்றொரு பிரிவில தனித்துக் காட்டா எனவும் நடைபெறவுள்ளது. (த-86)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பபாணம், மே 30
தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு தும்பளை நாவலர் விளையாட்டுக்கழக மைதான முன்றிலில் ஆரம்பமாகின்றது எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# 3 ஆம் நிலை வீராங்கனையின் முன்னேற்றம்


ரட்வன்ஸ்கா

பிரெஞ்சு ஓபன் ரென்னிஸ் போட்டி பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. 3ஆம் நிலை வீராங்கனையான ரட்வன்ஸ்கா (போலந்து) 6-3, 6-4 என்ற நேர் செற் கணக்கில் கரோலினாவை வீழ்த்தி 3 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.
இதேபோல ஷரபோவா (ரஷ்யா), கெர்பர் (ஜேர்மனி) சமந்தா (ஆஸ்திரேலியா), லிசிக்சி (ஜேர்மனி), ஆகியோரும் முன்னேறினார்கள்.
6 ஆம் நிலை வீரரான தோமஸ் பெர்டிச் (செக் குடியரசு) 67 (47), 64, 75, 63 என்ற கணக்கில் கஜகஸ்தான் வீரர் அலெக்சாண்டரை வீழ்த்தி 4 ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.
மற்றைய ஆட்டங்களில் 2 ஆம் நிலை வீரர் ஜோகோவிச், ரோஜர் பெடரர், சோங்கா, றொபர்ட்டோ ஆகியோரும் வெற்றி பெற்று முன்னேறியுள்ளனர். (த)



# பங்களாதேஷ் தொடருக்கான இந்தியாவின் இளம் அணி

பங்களாதேஷ் அணியுடன் 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாட இந்திய அணி ஜூன் மாதத்தில் அங்கு செல்லவுள்ளது. இதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
முக்கிய சிரேஷ்ட வீரர்கள் டோனி, விராட் ஹோலி, ரவிச்சந்திரன் அஷ்வின், ஷிகார் தவான், புவனேஸ்வர் குமார், ரோஹித் ஷர்மா, மொஹமட் சமி, ரவீந்தர் ஜடேஜா ஆகிய வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாகப் பிரகாசித்துள்ள ரொபின் உத்தப்பா அணியில் இணைக்கப்பட்டுள்ளார். புதிய இளைய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை டோனி இல்லாத நேரங்களில் அணியில் இலக்குக் காப்பாளராக சேர்த்துக் கொள்ளப்படும் தினேஷ் கார்த்திக்கும் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அணியின் தலைவர், உப தலைவர் ஆகியோர் இல்லாத் நிலையில் இந்த அணிக்கு சுரேஷ் ரெய்னா அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.இதேவேளை யுவராஜ் சிங்கும் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. அணி விபரம் சுரேஷ் ரெய்னா, ரொபின் உத்தப்பா, அஜிங்கையா ரெஹானே, செட்டேஸ்வர் புஜாரா, அம்பாத்தி ராயுடு, மனோஜ் திவாரி, கெடார் யாதவ், ரிதிமன் சஹா, பர்வேஷ் ரசூல், அக்சார் பட்டேல், வினை குமார், உமேஷ் யாதவ், ஸ்டுவோர்ட் பின்னி, மோஹித் ஷர்மா, அமித் மிஸ்ரா. (த)

# கூகுளைக் கலக்கிய டோனி, மக்ஸ்வெல்

ஐ.பி.எல். 7ஆவது தொடரில் இணையத் தேடலில் அதிகம் தேடப்பட்ட வீரர்களாக டோனி, மக்ஸ்வெல் திகழ்கின்றனர்.
சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக உள்ள டோனிக்கு ரசிகர்கள் எப்போதும் அதிகம். அதே நேரத்தில் இந்த ஐ.பி.எல். தொடரில் மக்ஸ்வெல் ரசிகர்களின் அதிரடி ஹீரோவாக உள்ளார்.
இந்தக் காரணங்களால் கூகுள் தேடலில் அதிகம் தேடப்பட்ட வீரர்களாக இவர்கள் விளங்குகின்றனர்.
டோனி, மக்ஸ்வெல் தவிர அதிகம் தேடப்பட்ட வீரர்கள் பட்டியலில் யுவராஜ்சிங், டிவில்லியர்ஸ், கம்பீர், ரோகித் ஷர்மா, டேல் ஸ்ரெய்ன், றொபின் ஊத்தப்பா, ரவீந்தர் ஜடேஜா, யூசுப் பதான் ஆகியோர் உள்ளனர். கூகுளில் அதிகம் தேடப்பட்ட அணியாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி உள்ளது. இது தவிர, கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், மும்பை இந்தியன்ஸ் அணிகள் அதிகம் தேடப்பட்டுள்ளன. (த)

# இங்கிலாந்துக்கு செல்லும் இந்திய அணியில் கம்பீர்


கௌதம் கம்பீர்

இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 18 பேர் கொண்ட குழுவில் மீண்டும் கௌதம் கம்பீர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். உபாதைக்குட்பட்டுள்ள சகீர்கான் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. ராஜஸ்தானைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் பங்கஜ் சிங் இந்த அணியில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். மற்றைய வீரர்கள் நியூசிலாந்து தொடருக்காக சென்ற வீரர்களே அணியில் இணைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ் நீக்கப்பட்டு, வருண் ஆரோன் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.
ஜூலை மாதம் இங்கிலாந்து , இந்தியா அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் அடங்கிய டெஸ்ட் தொடர் ஆரம்பிக்கவுள்ளது. (த)







# பழி தீர்த்தது இங்கிலாந்து

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை அணி மிக மோசமான தோல்வியைச் சந்தித்துள்ளது. துடுப்பாட்டத்தில் மூன்றாவது குறைந்த ஓட்டங்களை இலங்கை அணி பெற்றுக் கொண்டது. இங்கிலாந்து அணி பெற்றுக் கொண்ட மிகப் பெரிய ஒருநாள் சர்வதேசப் போட்டி வெற்றி என்று இதனை வர்ணிக்க முடியும். இலங்கை அணி சந்தித்த மிக மோசமான ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தோல்வியும் இதுவே.
இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 24 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் குமார் சங்கக்கார கூடுதலான 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கிறிஸ் ஜோர்டான் 29 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், ஜேம்ஸ் அன்டர்சன், ஜேம்ஸ் ட்ரேட்வெல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.
தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இலங்கை அணி 2012 ஆம் ஆண்டு 43 ஓட்டங்களைப் பெற்றமையே அணியின் சார்பாகப் பெறப்பட்ட ஆகக் குறைந்த ஓட்டங்கள் ஆகும். அதற்கு முன் 55 ஓட்டங் களை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக 1986 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டது. இப்போட்டியில் பதிலுக்குத் துடுப்பாடிய இங்கிலாந்து அணி 12.1 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குகள் இழப்பு இன்றி 73 ஓட்டங்களைப் பெற்று வெற்றியடைந்தது. இதில் இயன் பெல் 41 ஓட்டங்களையும், அலிஸ்டயர் குக் 30 ஓட்டங்களையும் பெற்றனர். போட்டியின் நாயகனாக கிறிஸ் ஜோர்டான் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2:1 என்ற ரீதியில் முன்னிலை பெற்றுள்ளது. (த)



# சிறந்த பந்து வீச்சே வெற்றிக்கு காரணம்

மும்பை அணிக்கெதிரான ஆட்டத்தில் வெற்றி கிடைத்ததற்கு பந்து வீச்சாளர்களின் சிறந்த பந்து வீச்சே காரணம் என சென்னை அணித் தலைவர் டோனி கூறியுள்ளார்.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த தகுதிச் சுற்று ஆட்டத்தில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெய்லி தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. அடுத்த போட்டியின்சென்னை சுப்பர் கிங்ஸ் அணிமும்பை இந்தியன் அணியை தோற்கடித்தது.

இந்த வெற்றி குறித்து சென்னை அணியின் தலைவர் டோனி கூறுகையில், ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஏற்ற வகையில் இருந்தது மட்டுமல்லாமல் பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாகப் பந்து வீசியது பாராட்டுக்குரியதாகும். மேலும் பிடிகளைத் தவறவிட்டால் ஆட்டத்தின் போக்கு மாறிவிடும். ஆனால் அண்டர்சன் அடித்த பந்தை ஈஷ்வா பாண்டே அபாரமாக பிடி எடுத்தார். இதற்கு அஸ்வினின் சிறப்பான பந்து வீச்சே காரணம்.

அனுபவம் வாய்ந்த வீரர்களான ரெய்னாவும், ஹஸியும் களத்தில் இருக்கும் போது நான் எந்தவித பதற்றமும் அடையவில்லை. எங்கள் அணியில் சிறந்த தொடக்க வீரர்கள் இருப்பதால் 174 ஓட்ட இலக்கை எடுத்துவிட முடியும் எனக் கருதினேன் என்று கூறியுள்ளார். (த)



# மீண்டும் தலைவரான சச்சின்

ஷேன் வோர்ன் தலைமையிலான ரெஸ்ட் ஒப் வேர்ல்ட் அணிக்கெதிராகச் சச்சின் தலைமையிலான எம்.சி.சி. அணி மோதவுள்ளது.

200ஆவது போட்டியை முன்னிட்டு எம்.சி.சி. எனப்படும் மெர்லிபேன் கிரிக்கெட் அணியின் தலைவராகியுள்ளார் சச்சின். இந்தப் போட்டி யூலை 5ஆம் திகதி லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்தப் போட்டியில் சச்சின் அணித் தலைவராக உள்ள அணியில் பிரையன் லாரா, ராகுல் டிராவிட் உள்ளிட்ட பெரும் வீரர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் தவிர பாகிஸ்தானின் சயீத் அஜ்மல், மேற்கு இந்தியத் தீவுகளின் ஷிவ்நரைன், சந்தர்போல் ஆகியோரும் இதில் இடம் பெற்றுள்ளனர்.

இந்திய வீரர்கள் ஷேவாக், யுவராஜ் சிங் ஆகியோர், ஷேன் வோர்ன் தலைமையிலான ரெஸ்ட் ஒப் வேர்ல்ட் அணியில் இடம் பெறுகின்றனர்.

எம்.சி.சி அணி வீரர்கள்:

சச்சின், சயீத் அஜ்மல், சந்தர்போல், டிராவிட், ஆரோன் பின்ச், உமர் குல், பிரையன் லாரா, பிரெட் லீ, கிறிஸ் ரீட், ஷோன் டெய்ட், டானியல் வெற்றோரி.

**ரெட்ஸ் ஒப் வேர்ல்ட் அணி:**

ஷேன் வோர்ன், சயிட் அப்ரிடி, டினோ பெஸ்ட், போல் கொலிங்வுட், ஆடம் கில்கிறிஸ்ட், தமீம் இக்பால், முத்தையா முரளிதரன், கெவின் பீற்றர்சன், ஷேவாக், பீற்றர் சிடில், யுவராஜ் சிங். (த)



# கோஹ்லியின் சாதனை முறியடித்தார் உத்தப்பா

ஐ.பி.எல். போட்டியில் ஒரு தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமை பெற்ற கோஹ்லியின் சாதனையை உத்தப்பா முறியடித்துள்ளார்.

ஐ.பி.எல். 7ஆவது தொடரில் கொல்கத்தா அணியின் வீரர் உத்தப்பா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். மேலும் இந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் பெற்ற வீரருக்கான ஓரேஞ் நிற தொப்பி யையும் தன் வசம் வைத்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் இவர் அதிரடி யாக ஆடி 42 ஓட்டங்கள் குவித்தார். இதன் மூலம் இந்த ஐ.பி.எல். தொடரில் உத்தப்பா 655 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இதற்கு முன்பு கடந்த ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோஹ்லி 634 ஓட்டங்கள் எடுத்ததே அதிக பட்சமாக இருந்தது. ஆனால் இந்த ஐ.பி.எல். தொடரில் அவரின் சாதனையை உத்தப்பா முறியடித்துள்ளார். (த)

அரசியல்
N. பாபு
A/L 2016
ஆரம்பம்
சனி 9am
A/L 2015
சனி, ஞாயிறு 7am
A/L 2014
துரித மீட்டல்
சனி, ஞாயிறு 8am
நவிவேர் சுவிகந்தர்மடம்
(48546) (7.6.3)

கருத்தரங்குகள்
யூன் 29ஆம் திகதி நடைபெற உள்ள
அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கான
கணினி மற்றும் விணைத்திறன்காண் பரீட்சைக்கு
சனி, ஞாயிறு 10.00 மணி
கங்கத்திணைக்கள பதவிகளுக்கானது
சனி, ஞாயிறு 1.00 மணிக்கு
T.P:075 4164564
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(C14932) (10.6.3)



அடிப்படை
ஆங்கிலம்
அடிப்படை ஆங்கில அறிவில்லாதவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க எளிமையாக உரையாட விரும்புவோர் வயதுவேறுபாடின்றி இணையமுடியும்.
பயிற்சிநெறி ஆரம்பம் - 02.06.2014 திங்கள்
பிரிவு 1 : காலை 08.00-09.00 பிரிவு 2 : மு.ப 11.00-12.00
பிரிவு 3 : பி.ப 03.00-04.00 பிரிவு 4 : மாலை 04.00-05.00
வாரத்தில் 3 நாட்கள் பயிற்சி இடம்பெறும்.
Note:- ஒரு பிரிவில் 16 பேர் மட்டும். பயிற்சியில் இணையும் அனைவருக்கும் புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்.
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
Excellent Teacher's Panel & Individual Attention.
Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Batch 1 :30.05.2014
Batch 2 :02.06.2014
Batch 3 :04.06.2014
Batch 4 :07.06.2014
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்
(C14193)(7.6.3)

NALIN Information Technologies (Pvt) Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
விசேட விலைகளில் 4ஆம் தலைமுறைக் கணினிகள் மற்றும் மடிக் கணினிகள் !
Warranty: 1 - 3 years
Service 2 years
Accemple Pc
Dual Core 4th Gen
81 Intel Chip Motherboard
2 GB DDR3 (HP ram)
500 GB (Western Digital)
DVD Writer (Liteon)
19" Monitor (HP LED)
ATX Casing (R.Logic)
Key b & Mouse
Speaker & H.Phone free
UPS 650w (Power III)
Card Reader
48 800/=
Free 8 Gb Pendrive
Branded PC
HP prodesk 400 G1
(3 years Warranty)
i3 4th Gen / 81 Intel Chip /
2 GB DDR3 / 500 GB /
DVD Writer / 19" Monitor /
Key.b & Mouse /
2 USB 3.0 / 6 USB 2.0 /
2 PS/2 / 1 VGA / 1 DVI-D /
1 microphone/headphone jack
1 audio line in/out / 1 RJ-45
69 800/=
Lap Top
HP 15 - d016 Tu Dualcore (4th)
4th Gen/ 500 Gb/ 2Gb/ 15.6
53 800/=
HP Pavilion 15 - 4010U 4th Gen
i3- 4010U 4th Gen pro / 500 Gb/ 4Gb/ 15.6
66 500/=
Dell i3 Lap Top 62 800/=
HP i5 Lap Top 75 000/=
Bag, Headphone, Mouse free, 8 Gb Pendrive, Antivirus
விசேட விலைகளில் !
HSPA Dongle 3G (ZTE / Huwavi) - 2350/=
HSPA Dongle 4G (STC / Huwavi) - 4900/=
External HDD - imation (1Tb) 10500/=
WD 11500/=,
Pen drive (4Gb- 600/=, 8 Gb 800/=)
16 Gb 1400/=, 32 Gb 3200/=,
64 Gb 4200/=
Micro SD 2Gb 350/=, 4 Gb 600/=
8 Gb 1100/=
Powerlogic Casing 3500/=
HP LED monitor 18.5" 11900/=
AsRock Motherboard 7500/=
DDR2 / DDR3 Motherboard 9800/=
Power III UPS 4150/=
* Condition Apply
No. 195/4, Parameswara Junction, Palaly Road.
021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it
Branch: No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2222 077 714 0431

UK ஆங்கிலப் பாடநெறிகள்
ADVANCE LEARNING ENGLISH
CAMBRIDGE ENGLISH
சிறுவர் முதல் பெரியோர் வரை வெவ்வேறான பாடநெறிகள்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் அடிப்படையில் இருந்து கற்கலாம்.
ஒக்ஸ்போட் பல்கலைக்கழக ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சை இலவசமாக.
பிரிவொன்றில் 07 மாணவர்கள் மட்டுமே. மல்ரி மீடியா வசதியுள்ள வகுப்பறை.
பாடஅலகு ஒன்று இலவசமாகக் கற்கலாம்.
ALISON DIGILITE
51/3, (பொற்பதிப் பிள்ளையார் கோவிலருகில்) பொற்பதி வீதி, கொக்குவில். 0779866409

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.